தரமான உதிரிப்பாகங்களைக் கொண்டு தயாரிக்கப்படும்

நியூரோன் பம்புகளை வாங்குங்கள்

வார முரசொலி
VARAMURASOLI

Pump With Standard Accessories

Select Newtone - Pumps

முரசு 3 ஒலி 152 ஞாயிற்றுக்கிழமை 11 - 06 - 1989 (வைகாசி 29) துல் ஹஃதா 06 விலை ரூபா நான்கு

# 5 புதிய ஸ்ரீலங்கா படைப்பிரிவு
# வடகிழக்கில் அமைக்க முயற்சி

## இனவிகிதாசாரப்படி ஆட்சேர்ப்பு
## தெற்கிலிருந்து படை இடம்பெயரும்

**வடக்கு கிழக்கின் பாதுகாப்புக்கென அரசு ஐந்து இலங்கைப் படைப்பிரிவுகளை உருவாக்க தீர்மானித்துள்ளதாக பாதுகாப்பு இணையமைச்சர் தெரிவித்துள்ளார்.**

இவ்வித படைப்பிரிவுகளை உருவாக்குவது ஒரு நீண்ட காலத் திட்டமாகும் என்றும் பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண தெரிவித்தார்.

இன விகிதாசார முறைப்படியே இந்த ஐந்து படைப்பிரிவுகளுக்கும் ஆட்சேர்ப்பு இடம்பெறும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்திய அமைதிகாக்கும் படையினர் விலக்கிக் கொள்ளப்பட்டால் வடக்கு கிழக்கு மக்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இலங்கை படையினரே ஈடுபடுத்தப்படுவர்.

நாட்டில் ஏனைய பகுதிகளில்
→ 16ஆம் பக்கம் பார்க்க

### 'போடியூர் ஒரு மோசடி'
## 'புதிசு' என்ற பெயரில் 'பழசு' ஒன்று அனுப்பிவைப்பு

புதிய வாகனமொன்றுக்குப் பதிலாக பழைய வாகனமொன்று இங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள 'மோசடி'யொன்று தற்பொழுது அம்பலத்திற்கு வந்துள்ளது. யாழ் தாதிகள் பயிற்சிப்பாடசாலையின் உபயோகத்திற்கென வெளிநாட்டிலிருந்து அன்பளிப்பாக பெறப்பட்ட வாகனங்களிலொன்றை — 16ஆம் பக்கம் பார்க்க

### பாராளுமன்றத்தில் தினேஸ் பேச்சு:
## இலக்கம் இல்லாத வாகனங்களில் மாணவர் கடத்தப்படுகின்றனர்

பல்கலைக்கழக மாணவர்கள் வேட்டையாடப்படுவது உடனே நிறுத்தப்பட வேண்டும். வீதியில் அவர்கள் நடந்து செல்லசுதந்திரம் இல்லையா?

இவ்வாறு பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் பேசிய மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. தினேஷ்குணவர்த்தன கூறினார். தொடர்ந்து பேசிய அவர் பல்கலைக்கழக மாணவர்கள் சம்பந்தமாக அரசு அளித்த வாக்குறுதிகள்
→ 16ஆம் பக்கம் பார்க்க

## சுட்டுக்கொலை

(பருத்தித்துறை)

மந்திகை அரசினர்வைத்திய சாலைச்சந்தியில் இளைஞரொருவர் நேற்றுக் காலை இனந்தெரியாத இளைஞர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சந்தியில் உள்ள மோட்டார்
→ 16ஆம் பக்கம் பார்க்க

## மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய கோரிக்கை

மாணவர்கள் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும், கொல்லப்படுவதும் எமது பிரதேசத்தில் அதிகரித்து வருகிறது

இச் செயல்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர கல்வியுடன் சம்பந்தப்பட்ட நிர்வாகிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், புத்திஜீவிகள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்'' என்ற கோரிக்கை மாணவர்களால்
— 16ஆம் பக்கம் பார்க்க

### வெலிஓயாவில் சம்பவம்
## ஸ்ரீலங்கா இராணுவம் மீது தமிழ் தீவிரவாதிகள் தாக்குதல்

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் வெலிஓயாவில் வைத்து தமிழ் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டதாக இராணுவ தலைமையலுவலகம் அறிவித்தது.

இராணுவத்தினர் ரோந்து சென்று கொண்டிருந்தபோது இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெலிஓயாவில் சிங்கள குடியேற்றத்துக்கு இலங்கை இராணுவம் பாதுகாப்பு அளித்துவருவதும் தெரிந்ததே.

### 300 தமிழ் ஊழியர் உள்ளபோதும்
## திருமலை கடற்படை அலுவலகம் சிங்களத்திலேயே இயங்குகிறது

திருகோணமலையில் உள்ள ஸ்ரீலங்கா கடற்படை அலுவலகத்தில் தமிழ் ஊழியர்களும் சிங்களத்திலேயே பணிபுரிய வேண்டியுள்ளது.

இங்குள்ள சிவில் பகுதியில் சுமார் முந்நூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் பணியாற்றியும் சிங்கள மொழியிலேயே கருமங்களை மேற்கொண்டு வருகிறார்கள்.

அரசாங்கம் தமிழை அரசகரும மொழியாக்கியும் இங்கு இது இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

### சாதாரண தர புதிய பாடத்திட்டத்தின் கீழ்
## க. பொ. த. உயர்தர வகுப்பிற்கு அனுமதி பெற தகுதிபெற்றோர்

புதிய பாடத்திட்டத்தின் கீழ் 1988ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றியோர் உயர்தர வகுப்பில் கற்பதற்கு பெறவேண்டிய ஆகக்குறைந்த தகுதிகள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றிய ஒருவர் பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஆறு
—16ஆம் பக்கம் பார்க்க

## தீவிரவாதி என்ற சந்தேகத்தில் தமிழர் மாத்தளையில் கைது

தமிழ் இளைஞர்ஒருவர் தீவிரவாதி என்ற சந்தேகத்தின் பேரில் மாத்தளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் இடம் பெற்ற கண்ணிவெடிச்சம்பவம் தொடர்பாகவேகைதுசெய்யப்பட்டார்.

மாத்தளையில் இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தில் இலங்கை இராணுவவீரர் மூவர் கொல்லப்பட்டனர்.

### யாழ். தாதிகள் பயிற்சி பாடசாலையில்
## விரிவுரையாளர் பற்றுக்குறை ஒருவர் மட்டுமே உள்ளார்

யாழ். தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் விரிவுரையாளர் பற்றுக்குறை தற்பொழுது மேலும் மோசமான நிலையை அடைந்துள்ளது.

இப்பாடசாலையில் ஏற்கனவே பல விரிவுரையாளர் பதவிகள்நிரப்பப்படாமல்வெற்றிடமாயிருந்து வந்தன. இந்த நிலையில் இங்கு கடமைபுரிந்து வந்த மற்றுமொரு விரிவுரையாளர் மேற்படிப்பை தொடர்வதற்காக கடமை விடுமுறையில் இந்தியா சென்றுள்ளார்.

தற்பொழுது ஒரேயொரு விரிவுரையாளர் மட்டுமே இங்கு கடமையிலுள்ளார். ஆறு விரிவுரையாளர் பதவிகள் வெற்றிடங்களாயுள்ளன.

சுமார் நூற்றிஇருபது மாணவர்கள் யாழ். தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் தற்
→ 16ஆம் பக்கம் பார்க்க

## தபாலில் யாழ். வரும் பார்சல்கள் கையாடல்

(நமது நிருபர் எஸ். சி. ஆர்.)

வெளிநாடுகளிலிருந்து வடபகுதியில் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் பார்சல்கள் கொழும்பு பிரதம தபால் நிலையத்தில்வைத்து கையாடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வெளிநாடுகளில் உள்ள பலர் வடபகுதியில் உள்ள தமது உறவினர்களுக்கென அனுப்பிவைத்த பல பார்சல்கள் இதுவரை உரியவர்களை சென்றடையவில்லையாம். மற்றும் சில வெளிநாட்டு பார்சல்கள் கொழும்பு பிரதம தபால் நிலையத்தில் வைத்து உடைக்கப்பட்டு அவற்றிலிருந்த பெறுமதிமிக்க பொருட்கள் கையாடப்பட்டு, மிகுதி பொருட்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாம்.

"சோதனை" என்ற பெயரில் இடம்பெறும் இந்த கையாடல் பிரதம தபால் நிலையத்தில் இயங்கிவரும் கோஷ்டியொன்றினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அண்மையில் வடபகுதியை சேர்ந்த ஒருவர் வெளிநாட்டிலிருந்து உறவினர் ஒருவருக்கு அனுப்பிய பார்சல் ஒன்றை பெறுவதற்காக கொழும்பு பிரதம தபால்நிலையத்திற்கு சென்றிருந்தார். அங்கு உடைக்கப்பட்ட நிலையிலிருந்த பார்சல் ஒன்று அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதில் பல பொருட்கள் கையாடப் → 16 ஆம் பக்கம் பார்க்க

## வானொலியில்..

கடந்த மாதம் 19-ம்,20-ம், திகதிகளில் நடைபெற்ற புங்குடுதீவு புனித சவேரியார் ஆலயவருடாந்த உற்சவத்தின் வேஸ்பர்ஸ்-திருப்பலி ஆராதனைகளின் தொகுப்பு நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 30மணிக்கு இலங்கை வானொலித் தமிழ்ச்சேவையில் ஒலிபரப்பாகும்.

இத்தொகுப்பு நிகழ்ச்சியை வ. அன்ரனிமரியதாஸ்தொகுத்து வழங்குகிறார். இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபன தயாரிப்பாளர் திரு அன்ரனி இராசையா தயாரித்தளிக்கிறார்.

## நடேஸ்வரா கல்லூரி மூலாதாரக் கல்லூரியாக
# காங்கேசன்துறை கோத்தணி புதிய கோத்தணி பிரிவானது

(யாழ்ப்பாணம்)

புதிதாக கோத்தணிப் பிரிவாக கல்வித்திணைக்களத்தால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள காங்கேசன்துறை கோத்தணியின், கோத்தணி அதிபராக திரு. க. இராசதுரை நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இக் கோத்தணியின் மூலாதாரப் பாடசாலையான நடேஸ்வராக் கல்லூரி அதிபராவார். இவர் இதற்கு முன்னர் யாழ் கட்டுவன்புலம் மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றியவர்.

## 50 ஓவர் கிரிக்கெட்

யாழ். பல்கலைக்கழக கிரிக்கெட் கோஷ்டிக்கும் சென்றலைட்ஸ் கிரிக்கெட் கோஷ்டிக்கும் இடையில் 50 ஓவர் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டி இன்று யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் காலை நடைபெறும்.

# உதைபந்தாட்டப் போட்டி இடைநடுவில் நிறுத்தப்பட்டது

(விளையாட்டுத்துறை நிருபர்)

குருநகர் புனித சூசையப்பர் விளையாட்டுக் கழகம் பாடுமீன் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தும், தாயஒளி பரிசுக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதி ஆட்டம், நேற்று முன்தினம் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து யாழ். முஸ்லிம் கழக அணி ஆடியது.

ஆட்டம் பி. ப. 4-38க்கு ஆரம்பமானது. 4-50க்கு முஸ்லிம் அணி வீரர் சே. எம். சித்திக் முதலாவது கோலைப் போட்டார். அரை இடைவேளை வரை ஒன்றுக்கு பூச்சியம் என்ற நிலையே இருந்தது.

அரை இடைவேளையின் பின் 10 ஆவது நிமிடத்தில் முஸ்லிம் வீரர் எம் ஏ சி. அஜீத் இரண்டாவது கோலைப் போட்டார். 12-வது நிமிடத்தில் 'பவுல்' விளையாடியதினால் நடுவர், சென். நீக்கிலஸ் அணி வீரர் ஒருவரை மைதானத்தை விட்டு வெளியேற்றினார் 13-வது நிமிடத்தில் முஸ்லிம் அணி வீரர் எம். யே சபீர் மூன்றாவது கோலைப் போட்டார்.

அதன்பின் வீரர்கள் மத்தியில் பதற்றநிலை ஏற்பட்டது. முறைதவறிய ஆட்டங்கள் அதிகரிக்கவே 5-30க்கு (ஆட்டம் முடிவதற்கு 18 நிமிடங்கள் மாத்திரம் இருக்கையில்) நடுவர் ஆட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தினார். ஐந்து நிமிடங்களின் பின் நடுவர் அணித்தலைவர்களுடன் கலந்துரையாடி ஆட்டத்தை மீண்டும் தொடக்க எடுத்த முயற்சி பயன் அளிக்காமல் போகவே ஆட்டம் நிறுத்தப்பட்டதாக நடுவர் அறிவித்தார்.

நடுவராக திரு ஏ. தேவராசாவும் உதவி நடுவர்களாக பி. ஆர். தம்பிநாயகம், எஸ். விமலதாஸ் ஆகியோர் கடமை புரிந்தார்கள்.

## பொதுக்கூட்டம்

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின்சமாசவருடாந்த பொதுக்கூட்டம்யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று காலை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் உரை, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உரை. மாநகர ஆணையாளர் உரை என்பவற்றுடன் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும்.


பிரயாண அன்பர்களுக்கு எமது ஸ்தாபனத்தார் வழங்கும் மகிழ்ச்சிகரமான

**பிரயாண ஒழுங்குகள்**

★ கனடா ★ ஜேர்மன்
★ பிரான்ஸ் ★ இத்தாலி
★ சுவிஸ் ★ ஹொலன்ட்

ஆகிய நாடுகளுக்கும்

★ ஹொலன்ட் ★
றைவேஸ் மெக்கானிக்ஸ

★ சவுதி அரேபியா ★
கிளினேஸ் கவுஸ் றைவேஸ்
எழுதுவினைஞர் விற்பனையாளர்

★ சிங்கப்பூர் ★
பணிப்பெண்கள் உடன் தேவை

எமது அடுத்த ஜேர்மன் குழு 15.6.89 இல் புறப்பட இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்

இவை அனைத்திற்கும் உங்கள் பயண அமைப்பாளர்

**M. P. LINGAMS**

764, Hospital Road, Jaffna.

(எமது அலுவலகத்தில் கொடுக்கும் பாஸ்போட், பணம் ஆகியவற்றிற்கு மட்டுமே நாம் பொறுப்பாளிகள்)

06087



பிரயாணம்... பிரயாணம்... பிரயாணம்...

**'M' Three Travel**

வழங்கும்

★ குவைத் பிரயாணம்

| | | |
|---|---|---|
| Crane Operators (கிறேன் ஒப்பறேற்றர்) | 30 வெற்றிடங்கள் | 60 K.D |
| Heavy Equipment Operators (கனரக இயந்திர இயக்குநர்) | 35 ,, | 60 ,, |
| Dump Truck Drivers (டம் ட்றக் சாரதி) | 35 ,, | 60 ,, |
| Helpers (உதவியாளர்கள்) | 15 ,, | 30 ,, |
| Labourers (வேலையாட்கள்) | 120 ,, | 30 ,, |

PASS PORT, BOND என்பன குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

**'M' Three Travel**

தலைமை அலுவலகம்: இந்திரபவனம், சோதி வீதி, காங்கேசன்துறை.

கிளை அலுவலகம்: இல. 1, 2-வது ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

06105



**சிறு விளம்பரம்**

**விற்பனைக்கு**
இறக்குமதியாக இருக்கும் (Holland - ORUK) விதை உருளைக்கிழங்கு தேவைப்படுவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 06098

**தேவை**
கம்பியூட்டர் (Computer) உடன் தேவை (Basic) செய்ய கூடியது(Computer Key Board) எழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 271, மே./பா. முரசொலி, யாழ்ப்பாணம். 06107

**தேவை**
பரிசாதகர் 5, Cooks 3, வேலை பழக விரும்புவர் 4, ரூம் பரிசாதகர் 4, தொடர்பு காருண்யா குருப், பலாலி வீதி, கிறில் இன், திருநெல்வேலி. 06091

**சேவை**
நவீன ரூம் வசதிகள், விதம் விதமான உணவு வகைகள், Hot and Cool Drinks நாட வேண்டிய முகவரி: கலக்ஸி சைனீஸ் பீச்ரூம், கீரிமலைவீதி, காங்கேசன்துறை (இலங்கை வங்கி அருகாமை) 06119

**விற்பனைக்கு**
பூரண விளைதிறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு Country of Origin Holland பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 06112



வர்த்தகவிளம்பர ஓவியங்கள், உருவப்படங்கள், புளொக்ஸ் ஸ்ரிக்கர் என்பன செய்துகொள்ள

'லங்கா' கொமேர்ஷல் ஆட்டிஸ்ற்
108/1, ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்



A/L MATHS
ஆசிரியர்:
ரவிமோகன்
யாழ்ப்பாணம்
[பெருமாள்கோவிலடி]



**Professional Exams**

Nov - Dec 1989

| | |
|---|---|
| CIMA | Stage - 1 |
| IDPM | Part - 1 |
| IAB | All Stages |

Commencement: 10. 06. 89

விரிவுரையாளர்கள்:
ஜெயரட்ணம், கதிர்காமநாதன், நவரேந்திரன், புஷ்பா, சிவபாதசுந்தரம், தவரட்ணசிங்கம்.

கடந்தகால பரீட்சைகளில் எமது மாணவர்களில் 80% சித்தி எய்தியிருக்கிறார்கள்.

**School of Business Administration**

16, 3rd Cross Street Jaffna

(OLR தேவாலயத்திற்கு மேற்குப்பக்கம்)

06121



**கொம்பியூட்டர் பயிற்சி**

Diploma in Data Processing & Computer Programming Course

புதிய பிரிவுகள்: 12. 06. 1989 (Mon-Fri)
(10. 06. 1989 (Sat-Sun)

BASIC — 2½ MONTHS — 10. 00 A.M — 11. 30 A.M

1st Payment Rs. 500/-

IBM, SUPER/XT, IBM COMPATIBLE, உட்பட பல நவீன கம்பியூட்டர்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

● மல்லாகம் கிளையிலும் சில பிரிவுகள் ஆரம்பமாகும்

**IDP Computer Centre**
342, K. K. S. Road
(சிவன் கோவில் அருகாமையில்)

Branch: 7th Mile Post, K. K. S. Road, Mallakam

06078




# ரி. வி. பார்ப்பதால் கண்கள் பாதிக்கப்படுகின்றனவா?

**பூரணன்**

இன்று தொலைக்காட்சி பார்ப்பது பெரும் பொழுதுபோக்காகி விட்டது. தொலைக்காட்சி மூலம் சினிமாப் படங்களைப் பார்க்க முடியும் என்பதால் வறுமையில் வாழ்பவர்கள் கூட தமது வருமானத்தில் ஒரு பகுதியை சேமித்து வைத்து தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்குகின்றார்கள்.

இதனால் வீட்டுக்கு வீடு வீடியோவையும் தொலைக்காட்சிப் பெட்டிகளையும் காண முடிகின்றது. சிலர் இவற்றை வைத்திருப்பது கௌரவம் என நினைக்கின்றார்கள்.

வீடியோவாலும் தொலைக் காட்சியாலும் மாணவர்களின் கல்வி கெட்டுவிடுவதோடு உடல் நலமும் பாதிக்கப்படுகின்றது. இதன் தாக்கம் இப்போது புரியாது. காலப்போக்கில்தான் தெரிய வரும். இதனால் வருங்கால நாட்டின் முழு வளர்ச்சியுமே தடைப்படக் கூடிய அபாயம் உண்டு.

வீடியோ, தொலைக்காட்சிகளின் எண்ணிக்கை பெருகப் பெருக இதைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கையும் பெருகின்றது. இவற்றைப் பார்ப்வர்களுக்கு இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றித் தெரிவதில்லை.

## அருகில் இராதே

தொலைக்காட்சிப் பெட்டிக்கு அருகில் இருந்து படம் பாத்தால்தான் படம் தெளிவாகத் தெரியும் என்று கூறியவாறு அருகில் இருந்து பார்ப்பவர்களை நாம் தினமும் காண்கின்றோம். இவ்வாறு தொலைக்காட்சிப் பெட்டிக்கு அருகில் இருந்து படம் பார்க்கும் போது ஒளிக் கதிர்களின் பிரதிபலிப்பினால் கண்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது.

தொலைக்காட்சியை தொடர்ந்து பார்ப்பதால் தலைவலி ஏற்படுகின்றது. இத்தலைவலி நாட்கள் செல்ல கண்களையும் மூளையையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பாதிக்கத் தொடங்குகிறது இதனால் காலப்போக்கில் பெரும் பாதிப்பு ஏற்படும் என அமெரிக்க வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கின்றார்கள்.

மேலை நாடுகளில் தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் இருபத்து நான்கு மணிநேரமும் இயங்குகின்றன. பல சனல்களில் பல்வேறு விதமான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப் படுகின்றன. ஜப்பானில் மட்டும் ஒன்பதுக்கும் அதிகமான சனல்களில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன பல நாட்டு தொலைக்காட்சி ஒளிபரப்புக்களின் நிகழ்ச்சிகள் மக்களின் அறிவை விருத்தி செய்யக் கூடிய பயனுள்ள நிகழ்ச்சிகளாக அமைகின்றனவா என்றால் பெரும்பாலான நிகழ்ச்சிகள் அப்படி அமைவதில்லை என்றுதான் கூறவேண்டும்.

தொலைக் காட்சியை ஒரு பொழுதுபோக்குச் சாதனமாகப் பயன்படுத்தாமல் பயனுள்ள சாதனமாக மாற்றியமைக்க வேண்டியது முக்கியமானதாகும்.

## பார்க்கக் கூடாதவை

இப்பொழுது வீடியோக்களாலும் தொலைக்காட்சிகளாலும் மாணவர்கள் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளார்கள். பார்க்கக் கூடாத நிகழ்ச்சிகளையும் கேட்க்கக் கூடாத வார்த்தைகளையும் நடைமுறைவாழ்வில் கடைப்பிடிக்க அவர்கள் தூண்டப்படுகின்றனர்.

வீடியோக்கள் மூலம் பார்க்கும் படங்கள் படதணிக்கை சபையிரால் தணிக்கை செய்யப்படாதவை. இதனால் ஆபாசப்படங்களைப் பார்க்கக்கூடிய வாய்ப்புக்களை இந்த வீடியோக்கள் ஏற்படுத்துகின்றன.

இன்று இந்தியாவில் இருந்து வெளியாகும் தமிழ்ப்படங்கள் பல வியாபார நோக்கத்திலேயே தயாரிக்கப்படுகின்றன.

ஆபாச நடனக் காட்சிகள் கற்பழிப்புக் காடசிகள், படுக்கையறைக் காட்சிகள் கொண்ட மசாலாப் படங்களையே இன்று நாம் காணுகின்றோம். பழையதிரைப் படங்களைப் போன்ற கருத்து மிக்க சிறந்த படங்களைக் காண்பது அரிது

அன்றைய படங்கள் கருத்து மிக்கவையாக ஒவ்வொருவரும் பார்த்துப் பயனடைய வேண்டிய படங்களாக இருந்தன இதனால் அப் படங்கள் மாதக் கணக்கிலும் வருடக்கணக்கிலும் திரையரங்குகளில் ஒடி வெற்றிவாகை சூடின. அன்றைய சில படங்களைப் பார்ப்பதற்காக பாடசாலை மாணவர்களை ஆசிரியர்கள் திரையரங்குகளுக்கு அழைத்துச் சென்றதுமுண்டு.

ஆனால் இன்று வெளியாகும் படங்களைக் குடும்பத்துடன் சென்று பார்க்கவே முடியாத நிலையில் 'செக்ஸ்' கலந்த படங்களாக இருக்கின்றன. இதைப் பார்ப்பதால் என்ன பயன்? இப் படங்களைப்பார்ப்பவர்கள் தவறான வழிகளுக்கு திசை திருப்பப்படுகின்றார்கள். இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

திரைப்படங்களை வியாபார நோக்கத்திற்காக மட்டும் தயாரிக்காமல் பயன் மிக்க திரைப்படங்களை தயாரிப்பதில் தயாரிப்பாளர்கள் கவனத்தைச் செலுத்துவார்களேயானால் வருங்காலம் சந்ததியினரை நல்வழிகளில் செல்ல வழி வகுக்க முடியும்.

## பாதிப்பைப்பார்

தொலைக்காட்சி வீடியோ போன்ற சாதனங்களை தொடர்ந்து பார்ப்பதால் மூளையின் செயல்திறன் மந்தமடைந்து நாளடைவில் செயலற்றதாகி விடும் என அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழக மத்திய பகுதி ஆய்வுத்துறை டாக்டர் ஃரெட்எமர் எச்சரித்துள்ளார்.

தொலைக்காட்சியாலும் வீடியோவாலும் மூளையில் பாதிப்புக்கள் ஏற்படுகின்றனவா என அறிய அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர்கள் ஹெர்பர்ட் கிரிக்மேன் என்ற மன நோயியல் நிபுணர் ஒரு பரிசோதனை ஒன்றை நடத்தினார்.

ஒரு எலக்ரோடு தகடு ஒன்றை தமது இருபத்தி இரண்டு வயதுக் காரியதரிசியின் தலையில் பொருத்தி அதை மூளையின் செயற்பாட்டைக் காட்டும் கருவியுடன் பொருத்தி விட்டார். அதன் பின் தனது காரியதரிசியை அழகு சாதன விளம்பரப் படசுவரொட்டிகளைப் பார்க்கும்படி கூறினார். அவர் அதைப் பார்க்கும் போது மூளை துரிதமாகவும் சுறுசுறுப்பாகவும் செயற்பட்டதை அவதானித்தார்.

அதன்பின்னர் தமது காரிய தரிசியை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கும்படி செய்து அவதானித்தபோது மூளையின் திறன் திடீரெனக் குறைந்து அதன் செயல்கள் மந்தமானதை அவதானிக்க முடிந்தது.

இதிலிருந்து அவர் ஒரு முடிவிற்கு வந்தார். விளம்பரச் சுவரொட்டிகளைப் பார்க்கும் போது மூளை துரிதமாகவும் தொலைக்காட்சியைப் பார்க்கும் போது மூளை மந்தமாகவும் வீடியோவில் படம் பார்க்கும் போது மூளை மிக மிக மந்தமாகவும் இயங்குகின்றது என்ற திடுக்கிடும் உண்மையைக் கண்டுபிடித்தார்.

## மூளையைப் பாதிக்கும்

இதே போல் சினிமாப் படத்தை திரையில் தொலைக் காட்சியில் பார்க்கும்போதும் மூளையில் எவ்வகையான பாதிப்பு ஏற்படுகின்றது என அறிய சோதனை நடத்தப்பட்டது.

சினிமாத் திரையரங்குகளில் படம் பார்க்கும்போது மூளையில் ஏற்படும் பாதிப்பை விட தொலைக்காட்சியில் படம் பார்க்கும் போது மூளையில் ஏற்படும் பாதிப்பு மிக மிக அதிகம் என்று கண்டுபிடிகக்ப்பட்டது.

சினிமாத் திரை அரங்குகளில் படம் பார்க்கும் போது தொடர்ந்து பல ஒளிக் கதிர்கள் முழுப் படத்தின் பிம்பத்தையும் பிரதிபலிக்கின்றன. ஆனால் தொலைக்காட்சியில் படம் பார்க்கும் போது ஒரே ஒரு தனித்த ஒளிக் கதிர் மட்டுமே முழு அளவிற்கும் பிம்பத்தை ஏற்படுத்துகின்றது. இது தொடர்ந்து தொலைக் காட்சித் திரையில் ஒளிர்ந்து கொண்டிருப்பதால் மூளையின் செயலை மந்தமாக்குகின்றது என அமெரிக்க நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கின்றார்கள்.

தொலைக்காட்சியிலும் பார்க்க வீடியோ மூலம் படம் பார்ப்பதால் ஏற்படும்பாதிப்பு மிக மிக அதிகம். இதன் தாக்கம் காலப்போக்கில் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது சோதனைகளின் மூலம் அமெரிக்க வைத்திய நிபுணர்களால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது

## தொடரும் வேதனை

நோயாளியாக இருப்போர் தொலைக்காட்சி, வீடியோ பார்ப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும். உடல் நலமற்றவர்கள் இப் பழக்கத்தை நிறுத்தாவிட்டால் தொடர்ந்து நோயாளியாகவே இருந்து பல இன்னல்களை அனுபவிக்க நேரிடும். உடல் நலம் பெற வேண்டும் என நினைக்கின்ற ஒவ்வொருவரும் தொலைக் காட்சி, வீடியோ பார்ப்பதை நிறுத்திக்கொள்ள வேண்டும் அல்லது படிப்படியாகக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

தொலைக்காட்சிப் பெட்டி வைத்திருப்போர் தொலைக் காட்சியைப் பார்க்கும் போது மிக அருகில் இருந்து பார்க்கக் கூடாது சிறிய தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்திருப்போர் பத்து அல்லது பன்னிரண்டு அடி தூரத்திலும் பெரிய தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்திருப்போர் ஐந்து அல்லது ஆறு அடி தூரத்திலும் இடைவெளி விட்டு அமர்ந்து இநந்து பார்ப்பதே சிறந்ததாகும்.

போதிய வெளிச்சம் இல்லாத அறையில் இருந்து தொலைக்காட்சியைப் பார்க்கக் கூடாது. தொலைக்காட்சியைப் பார்ப்பவருக்குப் பின்னால் நாற்பது அல்லது அறுபது வாற்ஸ் வலு (Watts) மின்குமிழை (பல்ப்) எரியவிட்டு தொலைக்காட்சி பார்ப்பது தான் சிறந்ததாகும்.

தொலைக்காட்சியை தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்தால் கண்களுக்குக் கூடாது எனவே ஐந்து நிமிடங்களுக்கு ஒருமுறை பார்வையை வேறு திசையில் திருப்பி வைத்திருப்பதோடு கண்களை மூடித்திறந்து பின் தொலைக்காட்சியைப் பார்க்க வேண்டும்

இன்றேல் தொலைக்காட்சி பார்க்கும் ஆசை விபரீதஆசையாகி, கண் டாக்டரிடம் செல்ல வேண்டிய அபாய நிலை ஏற்படும் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

# மழையிலே பலவிதம்

தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அழகாபுரி என்ற இடத்தில் கடந்த மார்ச் 29-ம் திகதி முதல் நான்கு நாட்கள் இரத்த மழை பெய்ததாகக் கூறப்படும் செய்தியானது அனைவரையும் அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடையச் செய்தது!

ஆனால் இது ஆச்சரியத்திற்குரிய செய்தியல்ல! ஏனெனில்ஏற்கனவே மங்கோலியாவிலும் 29.6.1928-ல் இரத்த மழை பெய்தது!

1928-ம் ஆண்டு மார்ச் மாதம் அவுஸ்திரேலியாவில் உள்ள 'லாங்கிரில்' என்னும் நகரில் மீன் மழை பெய்தது! (முன்னொரு காலத்தில் இங்கும் மீன்மழை பெய்ததாக சொல்லப்படுகிறது)

14.5.1849-ல் அயர்லாந்தில் கறுப்பு மழை பெய்தது! 14.6 1880-ல் ரஷ்யாவில் சிவப்பு, நீலம், வெள்ளை நிறங்களில் மழை பெய்தது!

அண்மையில் சவூதி அரேபியாவில் பனி மழை பெய்து பல அனர்த்தங்களை விளைவித்து விட்டது. இது உலகில் சர்வ சாதரணம்.

முன்பு நமது யாழ்ப்பாணப் பகுதிகளிலும் சில காலங்களில் இலேசான பனிமழை பெய்தது. அதனை இங்கு, 'ஆலங்கட்டி' மழையென அழைப் பார்கள்!

★ கதிர் மாணிக்கம்

# பாவேந்தர் பாரதிதாசனும் அவர் நண்பர் குயில் சிவாவும்

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்து நூறுண்டு ஆவது குறித்துத் தமிழகமெங்கும் பாரதிதாசன் நூற்றுண்டு விழாக் கொண்டாடப் பெறுகிறது. பாரதிதாசன் நூற்றுண்டுவிழாவை ஒட்டி அவர் மகன் மன்னர்மன்னன் எழுதிய கட்டுரையை இங்கு வெளியிடுகிறேம்.

தமிழாசிரியர் பாரதிதாசன் பாரதியாரின் நண்பராகவும் உயிர் காத்த தோழனுகவும் இருந்தார்.

சுப்புரத்தினம் என்ற பாரதிதாசனுக்கு உயிர் போன்ற இனிய நண்பர்கள் பலர். அவருள் ''குயில் சிவா'' ஒருவர். இவர் மறைந்து போய்விட்டார். பாவேந்தருக்கு முன்பே!

இனிய குரல் உடைய 'சிவா' அவர்களின் முழுப் பெயர் சிவப்பிரகாசநாயகர். குயிலிசை போல் பாடுவார் என்பதால் பாரதியாரால் 'குயில் சிவா' என்று அழைக்கப்பட்டவர் இவர். பாரதியாரிடம் கவிதைத்துறையில் அளவற்ற ஈடுபாடு உடைய பாரதிதாசனுக்கு, பாரதியாரிடம் சொல்லொணு 'பக்தி' கொண்டிருந்தவரான சிவா நண்பர். குயில் சிவாவும் பாரதிதாசனும் நண்பர்கள் என்று கூறுவதைவிடக் 'கருத்தொருமித்த காதலர்' என்றே சொல்ல வேண்டும்.

காதல் என்ருல் கூடலும் ஊடலும் இயற்கைதானே!

பாரதிதாசனைவிட குயில் சிவா மிக முதியவர். ஆனுல், இருவரும் இளமை முறுக்கோடு, இளவயது நண்பர்களாகவே இருந்தார்கள்.

## இருவரின் குறும்பு

இளமை பருவத்திலே இவர்கள் ஊரையே கலக்கிக் கொண்டு இருந்தார்கள். தங்களுடைய குறும்புத்தனத்தால்!

குயில் சிவா செல்வந்தர் ஒருவர் வீட்டிற்குச் செல்வது வழக்கம். அவர்களிடம் ஏதோ ஒரு பொருளைப் பேசுகிருர். மறுக்கிருர் செல்வர். மனம் நோகிறது. எந்த உணர்ச்சியையும் புலப்படுத்தாமல் நழுவுகிருர். முன்பே இப்படிப் புண்படும்படி நிகழ்ச்சி நடந்திருக்கிறது.

## வேடிக்கையான் திட்டம்

சிவா, வீட்டுக்கு அடங்காத பிள்ளை என்ற தவருன கருத்தைப் பரப்பிஇருந்திருக்கிருர் இந்தசெல்வர். எல்லாவற்றுக்கும்வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தார் சிவா. மாலை நேரம் சுப்புரத்தினமும் சிவாவும் இரண்டொரு எடுபிடி ஆட்களை சந்தித்துப் பேசுகிருர்கள். இந்தப்பொடியர்களைப் பற்றிக் கவலைப்படாத செல்வர் இரவு உணவுமுடித்து தூங்கப்போகிருர்.

பொழுது புலர்கிறது. செல்வர் வீட்டு அக்கம் பக்கத்தார்கள் கேள்விக்குறிகளாகத் தங்களுக்குள் பேசிக்கொண்டிருக்கிருர்கள்.

செல்வந்தர் வீட்டுவாசலில் ஊங்...... என்று துக்கத்தை எதிரொலிக்கும் மரணச் சங்கை, ஒருவன் ஊதிக் கொண்டிருக்கிருன். நாலைந்து பேர் பச்சை ஓலையை வீட்டின் எதிரில் போட்டு முடைகிருர்கள். புதுவை நகரின் வழக்கப்படி, செல்வர்கள், வீட்டில் சாவு நடந்தால் தெருவாயிலில் வாழைமரம் கட்டுவது போல இங்கும் கட்டியிருக்கிருர்கள்.

தெருவார் யாரும், செல்வரிடம் நெருங்கிப் பழகுவதில்லை·எல்லோருமேவினுக்குறிகளாக நிற்கும்போது தெருக்கதவை திறந்து கொண்டு மிக ஆர்ப்பாட்டமாக வெளி வருகிருர் செல்வர், திடுக்குறுகிருர். அங்கு நின்றிருந்த ஏவலாளர்களைப் பார்த்து ஏதேதோ கேட்கிருர், ''இந்த வீட்டுக்கு வெளியூரிலிருந்து வந்த விருந்தாளி, அம்மை நோயினுல் குளிர்ந்து போனதால் விரைவாக இடுகாட்டிற்கு எடுத்துச்செல்ல வேண்டும் என்று கூறி ஒருவர் முற் பணம் கொடுத்தார். மற்ருெருவர் விட்டைக் காண்பித்தார். என்று சொல்கிருன் ஒருவன். திகைப்பு மேலிட்ட செல்வருக்கு, மேலும் மேலும் திணறல்தான்.



## தெருவார் வாழ்த்து

மூன்று நாட்களுக்குப் பிறகு சுப்புரத்தினமும், குயில் சிவாவும் இப்படிப் பழி வாங்கினுர்கள் என்பது புரிகிறது. செருக்குற்றிருந்த செல்வர் அடங்கிப் போனதற்காக தெருவார் வாழ்த்துகின்றனர் இந்த இருவரையும்.

''சூழ்ந்து வினை முடிக்கும் ஆற்றலும், செருக்கு அறுக்கும் பண்பும் நீங்காத நட்பும் கொண்ட இந்த இரு நண்பர்கள், பாரதியார் காலத்தில் பிரிட்டிஷ் துப்பறிவோரின் கண்களில் மிளகாய்ப்பொடி தூவி வெற்றி கண்டவர்கள்.

## காளமேகம் திரைப்படம்

புகழ் பெற்ற நாதசுரக்கலைஞர் டி. என். ராஜரத்தினம் பிள்ளை அவர்களை நாயகனுகக் கொண்டு 'காளமேகம்' என்ற திரைப்படத்தை சேலத்து நண்பர்கள் உருவாக்கத் திட்டமிட்டிருந்தார்கள். கதை, உரையாடல், பாடல் எழுத பாரதிதாசன் ஒப்புக் கொண்டார். உடன்சென்ருர் குயில் சிவா தலைசிறந்த படப்பிடிப்பாளராக அப்போதிருந்த எல்லிஸ் ஆர். டங்கன் அவர்கள், பட இயக்குநராக இருந்தார். அவருக்குத் தமிழ் தெரியாது. பாரதிதாசனுக்கு ஆங்கிலம் தெரியாது.

ராஜரத்தினம் பிள்ளை அவர்கள் யாருக்கும் அடங்காதவர். பாரதிதாசன் அவர்களிடம், அவருக்கு அளவு கடந்த மரியாதை. தயாரிப்பாளர்கள் ஆர்வமுள்ளவர்களே தவிர படத்துறைக்குப் புதியவர்கள். சிக்கலுக்குக் கேட்கவா வேண்டும். சினம் மிகுந்து வெகுளுவார் பாரதிதாசன். தணிவு கூறி இணைப்புப் பாலமாக வேலை செய்வார் குயில்சிவா. குறிப்பிட்ட தொகை கிடைத்தவுடனே வீண் செலவு ஆகிவிடாமல் பார்த்துக்கொண்டு, பாரதிதாசனைப் புதுச்சேரிக்கு அழைத்து வருவது குயில்சிவா அவர்களின் இயல்பான தொண்டு.

## குயில சிவா உதவி

'நாளைக்கு வேண்டுமே என்று நாலுகாசு சேர்த்து வைப்பது பாரதிதாசனுக்குக் கைவராத பழக்கம். கையில் காசு இல்லாமல் தவிக்கும் போது, பாரதிதாசன் அவர்களுக்கு முன்பு சேமித்த பணத்தைக் கொடுத்து உதவுவது குயில்சிவா அவர்களின் பழக்கம். ஊடல் வந்து விட்டால் இனிக் கூடமாட்டார்களோ என்று எண்ணும் படி இருக்கும்.

சொந்தமாக விடுவாங்கினுர் பாரதிதாசன். செப்பனிட்டு ஒழுங்குபடுத்தினுர் 'குயில் சிவா ஏதோ ஒரு கதவுக்குத் தாழ்ப்பாள் இல்லை கடைத் தெருவிலிருந்து புதிதாக ஒரு தாழ்ப்பாள் வாங்கிவந்து வீட்டில் வைத்து விட்டுப்போனுர் சிவா. பாரதிதாசன் தாழ்ப்பாளைத் தானே முடுக்கத் தொடங்கினுர். குயில்சிவா வந்து பார்த்தார்.

'சுப்பு; வெகு அழகாக முடுக்கி இருக்காயே வந்து தாழ்ப்பாளைப் போட்டுப் பாரேன் கையோடு வந்து விடும்.

## நண்பரின் கிண்டல்

இப்படி சிவா கேலி சொல்லி முடிப்பதற்குள் 'இதோ வந்தார்டா பெரிய வேலைக்காரரு' என்று சிவாவுக்கு மறுப்புரைத்தார் பாரதிதாசன்.

கிண்டல் குற்றச் சாட்டில் முடிந்தது. வெடுக்கென்று கிளம்பி விட்டார், சிவா.

வழியில் நின்ற என்னிடம் 'பெரிய இவன் என்ற நினைப்பு உங்க அப்பனுக்கு. பாட்டு எழுதுவதைத் தவிர வேறு என்ன தெரியும்னு நினைக்கிற? அவன் கெடக்கிருன்'. இப்படிச் சொல்லிவிட்டு போய்விட்டார் எங்களுக்கெல்லாம் வருத்தம்.

மறுநாள் காலையில், ஏதோ எழுதிக் கொண்டிருந்த பாரதிதாசன் தன் தலையைத் தூக்கி பார்க்கிருர். சிவா, வெற்றிலை குழையக் குழைய வருகிருர். 'தம்பி,சிவாவுக்கு காபி'!–உத்தரவு பிறக்கிறது கவிஞரிடமிருந்து! வழக்கமாக ஊர்ச் செய்தி உலகத்துச் செய்தி பற்றி உரையாடுகிருர்கள்.

## தூய்மையான நட்பு

தூய்மையான நட்பும். உள்ளன்பும் கொண்டிருந்தவர்களிடையே மனத்தாங்கல் நீடிக்குமா என்ன? எத்தனையோ நிகழ்ச்சிகள் இப்படி உண்டு.

குயில்சிவா அவர்கள் தம் வாழ்க்கையில் எப்பொழுதுமே இல்லாத அளவுக்கு ஒரு தரம் பெருமகிழ்ச்சி அடைந்தார். பாரதிதாசன் அவர்களுக்குத் தமிழ் மக்கள் சார்ப்பில் பொற்கிழி அளிக்கப்பட்ட நிகழ்ச்சி. குயில் சிவா அவர்களுக்கு தாங்க முடியாத மகிழ்ச்சி பாவேந்தர் அவர்கள் தம் வாழ் நாளில் எதற்காகவும் அழுததில்லை. குயில் சிவா அவர்கள் மறைவுற்றபோது கண்ணீர் பொழிந்தார் கவிஞர்.

ஒருவரின் வாழ்வில் பெற்ற உயர்ச்சிக்காக மற்றவர் மகிழ்வது நட்பின் பெற்றி. கலங்காத நெஞ்சும் கண்ணீர் பொழிவதும் நட்பின் இலக்கணம்தான்.

புதுவை ஈன்ற பாவேந்தரைப் பிசிராந்தையார் எனவும், கோப் பெருஞ்சோழனுகக் குயில்சிவா அவர்களையும் சொல்லாமன்றே? ✶

---

# இலக்கியத்தில் இனியதொடர்

## அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள் நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்

**புலவர் ம.பார்வதிநாதசிவம்**

பூம்புகார் நகர மக்கள் அனைவரும் கடலாடச் செல்கின்றனர். மாதவிகடல் விளையாட்டைக் காண விரும்பியமையால் கோவலன் மாதவியைக் கடற்கரைக்கு அழைத்துச்செல்கிருன்.

கடற்கரையில் புதுமணற் பரப்பில் அழகிய சித்திரச் சேலைகளால் சுற்றிவரத் திரையிடப்பட்ட கூடாரத்தில் கோவலனும் மாதவியும் அமர்ந்தனர்.

கோவலன் மாதவி இருவருமே இசை வல்லார் ஆதலின் கோவலன் பாடவேண்டும் என விரும்பிய மாதவி கோவலனிடம் யாழினைக் கொடுத்தாள்.

கோவலன் தமிழின் அழகும் தமிழின் இனிமையும் புலப்படப் பாடிய பாடல்கள் அகப் பொருள் துறை சார்ந்தன. ஒரு பெண்ணில் அன்பு கொண்ட ஒருவன் அவளைப் பிரிந்து ஏங்கும் உணர்வால் பாடுபவையாய் அமைந்தன.

மாதவி கோவலனிடம் யாழை வாங்கினுள். கோவலன் மற்ருெரு பெண்ணிற் காதல் கொண்டதுபோல் பாடிய காரணத்தால் குற்றமற்ற உளத்தினளாய மாதவியும் விளையாட்டாக மற்ருெருவனிடம் காதல் கொண்டவள் போலப் பாடினுள். மாதவி பாடிய பாடல்கள் கோவலனுக்கு இடர் செய்தாலும் படிப்போர்க்கு இன்பம் செய்பவை. அப் பாடல்களுள் ஒரு தொடர் ''அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள் நம்மை மறந்தாரை நாம் மறக்கமாட்டேமால்'என்பது.

இன்பம் துய்த்த தலைவன் தலைவியை மறந்து சென்ற போது தலைவி பிரிவுத்துயர் தாங்க முடியாதவளாகி 'அழகிய பூங்கொத்துக்களை உடைய அடும்புகளே! அன்னங்களே! தலைவன் நம்மை மறந்தானுயினும் நாம் தலைவனை மறக்கமாட்டோம்' என்பது இத் தொடரின் பொருள்.

அவன் என்னை விரும்பினுன் நானும் அவனை விரும்பினேன். அவன் என்னை மறந்தான் நானும் அவனை மறந்தேன் என்பது வாணிகக் காதல்.

அவன் என்னை மறந்தான் என்ருல் அவனை மறக்க முடியவில்லையே என்று ஏங்குவது பரிசுத்த காதல். நம்மை மறந்தாலும் நாம் மறக்கமாட்டேமால் என்பது பரிசுத்த அன்பு.

தலைவன் தலைவி இருவரும் சந்தித்த நிகழ்வுகளை எண்ணும் போதெல்லாம் அவர்க்கு இன்பமாக இருக்கும். சந்தித்த இடத்தை நினைத்துப் பார்ப்பதும் இன்பமாக இருக்கும். சந்தித்த இடத்தில் இருந்த பொருள்களை நினைத்துப்பார்ப்பதும் இன்பமாக இருக்கும். இங்கு மாதவி குறிப்பிடும் தலைவன், தலைவியை மறந்தான். தலைவன் தலைவி சந்திப்பில் சாட்சிகளாக இருந்த அழகிய மென்மையான பூங்கொத்தினையுடைய அடும்பினையும், அன்னங்களையும் கூட மறந்துவிட்டான். அதனுல் தான் மாதவி'என்னை மறந்தாரை நான் மறக்கமாட்டேனுல்' என்று பாடாது அடும்புகளையும், அன்னங்களையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு நம்மை மறந்தாரை நாம் மறக்கமாட்டேமால் என்ருள்.

இத் தொடர் மாதவி விளையாட்டாகக் கூறியதானுலும் பின்னர் நிகழப் போகும் ஒரு சம்பவத்தையும் குறிக்கிறது.

இன்ஞெருவனிற் காதல் கொண்டாள் போல் மாதவி பாடிய பாடலைக் கேட்ட கோவலன் மாதவியை மறந்து செல்கிருன். ஆனுல் மாதவியால் கோவலனை மறக்க முடியவில்லை. நம்மை மறந்தாரை நாம் மறக்கமாட்டேமால் என்ற தொடர் பாடிய நேரத்தில் விளையாட்டாகப் பாடப்பட்டாலும் கூடப் பின்னர் கோவலன் மறந்த போதும் அவனை மறவாத மாதவியின் பரிசுத்த அன்பை விளக்க உதவுகிறது.

கலையிலும் அழகிலும் சிறந்திருந்த மாதவி–செல்வச் செழிப்பிலே மகிழ்ந்திருந்த மாதவி கோவலன் தன்னை மறந்ததையும் பின்னர் வெட்டுண்டு இறந்ததையும் அறிந்த போது ஒப்பனைகளைத் துறந்தாள். செல்வத்தைத் துறந்தாள். துறவறம் மேற்கொண்டாள். இவை அனைத்தும் 'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்' என்பதால்.

தொடர் காவியம்

# காவேரி

காரை. செ. சுந்தரம்பிள்ளை

14

## அன்புக்கு நன்றி

அருணன் உரைத்ததைக் கேட்டதும் – தாயும்
அக்காவும் சிந்தனை செய்தனர் – இவள்
பெருமையைப் பற்றிப் பிதற்றுறன் – ஏதோ
பேசரும் தெய்வமென் றேதுறன் – இந்த
எருமையைப் பெற்றமே பிள்ளையாய் – இவன்
எங்களுக்கே புத்தி சொல்கிறன் – ஒரு
கருமம் புரிய அறிகிலான் – ஆனல்
காதல் புரிய அறிந்துளான்.

எங்கள் குலத்தின் பெருமையை – உள்ள
ஏழ்கடல் வைய மறியுமே – செல்வம்
பொங்கும் குடும்பந்தனில் வந்த – இவன்
பேசிடும் வார்த்தைகளா இவை – அந்த
மங்கை திருமணம் என்றதும் – மிக
மட்டிலா இன்ப மடைகுவள் –இந்தச்
சங்கதி ஒன்று மறிந்திடா – எங்கள்
தம்பியை என்னென்று சொல்வது.

இக்கணம் நாங்கள் இருவரும் – அந்த
ஏந்திழை யாளை அடைகுவோம் – பல
பக்கத் திருந்தும் நெருக்கிறர் – எங்கள்
பையனைக் கேட்டெனக் கூறிப் – பின்
தக்க வரிசை யிலையேனும் – உனைத்
தான்ம ணப்பேன் எனநிற்கிறன் – இந்தச்
சிக்கலைத் தீர்த்திட எண்ணியே – உனைத்
தேடிவந் தோமெனச் செப்புவோம்

தன்னந் தனிமர மாகவே – இந்தத்
தையலும் உள்ளனள் ஆயினும் – ஒரு
பென்னம் பெரிய புகழுடன் – இவள்
பெண்ணர சாகத் திகழ்கிறள் – தூய
வன்னக் கிளிமொழி யாளையாம் – தம்பி
வாழ்க்கைத் துணையென ஆக்கினல் – இவன்
மன்னவ ஞக விளங்குவான் – எங்கள்
வம்சமும் மாபுகழ் எய்துமே.

தாயும் மகளும் ஓர்காலையில் – இந்தத்
தையலைக் காண விரும்பியே – மிகத்
தூய பட்டாடை புனைந்தனர் – வைரத்
தோடுமூக் குத்தியும் பூண்டனர் – தங்கத்
தாயித்து அட்டியல் மார்வடம் – காப்புச்
சங்கிலி என்பன மாட்டினர் – தங்கள்
காயத்தைத் தூக்கிய வாறுமே – பெருங்
காரினில் ஏறி அமர்ந்தனர்.

பிஞ்சுக் குழந்தை யுளத்தினைக் – கொண்ட
பெண்கொடி யாளை அடைந்ததும் – தங்கள்
நெஞ்சக் கருத்தினைச் சொல்லினர் – எங்கள்
நீண்டதோ ராசையி தென்றனர் – ஒரு
வஞ்ச மிலாத காவேரியும் – இந்த
வாறிவர் சொன்னதைக் கேட்டதும் – அம்மா
பஞ்சமா பெண்கள் இந்நாட்டிலே – உங்கள்
பையனுக் கென்று சிரித்தனள்

ஆயிரம் பெண்கள் இம்மண்ணிலே – எங்கள்
அருணை அடையத் துடிக்கிறர் – அடி
சேயிழை யேயுன் நினைவினல் – அவன்
செத்து மடிந்திடப் போகிறன் – அந்தத்
தூயவன் காதலை யேற்றுமே – நீயும்
துன்பம் துடைத்திட வேண்டுறேம் – எனத்
தீயவர் கூறிய வார்த்தைகள் – அவள்
செவியி னில்நா ராசமாய்ப் பாய்ந்ததே.

சாகும் உன் தம்பியைக் காத்திடும் – ஒரு
சஞ்சீவி யல்லநான் தாயரே – இங்கே
வேகு முளத்துடன் வாழ்ந்திடும் – கதி
வேறிலா மக்களை வாழ்விக்கும் – பல
ஆகும் பணிகளைச் செய்வதே – எனக்
கான கடமைகள் ஆகையால் – நீங்கள்
போகும் வழிஅதோ போகலாம் – எனப்
பூவையும் கூறி அமர்ந்தனள்

வீட்டுக்கு வந்தசீ தேவியை – நீயும்
வெளியே போஎன் றிங்கு சொல்வது – பெருங்
கேட்டுக்கு என்பதை ஓர்கிலாய் – இதைக்
கிஞ்சித்தும் சிந்தனை செய்கிலாய் – தங்கள்
பாட்டுக் கவர்களும் சொல்லினர் – அந்தப்
பாவை நகைத்துமே கேட்டனள் – இந்த
நாட்டுக் குண்டானதைக் காட்டிலும் – திமை
நாடி யெனைவர்து சேருமா.

அன்றைக்கோர் வீடும் இருந்தது – காணி
ஐந்தாறு கூட இருந்தன – ஆனல்
இன்றைக்கோ சொந்த மென்றேதிட – பொருள்
யாது மிலையென்தன் தாயரே – அவை
என்றைக்கும் மக்களுக் காமென – நானும்
ஏற்பாடு செய்த தறிகிலீர் – உங்கள்
அன்புக்கு நன்றி போய்வாருங்கள் – என
ஆயிழை கூறி யெழுந்தனள்-

(தொடரும்)

# 36 ஆண்டுக்கு முன்னர் எழுதப்பட்ட 'நட்பு' மடல்

நான் தினமும் யாழ்ப்பாணம் பஸ்ஸில் பயணஞ் செய்பவன். வசாவிளான்–யாழ்ப்பாணம் பஸ்ஸில் ஒரு நாள் சிங்காரம் என்ற ஓர் அன்பர் என்னை யார் என்று அடையாளம் கண்டுகொண்டார். இவர் பலாலி இராணுவமுகாமுக்குள் இருக்கும் கால அவதான நிலையத்தில் வேலை பார்த்துவந்தார். இப்போது ஓய்வு பெற்று நெல்லியடியில் பொறியியல் சம்பந்தமான உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் ஸ்தாபனம் ஒன்றில் பணி புரிகிறர். நல்ல இலக்கிய ரசிகர். அமரர் பேராசிரியர் கைலாசபதியுடன் நெருங்கிய நட்பும் தொடர்பும் கொண்டவர். புதுமைப்பித்தன் முதல் இன்றைய எழுத்தாளர்கள் வரை நேரம்போவதே தெரியாமல் பேசிக்கொண்டிருப்பார். அமரர் கைலாசபதி தனக்கு எழுதிய பல கடிதங்கள் தொலைந்து விட்டன என்றும் இலக்கியம் சம்பந்தமான அவரது கருத்துக்கள் அற்புதமானவை என்பதால் தான் பேணிப்பாதுகாத்த தனக்கு மிகவும் பிடித்தமான கடிதம் ஒன்றை எனது பார்வைக்குத் தருவதாகவும் கூறிப்படித்துவிட்டுத் திரும்பத் தரும்படி கேட்டுக்கொண்டார். 1953இல் கைலாசபதி கொழும்பில் படித்துக்கொண்டிருந்த காலம். அப்போது அவர் எழுதி அவரது நண்பர் அனுபவித்த இலக்கியரசனையை நாமும் அனுபவிக்க வேண்டாமா?... நண்பர் சிங்காரத்தின் அனுமதியுடன் அக்கடிதம் அப்படியே இங்கு பிரசுரமாகிறது

—(நெல்லை க பேரன்)

## பேராசிரியர் கைலாசபதி நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதம்

21, ஸ்கூல் லேன்
கொழும்பு-3
19. 3. 53

அன்பரே!

பசியில் பெரியபசி ஆற்றல் மிக்க பசி எது? உனக்கு வேண்டாம் என்று தடுக்கப்பட்டதை எப்படியாவது அறிய வேண்டும். அடைய வேண்டும். என்னும் பசியே'...

'கள்ளின் போதை, மற்றப் பெண்ணின் இன்பம் இவை எப்படி இருக்கும் என்று அறிய அடைய ஆவல் பிறக்கும் அறிந்தால் போதும் அடைந்தால் போதும், பிறகு விடுதலை இல்லாத வேட்கை தான்''...

...ஆனல் ஒருவன் திருட்டு வழியில் இன்னெருத்தியோடு கொள்ளும் உறவு கள்குடிப்பதைப் போன்றது. அது என்றும் அளவோடு நடைபெருது.. ஏக்கம், அச்சம் முதலானவை திருட்டு இன்பத்தை மிகுதிப் படுத்தும். அதனல்தான் அதை எளிதில் விடவும், மறக்கவும்முடியாது போலும் என்ற அமைதி இல்லாமல் வேட்கை இருந்து கொண்டே இருக்கும்''...

''அறிவுக்கூர்மை எவ்வளவு ஆபத்தானது தெரியுமா? மந்த அறிவு உள்ளவர்களுக்கு நாடி நரம்புகள் நுண்ணுணர்வு இல்லாமல் மந்தமாக இருக்கும். பால் உணர்ச்சியும் அவ்வாறே இருக்கும். ஆனல் உண்மையான அறிவு என்றல் நுட்பமான உணர்வுடைய நாடி நரம்புகளும் அவைகளுக்கு ஏற்ற பால் (sex) உணர்ச்சியும் இருக்கும், அப்படிப்பட்டவர்களுக்குச் சிறிது நேரத்தில் உடல் பசி ஏற்படும். மீண்டும் மீண்டும்வரும் கணக்குப் போன்ற துறைகளிலும், கலைத்துறையிலும் வல்லவர்கள் ஒழுக்கமாக வாழ முடியாமல் தொல்லைப்படுவது இதனல்தான்...'

''இந்தக் காலத்துச் சினிமாக்களும் கதைகளும் அறிவு வளர்ச்சிக்குத் துணையாகவும் இல்லை, ஒழுக்க உணர்ச்சிக்கு தூண்டுகோலாகவும் இல்லை. தடுமாற்றமான மனப்பான்மையுள்ளவர்கள் இவற்றல் எளிதில் கெட்டுப்போய்விடுவார்கள் எந்த உணர்ச்சியால் இளம் பிள்ளைகள் கெட்டுப் போகாமல் தப்பித்துக் கொள்ள வேண்டுமோ அந்த உணர்ச்சியையே சினிமாக்களும் கதைகளும் ஊட்டுகின்றன... புலனடக்கம் என்றல் கோழைத்தன்மை, அநாகரிகம் என்றெல்லாம் இந்தக் காலத்துப் பிள்ளைகள் எண்ணுகிறர்கள்.

'...'' வீட்டில் அப்போது ஒருவருமில்லை. எங்கோ வெளியே போயிருந்தார்களாம். கப்புரத்தினமே அவளிடம் போய்த் தொட்டும், நயப்பாகப் பேசியும் இழுத்தும் இறுகணைத்தும் இன்பங் கொஞ்சினராம்...''

பிறகு நெடுங்காலம் அங்கு அவர் போவதில்லையாம். போனலும் அவள் அவரிடம் பேசிக் கொள்வதில்லையாம்.''

''. ஏன் இந்த நிலை நம் மனத்தை ஏன் பாலையாக்கிக் கொள்ள வேண்டும்? ஏன் கல்லும் முள்ளும் நிறைந்ததாக்கிக் கொள்ளவேண்டும். ஏன் எரிமலையாக்கிக் கொள்ள வேண்டும். எப்போதும் நம் மனம் பூங்காவாக பூம்பொய்கையாக குளிர்ந்திருக்கும் படியாக வைத்துக் கொள்ள முடியாது.

* * *

உமது கடிதம் வந்தபொழுது புத்தகமொன்றை வாசித்து முடிக்குந்தறுவாயிலிருந்தேன். தமிழ்க்கதைப் புத்தகங்கள் வாசித்துப் பல நாட்களாகின்றன. இப்பொழுதெல்லாம் புத்தகத்தில் எனக்கு நம்பிக்கை குறைகிறது. திரும்பவும் ஆங்கில உயர்தர இலக்கிய, நாடக நூல்கள் வாசித்துக் கொண்டிருக்கையில் வீடு வந்த நண்பர் 'அல்லி' என்ற மு. வரதராஜன் நூலொன்றைத் தந்து விட்டுப்போனர். ஒரு நாவலாசிரியன் என்ற முறையில் வரதராஜனுக்குத் திறமை அதிகம் இல்லை. ஆனல் Moral, Love, Sex என்ற மூன்று விஷயங்களையும் தீர ஆலோசித்து 25 வருடங்களுக்கு மேல் 17-24 வயதுக்குள் உள்ள சர்வகலாசாலை மாணவர்களுடன் நெருங்கிப் பழகி அவதானித்து எழுதுவதில் உண்மையான ஆராய்ச்சி சொட்டுகிறது அந்த நூலில் அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்த மொழிகள்தான் மேலே உள்ளவை.

உமது கடிதத்தின் சாரத்திற்கும் நான் எழுதியவற்றிற்கெல்லாம் சந்தர்ப்பப் பொருத்தம் இருந்தது. எனவே எழுதினேன் மற்றும்படி காண்டேகர், அகிலன், யாவருமே பொய்யுலகம் ஒன்றைச் சிருஷ்டித்து விடுகிறர்கள். நவீன உலகில் எழுத்தாளர்களுக்கும், வாசகர்கள் லட்சக்கணக்கானேருக்கும் உள்ள தொடர்பை நுண்ணிதில் ஆராய்ந்த மேதை F R. Leavis என்ற பேராசிரியர் ஒரு உண்மையைத் தனது Culture And Envitoment என்ற ஆராய்ச்சிக் கட்டுரையில் (நூல்) குறிப்பிடுகிறர். அவரின் முடிவு மிகப்பரந்ததாகும். ஆராய்ச்சிகளின் முடிவுகளே எப்பொழுதும் Broad Generalization ஆகத்தான் இருக்க முடியும். அதாவது, எழுத்தாளர்கள் அறிந்தோ அறியாமலோ வாசகர்களுக்கும் தங்களுக்கும் இடையில் இறுக்கமான பிணைப்பைப் போட்டுக் கொள்கிறர்கள். அதாவது மேலும் மேலும் உனது ஆசைகள், அவர்கள் சந்தேகங்கள், கனவுகள், குழப்பங்கள், மனே நிலைகள் ஆகியவற்றிக்குத் தங்களிடம் அடுத்தடுத்து வரும்படி செய்து கொள்கிறர்கள். வியாபார முறையைவிட Psy Chological effect அதுதான் வாசகனை முற்றிலும் அறிந்து உணர்ந்தவனக விடாமல் Suspense, மர்மம், சந்தேகம். பூர்த்தியின்மை இப்படிப் பல வழிகளாலும் Repressed sex உள்ளவன் Sex Stravation தாங்காது தாளியை நாடுகிறன்; பெர்னட்ஷா எங்கேயோ கூறுகிறர்.

''இந்த Complex ஆன காமப் பிணக்குகளினல் நல்ல மனைவியிடமே திருப்தியேற்படாதவனுக்கும் சமூகம் இடந்தராது தடுக்கும் என்றதினல் ஆசைகள் எல்லாவற்றையும் தீர்க்க உடல் வருந்தும் நவீன இயந்திர மனிதனுக்கும் உலகில் விபசாரிகள்தான் உண்மையில் உதவுகிறர்கள். அவர்கள் இந்த ஆண்களுக்கு தேவ உலகப் பெண்களாயிருக்கிறர்கள். விபசாரிகள் வேண்டுமென்று கூறவில்லை. ஆனல் அவர்களும் தீமையுடன் ஒரு வித சமுதாயத்தொண்டுதான் செய்கிறர்கள்'' என்கிறர். இருபதாம் நூற்றண்டின் மேதைகளில் ஒருவர் பெர்னட்ஷா, தனது குத்தல் பாணியில்.

''உண்மையில் பார்க்கப் போனல் இந்தக் காலத்தினது ஒவ்வொரு தனிமனிதனுடைய அந்தரங்க வாழ்வும் அரைவாசி மறைத்துவைக்கும் மானசீக காமப்பசி, தீராதபசி, நிறைவேறத மனச்சாட்சிகள்'' என்கிறர் ஒரு சமூக இயல் அறிஞர்.

இவைகளுக்குவிமோசனமில்லையா? எனக்குத் தெரிந்த வரையில் ஒரு வழிதான் உண்டு. இல்லை இரண்டு பாதைகள். ஒன்று காமத்தை ஏதாவது காமமாக்குதல், Sublimation of sex சமயத்துறையில், கல்வித்துறையில், விஞ்ஞானத்துறையில், தமிழ் நாட்டில் அழகாகச் சொல்லியிருக்கிறர்கள். காமத்தைக் சிவகாமமாக்குதல், கல்வித்துறையிலும், விஞ்ஞானத்துறையிலும், காமத்தை மாற்றலாம். ஆனலும் சில வேளைகளில் மனிதப் பண்பு மறந்து வெறுப்பு, கொடுமை நெஞ்சை நிறைத்து மனிதனை அழிக்கும் சாதனங்களைக் கண்டுபிடித்து Sex Sublimation க்குப் பதில் Perversion ஆகி விடுகிறது. அது அவனுடன் நிற்காது மனிதகுலத்திற்கே ஆபத்தானது. சமயத்துறையில் ஆயிரத்திற்கு ஒருவர், இருவர் மனஞ்

(15-ம் பக்கம் பார்க்க)

## வைத்திய கலசம்

# விதைப்பை நீர்வீக்கம்

டாக்டர் எம். கே. முருகானந்தன் M. B. B. S. (Cey)

✶ ஆண்களை மாத்திரம் பாதிக்கும் நோய்களில் விதைப்பை நீர்வீக்கம் முக்கியமானது. இதனை ஹைட்ரோசீல் (Hydrocele) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். இது தவறான நடவடிக்கைகளால் ஏற்படும் இரகசிய நோய் எனச் சிலர் எண்ணுகிறார்கள். இது தவறான நம்பிக்கை. எனவே வெட்கமோ, தயக்கமோ இன்றி வைத்திய ஆலோசனை பெறலாம்.

★ விதைப்பையினுள் இருக்கும் விதையைச் சுற்றி ஒரு உறை இருக்கிறது. சாதாரணமாக இந்த உறையினுள் சில துளி நீர் இருக்கும். பல்வேறு காரணங்களால் இந்த உறையினுள் பெருமளவு நீர் சுரந்து வீக்கத்தை ஏற்படுத்தும் போதே அதனை விதைப்பை நீர் வீக்கம் என்கிறோம்.

✶ இந்த வீக்கம் ஒரு பக்கத்தில் மாத்திரம் இருக்கலாம்; அல்லது இரு பக்கங்களிலும் கூடத் தோன்றலாம். இது சிறிய தேசிக்காயிலிருந்து, பெரிய பூசனிக்காய்வரை பருமனில் வேறுபடலாம். இதைத் தொட்டுப் பார்த்தீர்களேயானால் நீர் நிறைந்த தோற்பை போல் உணர்வீர்கள். ஆனால் இதற்குள் இருக்கும் விதையை வேறுபடுத்தி உணர்வது முடியாதது.

✶ நடக்கும் போதும் ஓடும் போதும் இடைஞ்சலாக இருப்பதும், காற்சட்டை அணியும் போது அசிங்கமாக இருப்பதும்தான் இந்நோயால் ஏற்படும் தொல்லைகள் என்று எண்ணி விடாதீர்கள். சில தருணங்களில் இந்நீரில் கிருமி தொற்றி சீழாக மாறி கடும் காய்ச்சல், வேதனை போன்ற சிரமங்களைக் கொடுக்கலாம். அல்லது அது வெடிக்கவோ அல்லது அதனுள் இரத்தம் கட்டிபட்டோ தொல்லை கொடுக்கலாம்.

✶ இந்நோய் பெரும்பாலும் எந்தவித அடிப்படைக் காரணமுமின்றி தானாகவே தோன்றுகிறது. இதனால் இந்நோய் தோன்றாமல் தடுப்பதற்கு எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஆனால் மிகச் சிலரில் இந்நோய், காசநோய், புற்றுநோய், யானைக்கால் நோய், கூகைக்கட்டு, கொனரியா, சிபிலிஸ் போன்ற வேறு நோய்களின் விளைவாகவும் தோன்றலாம்.

✶ பெரியவர்களுக்குத்தான் விதைப்பை நீர்வீக்க நோய் உண்டாகும் என்று எண்ணி விடாதீர்கள். பால் குடிப் பச்சிளங் குழந்தைகளில் தோன்றலாம். குழந்தைகளில் இது தானாகவே ஒரு வருடத்தினுள் மறைந்துவிடும். இல்லையேல் வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.

✶ விதைப்பை வீக்கமடைந்தால் அது விதைப்பை நீர் வீக்கம்தான் என ஒரேயடியாக முடிவு கட்டிவிடாதீர்கள். ஹேர்னியா என்று பெரும்பாலும் குறிப்பிடப்படும் குடல் இறக்கத்தினாலும் விதைப்பை வீக்கம் ஏற்படலாம். இவ் வீக்கம் தனியே விதைப்பையினுள் மட்டும் இருக்காது; வயிற்றிலிருந்து அரை வழியாக வீக்கம் விதைப்பையினுள் செல்வதை, கூர்ந்து அவதானித்தால் நீங்களும் காணலாம். ஹேர்னியா வீக்கம் பெரும்பாலும், ஓடுதல் முக்குதல் போன்றவற்றால் வெளிவரும், அல்லது பருமனடையும். படுக்கையில் ஒய்ந்து படுத்தால் தானாகவே மறைந்து விடும்.

★ விதைப்பை நீர் வீக்கத்தைக் குணப்படுத்துவதற்கு ஒரே வைத்தியமுறை சத்திரசிகிச்சைதான். நாட்டு வைத்தியத்திலோ, மருந்து மாத்திரைகளிலோ நேரத்தை வீணடிக்காது, சத்திரசிகிச்சை வைத்தியரை அணுகி இதனை முற்றாகக் குணப்படுத்துங்கள். இதே போல் ஹேர்னியா வீக்கத்திற்கும் ஒரே வைத்தியம் சத்திரசிகிச்சைதான் என்பதை மனதில் வைத்திருங்கள்.

★ விதைப் பையினுள் கடும் வேதனை, கடும் காய்ச்சல், உடல் உழைவு போன்ற அறிகுறிகளுடன் விதைப் பையினுள் வீக்கம் தோன்றினால், அதுவிதையிலும், அதனோடு தொடர்பான பகுதிகளிலும் கிருமித் தொற்றினால் உண்டாகும் எபிடிடைமோ ஓர்க்கைடிஸ் (Epididymo Orchitis) என்ற வேறொரு நோயாகும்.



# புரிந்த மனைவியும் புரியாத மனைவியும்

கிரேக்க தத்துவ ஞானி சோக்கிரடீஸ் இரு முறை திருமணம் செய்து கொண்டவர். முதலில் மெர்ட்டன் என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அவளுக்கு இரு ஆண் குழந்தைகள் பிறந்தன. அவள் மிகவும் அடக்கமான பண்பு கொண்ட குணவதி. சோக்கிரடீஸ் நாள் தோறும் ஏதென்ஸ் நகரைச் சுற்றி விட்டு வருவதைத் தவறாகக் கருத மாட்டாள். தன் கணவர் தெருவில் நின்று கொண்டு மணிக்கணக்காகப் பேசுவது பற்றி எதுவும் கூற மாட்டாள். சோக்கிரடீஸின் சிந்தனையும் பேச்சும் அவளைக் கவர்ந்தன. தன் கணவன் சிறந்த அறிஞன் என்று அவள் பெருமை கொண்டாள். திடீரென்று ஒரு நாள் அவள் இறந்து விட்டாள்.

பிள்ளைகளைப் பராமரிப்பதற்காகச் சோக்கிரடீஸ் இரண்டாவது மணம் புரிந்தார். சாந்தி பீ என்றும் கணவனின் போக்கை வெறுத்தாள். அவரது சிந்தனைகளை வெட்டிப் பேச்சு என்று கூறினாள். சோக்கிரடீஸின் நண்பர்கள் முன்னிலையிலேயே அவரை அவமதித்தாள்

திருமணம் செய்வதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன என்று சோக்கிரடீஸிடம் நண்பர் ஒருவர் கேட்டார். அதற்கு சோக்கிரடீஸ் அவசியம் திருமணம் செய்ய வேண்டும். நல்ல மனைவி வாய்த்தால் வாழ்க்கை இன்பமாக அமையும். பொல்லாத மனைவி கிடைத்தால் ஒருவன் தத்துவ ஞானியாக முடியும் என்றார்.

# திருக்குறள் முப்பால்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக இருந்த க. வெள்ளைவாரணனார் விபுலாநந்த அடிகளின் மாணவர்.

திருவள்ளுவர் தமது நூலை அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்று மூன்று பிரிவில் அமைத்ததன் காரணத்தை வெள்ளைவாரணனார் விளக்கியிருக்கிறார்.

'எல்லா உயிருக்கும் உரிய இன்ப உணர்வும் அவ்வின்பத்திற்குக் காரணமாகிய பொருளும் அப்பொருளினை ஈட்டுதற்கு வரம்பாகிய அறமும் என அறிவுடை மக்களால் எண்ணப்படுவன மூன்று' இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு ஐந்தொடு புணர்ந்த ஐந்திணை என்பது தொல்காப்பியம்.

எண்ணும் முறைமைக் கண் இன்பம் முதலில் வைக்கப்பட்டாலும் இயற்றும் முறைமைக்கண் அறனே முதற்கண் கருதத்தக்கது. 'அந்நிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும்' எனத் தொல்காப்பியம் கூறுதலினால் புலனாகும்.

அறத்தினால்பொருளாக்கி அப்பொருளால் இன்பம் நுகர்தலையே மூன்றன் பகுதி எனத் தொல்காப்பியர் குறித்துள்ளார். அவர் குறித்த மூன்றன் பகுதியையே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என அமைத்தார் திருவள்ளுவர் அறமுதலாகிய இப்பகுப்பு இயற்றும் முறைமை கருதி அமைந்தது.

# வியத்தகு செய்திகள்

● ஜப்பானில் வெளியாகும் 'Yomiuri shimbun' என்ற செய்திப் பத்திரிகை ஒரு கோடியே முப்பத்தேழு லட்சம் பிரதிகள் அச்சாகின்றன. பல ஊர்களில் அச்சாகும் அந்தப் பத்திரிகையின் காலை மாலை பிரசுரங்களின் எண்ணிக்கைதான் இது!

● 'லீனா' என்ற நாய் ஒரு முறை 23குட்டிகள் போட்டது! இது நடந்தது 1944 இல். ஆனால் அந்த 23 குட்டிகளில் 14தான் பிழைத்தன!

● 'Ethel Granger' என்ற பெண்ணின் இடுப்பின் சுற்றளவு எவ்வளவு தெரியுமா? 13 அங்குலங்கள்தான்.

● இலண்டனைச் சேர்ந்த 'ஆல்ப்ரெட் வெஸ்ட்' என்பவர் ஒரு முடியை 18 பாகங்களாக நீள வாக்கில் தனித் தனியாகப்பிரித்தார். (அதாவது ஒரு முடியை 18 முடிகளாக்கினார்).

● அவுஸ்திரேலியாவை சேர்ந்த 'ஆரான் மார்ஷல்' இன் சாதனை ஒரு குளியல் சாதனை! அவர் தொடர்ச்சியாக 336 மணி நேரம் 'ஷவர் பார்த்' எடுத்தார்.

● 'டெப்பில் யூரேவும்' 'ஜிம்ஷாய்லரும்' தொடர்ச்சியாக 5 நாட்கள் 12 மணிநேரமாக முத்தமிட்டுக்கொண்டிருந்தார்கள்!

● சாப்பாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட டாக்டர் 'ஆல்கானு' என்பவர் 2 நிமிடங்களில் 17 பெரிய வாழைப்பழங்களைச் சாப்பிட்டார்!

● உத்தரப் பிரதேசத்தில் 'மசூரியாடின்' என்பவர் 8 அடி 6 அங்குல நீளத்திற்கு 'மீசை' வளர்த்திருந்தார்.

தொகுப்பு:
செ. தயாபரன்

# நீர்மூழ்கிக்கப்பல் எப்படி நீரில் மூழ்குகிறது

நீர் மூழ்கிக்கப்பல் ஒரு பிரத்தியேகமான அறையை வைத்துள்ளது. அதில் தேவையான பொழுது நீரை நிரப்பிக் கொள்ளவும் வெளியேற்றவும் முடியும்.

நீர் மூழ்க்கிக்கப்பல் நீரினுள் மூழ்கவேண்டிய சமயத்தில் அந்த அறையில் நீர் நிரப்பப்படும் அதனால் நீர் மூழ்கிக்கப்பலில் அழுத்தம் அதிகரிக்கிறது கப்பல் நீரினுள் மூழ்குகிறது மிதக்க வேண்டிய சமயத்தில் அறையிலிருந்து நீர் வெளியேற்றப்படும். அழுத்தக்குறைவு ஏற்படுவதனால் நீர் மூழ்கிக் கப்பல் உடனே மேல் மட்டத்தை அடையும்.

# அக்கெல்தாமா

இரத்தக் களம் என்னும் பொருள்படும் இந்தக் கிரேக்கச்சொல் ஜெருசலேமிலுள்ள ஓர் இடுகாட்டு நிலத்தைக் குறிக்கும். இப்பொழுது எக்கொலைக் களத்தையும் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாக இது ஜெருசலேத்திலே வழங்குகிறது இயேசு நாதரைக் காட்டிக் கொடுத்ததற்குப் பிரதியாக யூதாஸ் பெற்றுக்கொண்ட முப்பதுவெள்ளிக் காசுகள் குற்றத் தொடர்புடையவை என்று கருதப்பட்டமையால் அப் பணத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த பணத்தைக் கொண்டு, வெளிநாட்டார் வந்து ஜெருசலேமிலே இறந்துவிடின் புதைப்பதற்காக குயவனொருவனிடம் நிலம் வாங்கப்பட்டது. அதற்கே அக்கெல்தாமா என்பது பெயர்.

வி. கே. யூரன்

# எவன் மனிதன்

மனிதராகப் பிறந்தவர்கள் எல்லோரும் உண்மையில் மனிதராகி விட முடியாது. உண்பது, உறங்குவது, மக்களைப்பெறுவது. உலாவுவது முதலிய யாவும் விலங்குகளுக்கும் பொது. ஆகவே மனிதர்களாகிய நாம் கடமையில்– உழைப்பில் விலங்குகளைவிட மாறுபடுகிறோம்.

இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் திருவெற்றியூரிலே ஒரு மகான் இருந்தார். வீதியோரத்தில் நின்று கொண்டு போகின்ற வருகின்ற மக்களைப் பார்த்து– அம் மகான் 'குதிரை போகின்றது' 'எருமை போகின்றது' 'பெருச்சாளி போகின்றது' என்று கூறுவாராம். வள்ளலார் இராமலிங்க அடிகள் போகும்போது மட்டும் 'மனிதன் போகிறான்' என்பாராம். ஆகவே தன்னையும், மற்றவர்களையும் ஒன்றாக நினைப்பவனே மனிதன்.

கதிர் மாணிக்கம்




கே.எஸ்.ஆனந்தன்

## சமூக நவீனம்

## அத்தியாயம் பதினான்கு

மனிதன் நினைத்தபடி வாழ்க்கை அமைவதில்லை. தன்னைப்பற்றியோ, தன்னுடைய எதிர்கால வாழ்க்கை பற்றியோ சிறிதேனும் சிந்திக்காமலிருந்த ரகுவரனுடைய மனப்பாங்கை சிறிதாக அசைத்துவிட்டான் சின்னையா. அந்த அசைப்பில் ரகுவரனுடைய மனமும் அசைந்து கொடுக்கவே செய்தது. ஆனாலும் அவன் தன்னுடைய சொந்த வாழ்க்கையைப் பற்றி நினைக்கும் பொழுது சமுதாயத்தின் அடிமட்டத்தில் தேடுவாரற்ற நிலையிலிருக்கும் ஒருவனாகவே தன்னைக் கருதினான்.

யாழ்ப்பாணத்தவர்கள் கல்விக்கு அளிக்கும் மதிப்பு பண்பாட்டுக்கும் அளிப்பவர்கள். பண்பாட்டின் வரையறையுடன் பழகுபவர்களின் மனோநிலையை தவருகக் கருதக் கூடாது என்று நினைத்தான். என்னதான் சகஜமாக சிந்து பழகினாலும்அவள் உயர் குடியில் பிறந்த பெண் படித்தவள் என்ற பழக்கத்தினால் நட்புரிமையுடன் பழகுவதை தவருன கண்ணோட்டத்துடன் நோக்கினால் சின்னையா கூறுவதுபோல நாளைக்குத் தேவையில்லாத கதைகள் வரக்கூடும் என்றும் எண்ணினான். இரவிரவாக பலவாறு சிந்தித்தும் முடிவு காணுத நினைவுகளுடன் காலையில் விழித்தபோது தொலைபேசி மணியடித்தது.

'தம்பி பல நாட்களாக வேலை செய்யாமலிருந்த ரெலிபோன் இன்று காலையிலேயே நல்ல சகுனமாக சிணுசிணுக்குது' என்று குரல் கொடுத்தான் சின்னையா.

எழுந்து வந்து தொலைபேசியை எடுத்தான் ரகுவரன். கண்டியிலிருந்து 'டிரங்கால்' போட்டிருந்தார் சமரசிங்கா.

'என்னப்பா ரகு சுகமா?' சமரசிங்காவின் குரல்.

'உங்கள் புண்ணியத்தால் எனக்கு என்றுமே சுகம்தான்,

'எப்ப எடுத்தாலும் ரெலிபோன் வேலை செய்வதாக இல்லையே. இன்றுதான் கிடைத்தது'

'நாட்டுப்பகுதி இப்படித்தான். என்ன காலையிலேயே ஏதும் விசேடமா?'

'ஆமா கல்யாணம் உடனே புறப்பட்டு வா'

'யாருக்கு? சொல்லாமல் கொள்ளாமல் என்ன திடீரென்று'

'மூன்றுநாளாய் முயற்சித்தேன். ரெலிபோன் வேலை செய்யலை கடிதம் போட்டிருக்கேன். சந்திரிக்கும், நிகாலுக்கும் தான். சந்திரி கடிதம் போட்டதாகச் சொன்னுளே'

'சரி நான் இன்றே புறப்படுகின்றேன்'

'சரி நேரிலே பேசிக்கொள்ளலாம் வா' என்று கூறி விடைபெற்றார்.

'சின்னையா குட் நியூஸ். வேலைகளை முடித்துவிட்டு பிரயாணத்துக்கு ஆயத்தம் செய்யுங்கள். நீங்களும் என்கூட புறப்படுகின்றீர்கள். என் தங்கை சந்திரிக்கு திருமணம்' என்று சிறுபிள்ளை போல குதூகலித்தான்.

'ஏன் தம்பி நானும் வரணுமா?'

'ஏன் வரக்கூடாதா?'

'பெரிய இடங்களில் என்னைப்போல ......'

'சின்னையா அப்படி நீங்கள் நினைக்கக்கூடாது. நான் உங்களைப்போல யாரும் மற்ற அனுதை என்பது உங்களுக்கே தெரியும். நீங்கள் எப்படிப் பட்டவர் என்பது எனக்குத் தெரியும் உங்கள் மனநிலை எனக்குப் புரிகின்றது. நீங்கள் என் தகப்பன், தாய் இருவருடைய சார்பிலும் தான் வருகின்றீர்கள். வேலையாளாக அல்ல'

'தம்பி தம்பி என்னை இப்படியெல்லாம் வார்த்தைகளால் கொல்லாதீர்கள். தெருவில் கிடந்தவனுக்கு இத்தனை கௌரவமா? என்றுதான் நினைத்தேன் கேட்டேன். நான் உங்கள் காலில் செருப்பாக இருப்பதையே விரும்புகிறேன் தம்பி' என்றுன் கண்ணீர் மல்க.

'சின்னையா நீங்கள் எல்லாவற்றிலும் உயர்ந்து நிற்கிறீர்களே தவிர குறைந்து போகவில்லை. நான் எங்கே சென்றுலும், எங்கே வாழ்ந்தாலும் நீங்கள் என்னுடன்தான் இருக்கவேண்டும். வேறு கதையே வேண்டாம்' என்று கூறிவிட்டு காலைக் கருமங்களிலீடுபட்டான்.

அன்று வந்த கடிதங்களில் சந்திரிகா, சமரசிங்கா எழுதிய கடிதங்களும், கல்யாண அழைப்புக்களும் வந்திருந்தன. ரகுவரனுக்கு எல்லா விபரங்களும் நிறைவைத் தந்தன. ஆனாலும் சந்திரிகா எழுதிய ஒரு விடயம் அவன் மனதில் சிறு சஞ்சலத்தைத் தோற்றுவித்திருந்தது.

அருண்மொழியின்மீது சந்திரிகாவுக்கும் அவள் குடும்பத்தினருக்கும் ஏன் அப்படி ஒரு பிரியம் ஏற்பட்டது என்பது அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது. அவளுடைய புற அழகும், அதிகம் அலட்டிக்கொள்ளாத பழக்க சுபாவமும் அவர்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை யானுலும் அதனை அவர்களைப் போல அவனுல் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை

வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு நிகழ்ச்சி பற்றியும் நம் மதிப்பீடு எப்படிப்பட்டதாக இருந்தாலும், நிகழ்ந்து விட்ட உண்மைகள் யதார்த்தமானவையாகவே விளங்குகின்றன. அவை நல்லன என்றே தீயன என்றே எதிர்காலத்தில்தான் பதில் கிடைக்கலாம். இவற்றை விடுத்து பொறுப்புக்களிலிருந்து விலகி நேர்கோடாகவே செல்வதில் அர்த்தமில்லை என்றும் தோன்றியது. சிந்தித்தான், முடிவு தெரியாத நேர்கோடுதான் தோன்றியது ரகுவுக்கு.

அவனுடைய சிந்தனைப் புயலைக் கலைக்க வந்தவன் போல 'ஹலோ சார் குட்மோனிங்' என்று கூறியவாறே வந்து சேர்ந்தான் சிறீ.

'குட்மோனிங் சிறீ, எங்கேயப்பா பலநாட்களாக ஆளையே காணேம்? எனக்கும் சொல்லாமலே 'ருன்ஸ்வர்' வாங்கி விட்டாய் என்று நினைத்தேன்'

'அப்படியெல்லாம் நடந்துக்க மாட்டேன் ரகு. பெரிய சிக்கலில் மாட்டிக் கொண்டிருக்கிறேன்,

'உனக்கு அப்படி என்ன சிக்கல் ஏற்பட்டது?'

'லீவ் புரப்பிளம்'

'வெரிக் குட். எனக்கும் அப்படி ஒரு பிரச்சனை நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்னுடைய பிரச்சனைக்கு என்ன முடிவு எடுப்பது என்று திண்டாடிக் கொண்டிருக்கின்றேன். அது மட்டுமில்லை, யூ நோ சந்திரி அவளுக்கு கல்யாணம். நான் இன்று புறப்பட்டாகணும். அதற்கிடையில் என் மனப்போராட்டத்துக்கும் முடிவு கட்டணும். நீ வந்ததும் நல்லதாய் போச்சு' என்று கூறியவாறே தலைமைக் குமாஸ்தா ராஜலிங்கத்துக்கு கவனிக்க வேண்டிய விடயங்கள் பற்றி கூறிவிட்டு சிறீயுடன் தனது விடுதிக்குப் புறப்பட்டான் ரகுவரன்.

நண்பர்கள் இருவரும் தேநீர் அருந்தியவாறே பல்வேறு விடயங்களையும் ஆராய்ந்தனர். சிறீ தன்னுடைய வாழ்க்கைப் பிரச்சனை பற்றிய விபரங்களைக் கூறினான். அவன் கூறியவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டே வந்த ரகுவரன் சிறீயின் மனப் போராட்டத்தை ஊகித்துக் கொண்டான்.

'ஏன் சிறீ நீ யாரையாவது விரும்பியிருக்கிறியா?'

'ஆமா ரகு. ஆனுல் இது ஒரு தலைக்காதலாயிருக்குமோ என்பதுதான் என் பிரச்சனை'

''வட்டு யூ மீன்''

''ஐ மீன்... எனக்கு எப்படிச் சொல்வதென்றே புரியவில்லை ரகு. என்னைப்பற்றி உனக்குத்தான் தெரியுமே. நான் யாரையும் 'லைவ் பாட்னராக' இதுவரை நினைத்தது கூடக்கிடையாது ஆனுல் இந்த விடயத்தில் இதுவரை நான் யாரிடமும் கூருத ஒன்றை உன்னிடம் கூறுகின்றேன். நீதான் உதவணும்''

''உனக்கில்லாத உதவியா? முயற்சிப்போம். ரெல் மீ கூ இஸ் தட் ?''சிரித்தான் ரகு

''உனக்கு தெரிந்தவள்''

''எனக்குத் தெரிந்தவளானல்...மிஸ் சிந்து''

''நோ''

''மிஸ் அருண்மொழி''

தலையைக் குனிந்து கொண்டான் சிறி. அவனைப் பார்க்கவே பரிதாபமாகவிருந்தது பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது பெண்களை தன்னுடைய நகைச்சுவையாலும், சேட்டைகளாலும் எவ்வளவு இம்சைப் படுத்தியிருப்பான். அப்படிப்பட்ட சிறி ஒரு பெண்ணை நினைத்து உருகுகிறுன். அவள் கிடைப்பாளா? மாட்டாளா? என ஏங்குகிறுன்.

''சிறி அவளுடன் இதைப் பற்றி எப்போதாவது கதைத்திருக்கின்றுயா? '' என்றுன்

''நோ...நோ''

''ஆல் ரைட். நானும் இது பற்றி உன்னுடன் கதைப்பதற்கே இங்கே கூட்டி வந்தேன் இந்தக் கடிதத்தைப் பார்'' என்று கூறி சந்திரிகா எழுதிய கடிதத்தை எடுத்துக் கொடுத்தான்.

கடிதத்தைப் படித்தவனுடைய முகத்தில் பல்வேறு உணர்வுகள் மாறி மாறி தென்படுவதை அவதானித்தான் ரகு. தர்மசங்கடமான நிலைக்குள் அவன் மாட்டிக்கொண்டு தவிப்பதை உணர்ந்தான். கடிதத்தைப் படித்து முடித்ததும் ''ஐம் வெரி ஸொறி ரகு நான்''...என்று தடுமாறினுன் சிறி.

''யூ பூல். எங்கள் குடும்பத்தவர்களுக்கு அவளைப் பார்த்தது முதலே அப்படிஒரு ஆசை ஏற்பட்டு போச்சு. எனக்கு அந்த நினைப்பே இல்லை. நாம நினைத்தபடி எல்லாம் வாழ்க்கை அமைந்து விடும் என்ருல் நிழலைத் துரத்திப் பிடிக்க முயற்சிக்கிறது போல நிகழ்காலத்தை தேடி ஓடிக் கொண்டேயிருக்க வேண்டி வந்திடும். என்னை பொறுத்த மட்டில் நமக்கு எது கிடைக்கணுமோ அது நிட்சயமாக கிடைக்கும். லைப் இஸ் லைக் தட் இதிலை வருத்தப்பட ஒன்றுமில்லை'' என்று கூறி முதல் நாள் நடைபெற்ற விடயங்களையும் சின்னையா கூறிய புத்திமதிகளையும் விளக்கினுன்.

''ரகு உன்னுடைய நல்ல மனதுக்கு நல்ல வாழ்க்கையை ஆண்டவன் நிட்சயமாக தந்தருளுவார்'' என்றுன் கண் கலங்கிய படியே

''தாங்கியூ மைப்ரண்ட் நிட்சயமாக உன் விருப்பம் நிறைவேற என்னுலானதை நான் செய்வேன். உன் மனம்போல வாழ்க்கை அமைய என்னுடைய நல்வாழ்த்துக்களை அட்வான்சாக இப்பவே தந்துள்ளேன் கோட் பிளஸ் யூ''என்றுன்.

''தாங்கியூ ரகு என் விடயத்தை விடு உன்னுடைய விடயம் இன்னதென்று கூறவில்லையே.

''கடிதம் படித்தாயே''

''இது தானு?... உனக்கு என்று ஒரு வாழ்க்கையை நீயே அமைத்துக் கொள்ள வேண்டாமா? சின்னையா கூறியது போல சிந்துவை நீ ஏன்...? மேலே தொடர முடியாது நிறுத்தினுன் சிறி.

ரகுவரன் மெல்லச் சிரித்தான். தன்னுடைய மனதில் அப்பொழுது நடந்து கொண்டிருக்கும் மனப்போராட்டத்திற்கு தன் கேள்விகள் மூலம் விடை காண முயற்சிக்கும் சிறியின் நுண்ணுணர்வைப் புரிந்து கொண்டவனுய்' சிறி... நீ... என்னை நன்கு புரிந்து கொண்டவன் என்பதால் கேள்வியை தொடராமலே நிறுத்தி விட்டாய். என்னைப் பொறுத்தளவில் வாழ்க்கையை நான் வெறுத்த நேரங்களும் உண்டு ஆனுல் வாழ்க்கை என்கிறது வாழ்ந்து தீர வேண்டிய ஒரு விஷயம் அதை இப்படித்தான் வாழவேண்டும் என்று சில வரைமுறையை கொள்கையை நியதியை அடிப்படையாக வைத்துக் கொண்டு வாழணும் என்று நினைக்கின்றேன். இவற்றை விடுத்து கற்பனையா மனசில சஞ்சாரம் பண்ணுறதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் நம்முடைய செய்கைகள் மற்றவர்களுக்கு நன்மை செய்யாவிட்டாலும் தீமை ஏற்படாதிருந்தால போதும் என்று நினைப்பவன் நான்'.

'எனக்குத் தெரிந்தவற்றைத் தானே கூறுகின்ருய். எனக்குத் தெரியாததை ஏதும் இருந்தால் கூறேன் ரகு.'

'வெல் என்னைப்பற்றியும் என் முன்னேற்றம் பற்றியும் என் வளமான வாழ்வுபற்றியும் தான் இதுவரை என் சிந்தனைகளிருந்தன எனக்கும் ஒரு வாழ்க்கை, ஒரு துணை, ஒரு எதிர்காலம் இருக்கு என்பதை ஒவ்வொருவரும் அறிவுறுத்தும்போது நான் அது பற்றி சிந்திக்காமலிருக்க முடியவில்லை இரவு பூரா சிந்தித்தேன்...... பதில் என்னவோ நேர்க் கோடாகவே இருக்கின்றது '

'சிந்து உன்னுடன் பழகுவதிலிருந்து உனக்கு எதுவித மான......, கேள்வியை இடைநிறுத்தி ரகுவை உற்றுப்பார்த்தான் சிறி.

'சிந்து என்னிடம் படித்தவள் என்னைப்பற்றி நன்கு தெரிந்து கொண்டவள். ஆகவே அவள் என்னுடன் பழகுவதை வித்தியாசமாக எடுத்துக்க என்னுல முடியலை. அந்நியப்பட்ட ஒருத்தி என்னுடன் பழகினுல் அதில் ஏதாவது உணர்வு பூர்வமான அணுகுமுறையிருக்கலாம். சின்னையா கூறிய பின்புதான் அதுபற்றி சிந்தித்தேன். அறிவுபூர்வமாக பார்க்கும் போதும் சிந்து நல்ல பெண் மட்டுமல்ல என்னுடன் சகல விடயத்திலும் ஒரு மித்து நடக்கக்கூடிய குண இயல்புகளைக் கொண்டவளாகவே தென்படுகின்ருள். என்னுடைய பதவிகாரணமாக எனக்குத் தரும் மதிப்பை, தவருன முறையில் கற்பனை பண்ணி விடக் கூடாதில்லையா?'

'ரகு உன்னை கணவனுக அடைய யார்தான் விரும்ப மாட்டார்கள். மாட்டேன் என்று சொல்ல யாருக்கு மனம் வரும். உன் தகுதியை நீ அறிந்து கொண்டுதான் பேசுகின்ருயா?'

'யூ ஹாவ் மிஸ்டேக்கிங் மீ சிறி என்னைப் பொறுத்தளவில் நான் பெரிதாயிருக்கலாம். நான் ஏற்கனவே கூறியிருக்கின்றேன் நம் செய்கையில் மற்றவர்களுக்கு நன்மை பயக்காவிடினும் தீமை பயக்காதிருக்கணும்'

'எதற்கும் நீ வீட்டுக்கு போய் சந்திரியின் திருமணத்தை முடித்துக்கொண்டு வா. அதன் பின்பு இதுபற்றி நாம் கதைப்போம்.'

நோ நோ - நல்ல காரியங்களைப் பின்போடக் கூடாது நான் ஈவினிங் புறப்படுவதாய் தானிருந்தேன். நைட் றெயினில் போகலாம். நீ ஒரு சிறு உதவி செய்'

'என்ன ரகு?'

'இறிக்கேசன் ஆபிசில் கணேசுவிடம் நான் கேட்டதாக ஜீப்பை எடுத்து வா- சின்னையா சிறிக்கும் சேர்த்து சாப்பாடு போடுங்ககல்யாணச் சாப்பாடாகவே இருக்கட்டும்.'

'தம்பி நிட்சயமாய் உங்கள் முயற்சி வெற்றி பெறும்.'

'ஒரு கல்யாணத்தை நிட்சயித்துவிட்டு ஒரு கலியாணத்துக்குப் புறப்படுவோம் சின்னையா'.

'வந்து மற்றதையும் பார்க்க வேண்டும் தம்பி'

'நடக்க வேண்டும் என்ருல் நடந்தே திரும் இன்னையா'

'நிட்சயமாய் நடக்கும் தம்பி, என்று சிரித்தான் சின்னையா.'

வாசலில் ஜீப் வண்டி வந்து நின்றதும் வீட்டுக்கதவைத் திறந்து கொண்டு ஓடிவந்தார் மாசிலாமணி வண்டியிலிருந்து இறங்கிய ரகுவரனைக் கண்டதும் 'வாங்க ஐயா' என்று வரவேற்ருர்.

(14-ம் பக்கம் பார்க்க)

# தற்காலக் கலைக்கொள்கைகள்

## [5] சர்ரியலிஸம்

ஆறுவாரக் கட்டுரை

கலாநிதி சோ. கிருஷ்ணராசா

1919-ம் ஆண்டிலிருந்து பிரான்சியக் கலை-இலக்கியக் கொள்கையாக தோன்றி வளர்ந்து வந்ததொரு கலைப்பாணியே சர்ரியலிஸம் என அழைக்கப்படுகிறது கலை-இலக்கிய வரலாற்றில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்திய இக் கலைக் கொள்கையானது, ஓவியத்தை அடிப்படையாகக் கொண்டு தொடங்கப் பெற்றதாயினும், அது தத்துவம், கவிதை, இலக்கியம், மற்றும் பிற நுண்கலைகளிலும் செல்வாக்குச் செலுத்தியது. சர்ரியலிஸம் கலைக் கொள்கைகளிலிருந்தும் அடிப்படையில் வேறுபட்டதொன்றாகக் காணப்படுகிறது. சர்ரியலிஸ்டுக்கள் மனித வாழ்க்கையில் முழுமையான மாற்றத்தை வேண்டி நின்றவர்களாவர். மனப்பதிவு வாதிகள், ஃபோவிஸ்டுக்கள், அரூபவாதிகள் என்பவர்களைப் போலல்லாது மனித இருப்புப் பற்றிமுற்றிலும் வேறுபட்ட கண்ணோட்ட முடையவர்களாகக்காணப்பட்டனர்.

சர்ரியலிஸத்தை அது தோன்றிய காலப்பகுதியை மனதில் கொண்டே மதிப்பிடுதல் வேண்டும். இக்கலைக் கொள்கையானது முதலாம் உலகயுத்தம் தோன்றிய காலத்தே உருவானதொன்றாகக் காணப்படுகிறது. உலகயுத்தம் விளைவித்த அனர்த்தங்களிற் கெதிரான கலைஞர்களின் எதிர்ப்புணர்வு சர்ரியலிஸத்தின் வடிவத்தில் தோன்றியது. உலக யுத்தத்தின் விளைவாக தமது நாட்டைவிட்டு வெளியேறிய கவிஞர்கள், ஓவியர்கள், சிற்பிகள் என்ற பல்திறத்தினரும் சூறிச் நகரில் ஸ்தாபன ரீதியாக ஒன்றுசேர்ந்து 'டாடா' என்ற பெயரில் சில வெளியீடுகளை வெளியிட்டனர். டாடா என்பது விளையாட்டுக் குதிரை எனும் கருத்தைக் கொண்டது. மரபுவழியானதும், பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்ததுமான விழுமியங்கள் அனைத்தையும் டாடாயிஸ்டுக்கள் நிராகரித்தனர். சமூகத்தை முன்னேற்றுவதற்காக எனக் கூறிக் கொண்டு முன்வைக்கப்படும் எல்லாவிதமான வாதங்களும் (இசங்களும்) உண்மையில் முன்வைக்கப் படுபவர்களின் நலன்களைப் பேணும் இரகசியத்திட்டங்களை கொண்டுள்ளவையாகும், சுயநல நோக்குடைய இசங்கள் எல்லாவற்றையும் நாம்நிராகரிப்போம். பாழ் அல்லது வெற்றிடமே எமது குறியீடு என ஜோர்ஜ் குரோசி என்ற பேர்ளினின் டாடா குழுவைச் சார்ந்தவர் கூறுகின்றார்.

சூறிச், பேர்ளின் நகரங்களில் டாடாயிஸ்டுக்கள் தீவிரமாக இயங்கிய காலப்பகுதியிலே பரிசில் வாழ்ந்த இளம் கலைஞர்களும் எழுத்தாளர்களும் தம்மை நவீனர்கள் என அழைத்துக் கொண்டு எல்லா வகையான மரபுகளையும் புறக்கணித்து எங்கும் நவீன மயமாக்கமேஎமதுநோக்கம் எனக் கூறிக்கொண்டியங்கினர். இவ் விளைஞர் குழுவிற்கு உந்து சத்தியாக திகழ்ந்தவர் அப்போரினைர் என்பவராவர் இவர் 1917-ல் தனது நண்பரொருவர்க்கு எழுதிய கடிதமொன்றில் சர்ரியலிஸம் என்ற சொல்லை தம்மியக்கத்தைக் குறிப்பிடும் சொல்லாகப்பயன்படுத்தினார்சர்ரியலிஸம்என்பது Super Realism என்றும், மிகை யாதார்த்தம் என்றும் பொருள் தரும்.

டாடாய்ஸ்டுக்களின் முன்னோடிகளில் ரிஸ்டன், ரசாரா என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களனைவரும் போரிற் கெதிரான புரட்சிவாதிகளாக விளங்கினர். போர் ஒரு அர்த்தமற்ற செயல் என இவர்கள் கருதினர். அது எல்லாவகையான விழுமியங்களையும் அழித்துவிடுகிறது.

பிரான்சிய டாடாயிஸ்குக்களில் அரகான், பேரிட்டன், எலுவாட், பேரெட் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். போர் விளைவித்த அனர்த்தங்கள் மனிதரிடையே உளவியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. அர்த்தமில்லாத மதிப்பீடுகளுக்காக பெருந்தொகை மக்கள் செய்த தியாகம் கலைஞர்களைப் பெரிதும் பாதிப்பிற்குள்ளாக்கிற்று, அறிவு பூர்வமான சிந்தனையும் தருக்கமும் போருக்கும் போரின்பின்னரான சீரழிவு நிலைக்கும் காரணமாகவிருந்ததென கற்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டன.

சர்ரியலிஸம் மனிதர்களுக்கு வழங்கப்பட்ட புதிய ஒழுக்கம் எனவும், அறிவைப்பெறுதற்குரிய புதிய வழி எனவும் எடுத்துக் காட்டப்பட்டது. ஆந்திரே பிரெடோன சர்ரியலிசத்தை ஓர் அறிக்கை முயற்சியாக வரையறுத்தார்.

இரண்டு உலகயுத்தங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தோன்றி வளம்பெற்ற இச்சிந்தனையானது 1923—1925ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தீவிரமாக வளர்ச்சி பெற்றது. மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிய சார்ரியலிஸ்டுக்கள் தமது வெளியீடுகள், பிரசுரங்கள் என்பனவற்றை பரிஸ் நகர் முழுவதும் பரவலாக விநியோகித்தனர் வழக்கிலிருந்துவந்த பழக்கவழக்கங்கள், விழுமியங்கள் என்பனவற்றுக் கெதிரான விமரிசனங்கள் முன்வைக்கப்பட்டன. பாப்பாண்டவர்விமர்சிக்கப்பட்டார் சிந்தனைச் சுதந்திரம் என்பதன் பெயரில் வழக்குரை மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. குடும்ப வாழ்க்கை, அரசு, சமயம் என்பனவற்றுக் கெதிரான புரட்சிகர சுலோகங்கள் முன்வைக்கப்பட்டன. இவர்களது வழக்குரை மன்றங்களில் சுய-அழிப்புக் கொள்கை பரிந்துரைக்கப்பட்டது.

சர்ரியலிஸ ஆராய்ச்சிகளுக்கும், கண்காட்சிகளுக்குமான பணியகம் 1938-ல் உருவாக்கப்பட்டது. இதில் 14 நாடுகள் பங்குபற்றின 1930 வரை பிக்காசோவின் ஓவியங்களும் சர்ரியலிஸ வெளியீடுகளை அலங்கரித்தன. முதலாம் உலகயுத்தகாலங்களில் யோன்மைரோ, அந்திரே மைசன், மாஹ்ற ஒனேஸ்ட் என்போர்களது படைப்புக்களும் சர்ரியலிஸ வெளியீடுகளில் இடம்பெற்றன. 1930-ஆண்டில் சமீபத்தில் மரணமடைந்த சல்வடோர் டாலியும் இக்குழுவுடன் இணைந்து கொண்டார்.

இரண்டாம் உலகயுத்த காலத்தில் சர்ரியலிஸ குழு குலைந்தது. பேரோட் மெக்சிக்கோவிற்கும், ஏனையோர் பிற அமெரிக்க நாடுகளுக்கும் சென்றனர். புதிய உலகிலும் சர்ரியலிஸம் பரவிற்று, 1946ல் பேரெட்டன் பிரான்சிற்கு திரும்பினார். பிரான்சிய கலாசாரத்தின் சிறப்புமிக்க பிரதிநிதியாக இவர் பிரான்சில் கௌரவிக்கப்பட்டார். இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னரும் கூட சர்ரியலிஸம் மிகப் பரந்தளவில் செயற்பட்டது. 1954-ம் ஆண்டுவரை கிரேக்கம், குவாட்டமாலா, ஆஸ்திரியா, கனடா, பெல்ஜியம், பிரேசில், போன்ற நாடுகளில் சர்ரியலிஸ சிந்தனைப் போக்குக் காணப்பட்டது.

இருபதாம் நூற்ருண்டின் முற்பகுதியில் சமூக நியமங்களுக் கெதிராக குழப்பத்தை விளைவித்தசர்ரியலிஸம் இன்று சகிப்புத்தன்மையுடன் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. பெரிட்டின், எலுவாட் அரகான், பேரேட் போன்ற சர்ரியலிஸ்டுக்களின் படைப்புக்கள் பிரான்சிய இலக்கியத்தில் அதிகார பூர்வமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. அழகியல் ஒழுக்கவியல், கற்பிதங்களுக்கப்பால் தருக்கக் கட்டுப்பாடுகள் எதுவுமில்லாத சிந்தனை முறையே சர்ரியலிஸம் என பெரிட்டன் தனது அறிக்கையில் விளக்கினார்.

சர்ரியலிஸ்டுக்களின் ஓவியங்கள் வினோதமான முறையிலமைந்தன. இவர்களது ஓவியங்கள் கனவுநிலை வருணனைகளாயிருந்தன. பழக்கப்பட்ட வழி நடந்துவந்த ஓவிய ரசனையையும், சிந்தனையையும் சர்ரியலிஸம் உலுப்பியது. அகமுக நோக்கு வலியுறுத்தப்பட்டது. தருக்கரீதியான சிந்தனை காரணகாரிய ஆராய்ச்சி என்பன புறக்கணிக்கப்பட்டு, ஆழ்மனத்தை அவதானித்து அதனை ஓவியமாகவும், கவிதையாகவும், இலக்கியமாகவும், சிற்பமாகவும் சர்ரியலிஸ்டுக்கள் படைத்தனர்.

கலை-இலக்கிய சிந்தனைக்குரிய புதிய வழிமுறைகளை உருவாக்கியதாக சர்ரியலிஸ்டுக்கள் தம்மைப்பற்றிக் கூறிக் கொள்கின்றனர் பிராய்டின் உளவியற் கருத்துக்களால் கவரப்பட்டு அவரை மிகவும் புகழ்ந்தார்கள் சில சர்ரியலிஸ்டுக்கள் கலை-இலக்கிய உளமருத்துவர்களாகவே செயற்பட்டனர். கலை-இலக்கியங்களின் ஊற்றுக்கனவு எடுத்துக் காட்டப்பட்டது கனவும் அதன் முரண்படு நிலைகளும் கலை-இலக்கிய அனுபவத்திற்குரியமுக்கிய அம்சமாக எடுத்துக் காட்டப்பட்டது. இதற்கு விழிப்புநிலை அனுபவங்களுக்குரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

சர்ரியலிஸ ஓவியங்கள் பல கனவுகளாகவும், கனவு நிலை வெளிப்பாடுகளாகவும் காணப்படுகின்றன. மாஹ்ற ஏனேஸ்ட். டாலி போன்றவர்கள் இவ்வாறு பிரபல்யம் பெற்றவர்களாவர். கனவின் தன்மை, உயிர்துடிப்பற்றவாழ்க்கை, பொருந்த முடியாதவைகளின் இணைப்பு என்பன இவர்களது ஓவியங்களின் முக்கிய அம்சங்களாக விளங்கின. அதாவது ஓவியத்தின் பொருள் அதற்குரிய இயல்பான சூழ்நிலையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு பொருந்தா சேர்க்கைகளுடன் இணைக்கப்பட்ட முறையில் வரையப்பட்டது. எனினும் சர்ரியலிஸ்டுக்களின் ஓவியங்களில் ஓவியப் பொருளை இலகுவில் இனங்கண்டு கொள்ளக் கூடியதாயும், பெயரிடக் கூடியதாயும் உள்ளது. பல நூற்றுண்டு காலமாக ஓவிய வழக்கிலிருந்து வந்த காட்சிக்குரிய அடிப்படைகளைத் தகர்க்கும் வகையில் இவர்களது ஓவியங்கள் இருந்தன. எல்லோராலும் அறியப்பட்ட பொருட்கள் சர்ரியலிஸ்டுக்கள் கையில் எல்லையில் கற்பனை பொருந்திய விசித்திர வடிவங்களாக மிளிர்ந்தன இதுவரை கற்பனையின் எல்லைகட்குட்படாதிருந்த உருவங்கள் சுவைஞரின் ரசனையில் மிகைப்படுத்தப்பட்ட யதார்த்தமாயிற்று.

சர்ரியலிஸ்டுக்களின் கலை-இலக்கிய முயற்சியில் குறிப்பிடதக்க பிறிதொரு துறை கவிதையாகும் கவிதை அடிமன எண்ணங்களை வெளிக்கொண்டுவர சிறந்ததொரு சாதனம் என இவர்கள் நம்பினர்.

# சத்தியசீலனின் 'பாட்டு விளையாட்டு'



நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் சத்தியசீலனின் அருமையான ஆக்கம் ஒன்று நமது சிறுவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. (பாஆக்கத்தை மட்டுமல்ல நூல் ஆக்கத்தையும் சேர்த்துத் தான் குறிப்பிடுகிறேன்.)

பாட்டு விளையாட்டு என்ற வண்ணத் தமிழ் மலர் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக மலர்ந்திருக்கிறது

தேர்விலே பொருத்தமான சொற் கொண்டு கீறிட்ட இடம் நிரப்பும் திறம் தெரிந்த சிறுவருக்கு, நன்பாட்டுப் புலவனுகிய சத்தியசீலன், தன் பாட்டில் கீறிட்ட இடம் விட்டு அதை நிரப்புமாறு கேட்டிருப்பதே இந்நூலின் முதலாம் பக்கம். ''நிரப்பினுல் சிரிப்பு வரும் திருப்புங்கள் பக்கத்தை'' என்று கூறி படத்துடன் பாட்டில் விடை கூறுவதே இரண்டாம் பக்கம்.

1985-86 ஆண்டுகளுக்கான சிறந்த சிறுவர் நூல் விருதை வென்ற 'கப்பல்' என்ற நூலில் ஆசிரியர் கையாண்ட புதிர்ப் பா உத்தி இந்நூலில் இடம் பெற்றாலும் சிறுவரை பாட்டுடன் விளையாட வைக்கும் வேறு உத்திகளையும் வெற்றிகரமாக பரீட்சித்தும் பார்த்துள்ளார் பாவலன் சத்தியசீலன் உதாரணமாக ''பாட்டை விடையுடன் இணையுங்கள்'' என்ற பகுதியைக் குறிப்பிடலாம்.

நிரையாய் வருகிற பூ-நிலத்தின் கீழ்ச்சேர்க்கிற பூ-கரும்பு என்றால்விரும் பூ-கடித்துவிட்டால்கடுக்கும்பூ-என்ன பூ? இது வினப்பகுதி. குறும்பு, நறும்பு எறும்பு-இது விடைப்பகுதி. சத்தியசீலனின் பாட்டு விளையாட்டிலே யானை போன்ற பெரிய விலங்குடன் நகர் உயிரான நத்தை, ஆமை போன்றனவும் பங்குபற்றுகின்றன. முன்பு ''புத்தியால் வென்ற நத்தையார்'' என்பதை படைத்து நமது சிறுவர்களுக்கு நகைச்சுவையூட்டிய சத்தியசீலன் இந்நூலில் இக்ளு வீட்டை இழுத்துச் செல்லும் எஸ்கிமோவர் யார் தம்பி? என்று புதிர் போடுகிறார். உண்மையில் சத்தியசீலனின் 'மிக்கிமவுஸ்' நத்தையார் தான் போலும். கவச வாகனக் காரரையும் நாம் மறந்துவிடமுடியாது ஆமாம் அவர் தான் ஆமை நகர்ந்து வருகிற மை-நாம் தொட்டு எழுதாமை தம்பி பிடித்து விட்டால் - தனக்குள் ஒளிக்கிறமை என்று வருணிக்கப் படுகிறார் இந்த ஆமையார் இப்படி அருமையான ஓசை வண்ணங்களை அள்ளி வழங்குகிறார் ஆசிரியர்.

''செட்டை மீது பல வண்ணம் - சின்னப் பூவே என் கிண்ணம்-தேனைக் குடிப்பது தான் எண்ணம்-தேடித் திரிகின்றான் அண்ணன்'' இது ஒரு வகை. ''காற்றை ஊதி விட்டண்ணு-கழுத்தில் நூலைக் கட்டண்ணு-'' இது இன்னெருவகை. ''காலடியில் சோடிப்பூ - காலுக்கும் சோடிப்பு-'இது பிறிதொரு வகை.

'அந்தக்காலம் ராஜாக்கள் அமர்ந்து செல்லும் கரியப்பா - இந்தக்காலம் பிள்ளைகளை முதுகில் ஏற்றும் பெரியப்பா' என்று யானையார் தன்னைத்தானே அறிமுகம் செய்வது அருமையாய் இருக்கிறது பூட்டாத பூட்டு (நாய்) எலிக்குப் பொறி (பூனை), சாகுமட்டும் நேரம் சொல்ல சபதம் போட்டார் சின்ன மாமா (சேவல்)போன்ற உருவகங்கள் மிக அருமை. 'புளு கில் ஊதிவிட்டாயே போய்ச்சு என் வயிறு...... பட்டாசே' என்ற உடைந்த பலூனின் ஓலத்தை சிறுவர் மறந்துவிட முடியுமா? இப்படி மென்சந்தங்கள்-இன்சந்தங்கள்-நகைச்சுவை - புதிர்ச் சுவை இவற்றின் சுவைக் கூட்டே பாட்டு விளையாட்டு என்றால் அது மிகையாகாது.

ஆனந்தன்

வேகமாக விற்பனையாகின்றது!

AL, G.A.Q., B.A.

அரசியல்

மாணவர்களுக்கான வெளியீடு

''நவீன அரசியற் கோட்பாடுகள்''

அம்பலவாணர் சிவராசா M.A.

வெளியீடு:

பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

கிடைக்குமிடங்கள்:

பூபாலசிங்கம் புத்தகசாலை

ஸ்ரீ லங்கா புத்தகசாலை

90502

இவ்வாரச் சிறப்புக் கட்டுரை

# தமிழ்க் கலாசாரம்

பண்டிதர் மு. கந்தையா

## 'கல்' அர்த்தம்

இலக்கண ரீதியாக, சமஸ்கிருதத்திலுள்ள 'கல்' என்ற வினையடியில் தோன்றியுள்ளது. 'கலா' என்றபதம்; தமிழிலுள்ள 'கல்' என்ற வினையடியில் தோன்றியுள்ளது. கலை என்ற பதம் இரண்டுஞ்சுட்டும் பொருளுண்மை கலாசாரம் என்பதன் முதற்பதத்தில் உண்டு. அப் பொருளுண்மை, பற்று, தாங்கு, மேற்கொள், அறி, அவதானி, நினை, கிண்டு, கிளறு என இருப்பதாக அகராதிகள் பகரும். முன்னைய ஆறும் சமஸ்கிருத அகராதிகளிலும், பின்னைய இரண்டும் தமிழ் அகராதிகளிலும் காணப்படும்.

## கலாசாரம் என்றால் என்ன?

நடைமுறை, வாழ்க்கையில் மனிதர் வியவகாரங்கள் ஒவ்வொன்றையும் 'கலை' சார்த்திக் கூறுதல் பிரசித்தமாயிருக்கின்றது. அன்றாட வயிற்றுப் பாட்டுக்குரிய சமையல் முதற்கொண்டு மானிட வாழ்வின் உயரிலட்சியமான சிவயோகம் ஈறாக எல்லாம் கலைகளே. சமையற்கலை, மனையியற்கலை, குடும்பக்கலை, வாழ்க்கைக்கலை, அறிவுக்கலை, செயற்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, தொழினுட்பக்கலை, சங்கீதக்கலை, நடனக்கலை, நாட்டியக்கலை, பக்திக்கலை, யோகக்கலை என்ற வழக்குகள் பிரபல்யமானவை. இங்ஙனமாதலின் மனிதரின் நடைமுறை வாழ்க்கையின் சார்பிலும், அவர்தம் தொழில்நுட்பவிருத்தி சார்பிலும், அறிவு, உணர்வு, சிந்தனைப் போக்குகள் சார்பிலும், ஆக்கத்திறன் சார்பிலும், மனித உயர் பண்புகளான அன்பு, நாணம், மானம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, தூய்மை ஆகியவற்றின் சார்பிலும், வாழ்விலட்சியம் பற்றிய விளக்கத்தின் சார்பிலும், ஆத்மிக, தெய்விக, உறவு, செறிவுகளின் சார்பிலும் அவர்கள் வாழ்க்கை விசாலங்களாக அவதானிக்கப்பட விருக்கும் பண்பாட்டு விசேடத்தன்மையே கலாசாரம் எனலாம். இது உலகில் எவ்வினத்தார்க்கும் ஒக்கும். இவ்வகையில் தமிழர் சார்பில் அமையும் பண்பு விசேடங்கள் தமிழ்க் கலாசாரம் எனலாகும்.

## தமிழ்க் கலாசாரத் தொன்மை

'கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி' எனத் தமிழ்க்குடி பற்றிக் கல்லாடம் என்ற நூல் காட்டும் உண்மையும் எப்படியோ இருந்திருக்கிறது. இதை ஆராய்ந்து நிறுவுவது கஷ்ட சாத்தியம் என்றால், ஏதுசாதன ரீதியில் இதை நிராகரித்து விடுதல் கஷ்டமுற்றும் அசாத்தியம் என்ற நிலை இன்றையபூசர்ப்ப, பூச்சரிதவியல் ஆய்வுகளால் நாளுக்கு நாட் பிரபல்யமுற்று வருதலுங் காணப்படும். இலெமூரியாக் கண்டம் பற்றிய ஆய்வியல் மக்களினம் முதலிற்றோன்றி வாழ்ந்தது இக்கண்டத்திலேயே என்றும் அப்பழைய நிலப்பரப்பிற் காலத்துக்காலம் நிகழ்ந்த சலப்பிரளயங்களாற் கடலுட்பட்டுத் துஞ்சியது போக எஞ்சியுள்ள நிலப்பாகமே இன்றைய தமிழகமும் அதுசார்ந்த பகுதிகளுமென்றும் இமயமலைப் பிரதேசந்தானும் இதற்குப் பின்னொரு காலத்தில் மிதந்த பகுதியேயென்றும் இவ்வாய்வியல் தருங் கருத்துக்கள் அறிஞர் அங்கீகாரம் பெற்றுள்ளன. கிறிஸ்தவ சகாப்தத்திற்கு வெகு தூரம் முற்பட்ட ஆதி. நாகர் முதல் இன்றைய தமிழகத்தார் வரை குடிபெயர்ந்தடிபிரியாது இப்பகுதியிற் காலூன்றி நிலையுற்றுக் கொப்போடிக் கிளை பெருகிய மனித குலமே தமிழ்க்குலம் என்ற விளக்கமும் இவற்றால் வலுவுற்றிருக்கின்றது. அகஸ்திய முனிவர் தமிழைத் துலக்கமுறுத்தினர். அவர் வாழ்சூழலாகிய பொதிகை தமிழின் பிறப்பிடம் அதனைத் தன்பாற்கொண்டிருக்கும் பாண்டிநாடு பழந்தமிழ்ப்பூமி என்ற கருதுநிலைகளும் சர்வ சாமான்யமாகவே இருந்து வருவன.

இவ்வளவு பழமையுள்ள நாட்டுக்குடிகள் என்ற அளவில் தமிழர் கலாசாரத்தின் தொன்மையும் சீர்மையும் வெகுவாகப் போற்றப்பட்டு வந்திருந்தல் கண்கூடு. அறியப்படாத அப்பழங்காலந் தொட்டு அறியப்பட்ட காலமாகிய சரித்திர காலம்வரை இத்தமிழ்க்குடிகளிடை நிலவிய பண்பாட்டு விசேட அம்சங்கள் அனைத்தும் செவ்வையாகத் தொகுத்துக் கோக்கப்பட்ட விதத்தில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்ற பெயர்களில் அமைந்திருக்கும் வாய்ப்பும் இக்குலத்துக்கே தனித்துவ உரிமையாயிருக்கிறது. இவைகள் பழந்தமிழிலக்கியங்கள் என்ற வகையில் விமர்சனம் பெறுதலை விட பண்டைத் தமிழர் கலாசாரப் பதிவேடுகள் என்ற வகையில் விமர்சனம் பெறுதல் பன்மடங்கு விசேடமாம் என்பதில் தவறில்லை.

நம்முன்னோடிகளாகிய அத்தமிழர் எளிய முறையில் இனிமையாகத் தமது வாழ்வியலை அமைத்துக் கொண்ட முறை இவற்றில் விசேட முக்கியத்துவம் பெறும். சமூகம் நாடு; இம்மை மறுமை; இலௌகிகம் ஆத்மீகம்; அன்பு அருள்; அறம் மறம் ஆகியன பற்றி அவர்கள் கொண்டிருந்த சிந்தனைத் திறன்களும் அவற்றைச் செயற்படுத்து நெறிகளும் பற்றி இவை தருந்தகவல்கள் பல்விதப் புலனுணர்வுச் சுவைச் சாதனங்கள் பல்கிப் பெருகியுள்ள இக்காலத்திலும் தனிச் சுவையின்பந் தருவனவாகவேயுள்ளன.

## இவை கலைகள் ஆமாறு

பொருளமைவு ஒருபுறமாக அதன்பால் வியப்பை யோ நயப்பையோ கவர்ச்சியையோ ஊட்டும் ஓரம் சமும் பொருளோடிருப்பதுண்டு. செயற்றிறன் சிந்தனைத் திறன்கள் சார்பாகவும் அத்தகைய தொன்றிருப்பதுண்டு. கட்டடமொன்றில் அதன் நிர்மாணத்தொழிலமைவு ஒருபுறமாக அதிலோர்கெம் பீரத்தன்மை, மனதைக் கவரும் பாங்கு போன்ற அம்சமும் இடம்பெறும். இது போலவே அனைத்தும். இவ்விதமான இந்த இரண்டாவதம்சத்தையே விதந்து காட்டும் விதத்தில் ஒரு காரண இடுகுறி போல் ஆட்சி பெற்றிருக்கும் வலுவும் கலை என்ற இச்சொற்கு வாய்ந்திருத்தலை அவதானிக்க முடிகிறது. மனித வியவகாரங்களாக அமையும் மேற்குறித்த சமையல் முதலாயவற்றில் கலைப் பிரயோகம் இடம்பெற்று இவை சமையற்கலை முதலியனவாக வழங்கப் பெற்றதேன் என்ற விசாரத்துக்கு இவ்வகையிலேயே பதில் காணல் சாலும். மேற்குறித்த பழந்தமிழிலக்கியச் செய்யுள் தோறும் இவ்வாறு இதை விளங்குதற் கேற்ற ஆதாரம் இருத்தல் தவறாது.

குறுந்தொகைச் செய்யுளொன்று. சாதாரண சமையல் அச்செய்யுள் கருதும் பொருள். அது அங்கு எவ்வாறமைகிறது எனக் காணுதல் மூலம் அவ்வுண்மைக்கு உதாரணம் காணும் வாய்ப்பிருத்தலைக் கவனித்தல் நலம்.

அப்பாவிக் கிராமிய நங்கை ஒருத்தி சமையல் செய்கிறாள். கண்ணினுமினிய தன் காதலன் உண்ணுமாறுண்டு உவக்குமாறுவத்தலைத் தன் கண்ணினாற் கண்டு இறும்பூதடைய வேண்டும். இவ்வெண்ணத் துடிப்பு அவள் சமையல் நிகழ்ச்சிக்குப் பின்னணிக் கீதம் இசைக்கின்றது தயாரித்தது தயிர்க் குழம்பு. இடை நெகிழ்ந்து இடையிற் கட்டிய துகில் நழுவி விடப்பண்ணுமளவுக்குக் குழைந்து போய் விடுகிறது கட்டித் தயிரைக் குழம்புக்குப் பதமாகப் பிசைந்து கொள்வதில் அவளுக்கிருந்த உள்ளக் குழைவு. தயிர் அடையில் தோய்ந்த கையைக் கழுவிவிட்டு ஆடையைச் சரிசெய்து கொள்ளுமளவுக்குப் பொறுக்கவில்லை அவளுக்கு அதற்கிடையில் பிசைந்த தயிர், குழம்பு நலத்துக்கு வேண்டுமளவுக்கு மேல் நீர்த்து விடுமோ என்ற அச்சம்.

ஆடையும் அடித்துத் தோய்த்தல்ல நோவாமற் கழுவி வெயிலிலல்ல நிழலில் உலர்த்த வேண்டிய பட்டாடை இருந்தும் ஆடை அருமையல்ல குழம்பருமையே அருமை அவளுக்கு, அந்தத் தயிர்க்கையாலேயே ஆடையைச் சீர் செய்துகொண்டு விரைகிறாள் தன் தொழிலில். அடுப்பில் தாளிதச் சட்டி தயார்நிலையில். தாளிதத் திரவியங்கள் கரிந்து பொரிந்து கடுகும் வெடித்துக் கும்மிக்கொண்டெழுகிறது தாளிதப்புகை அது கண்ணைக் கரிக்கிறதே அது பொருளல்ல. தாளிதத் திரவியங்கள் மட்டுக்கு மேற் கடுகு முன் உரிய பதத்தில் பிசைந்த தயிரை அதிலூற்றித் துழாவியாக வேண்டுமே. அதுதான் பொருள் எப்படியோ குழம்பு குழம்பாயிற்று. உண்கிறான் காதலன். குழம்பை உவந்திரசிக்குஞ் சுவையுணர்வு மெய்ப்பாடுக் குறிகள் அவன் முகமடங்க வீசிப்பரக்கின்றன. அதைப் பார்த்தவாறே இருக்கிறாள். குழம்பு ரசனைக்கு அவன் முகம் மலர்ந்ததல்ல அவன் முகமலர்ச்சிக்கு அவள் முகம் மலர்ந்ததே பெரிய காட்சி.

''முளிதயிர் பிசைந்த காந்
தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ
துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்
புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப்
பாகர்
இனிதெனக் கணவனுண்
டலின்
நுண்ணிதின் மலர்ந்தன்
றொண்ணுதல் முகனே''

முளிதயிர்—கட்டித்தயிர், கலிங்கம் — பட்டு, உடீஇ— உடுத்து, அட்ட—சமைத்த, புளிப்பாகர்—புளிக் குழம்பு, குய்ப்புகை—தாளிதப்புகை.

இங்கே புளிக் குழம்பு தயாரித்தல் சமையல், அதைப் பக்குவமாகத் தயாரிக்கும் வித்தை அதன் பண்பு இதிற் காணுங் காட்சியினிமை கருத்தினிமை ஒரு கலை, அதற்கு மேலும், மெருகூட்டுகிறது அவள் பரிவுளப் பண்பு. இப்படியான உணவாக்கற் கலையோடு ஊட்டக் கலையும் அப்புறம் இனிதெனக் கணவனுண்ண மனைவி முகமலர்தலில் ஒரு கலை. இக் கலைகளை உட்கொண்டிருத்தலின் இது பண்டைத் தமிழ் மகளிர் கலாசாரம் எனும் பெயர்க்கு உரிமை கோரும். இனிமற்றொன்று;

போரில் வேலேந்தி யுத்த சன்னத்தனாய் நிற்கும் எதிரிக்கு இலக்குப் பார்த்தெய்யக் கைவேல் தயார் நிலையில். ஆனால், அதே கணமே அதற்குத் தணிக்கையும். எய்யக் குறி பார்க்கும் அவசரத்தின்போது எதிரி கண்ணிமைப்பில் ஏதோ ஒரு அசைவாட்டம். அது கண்டதே தாமதம்; வேற்செலவுக்குத் தணிக்கையாகிறது எடுத்த ஆயுதத்தை இலக்கிற் போட்டு முடிப்பது வீரம். அது சாமானியம். ஆயத்த நிலையில் நிற்கும் எதிரியிற்காணும் கோழைத்தனக் குறி இமைநடுங்கல் மூலம் அவன் தரப்பிற் சாம்யத்தரம் இன்மைகண்டு எடுத்த வேலுக்குத் தணிக்கைகொடுத்தல் அசாமானியம். அதிற்கலை அதர்சனம், இதிற்கலை நிதர்சனம். இதையுள்ளிட்டிருத்தலின் இது பண்டைத்தமிழர் போர்க் கலாசாரம் என்றாகிறது. இனி, அப்பழந்தமிழர் சிந்தனைக்கலை விசேடமும் ஒன்று காண்பாம். புறநானூற்றில் ஒரு காட்சி, அது காலாகாலமாக அடிப்பாடுற்று வந்த ஒருவகை உளப்பண்பாட்டில் ஒரு உயர் கட்டம். பவ்விய உள்ளமொன்று தன்னொடு தானைப் பறைந்து கொள்கின்றபாணி.

நம்மூர் நான்கெல்லை மட்டில் அடங்க முடக்கிச் செறிக் கற்பாலதல்ல நம்முணர்வு. நாமுண்டு நம்பெண்டு பிள்ளையுண்டு என்ற வரையறைக்குள் அடங்கி நிற்கக் கூடுவதன்று நம்முறவு. ஊரான ஊரெல்லாந் தொட்டுத் தீண்டிக்கொண்டிருத்தற் பாலது நம்முணர்வு. நாலுதிசையினும் நாலுமக்களிடத்துஞ் சென்றோடிச் செறிதற்பாலது நம்முறவு. நம் தீமை நன்மைகள், நாம் படுந் துன்ப இன்பங்கள் என்ற இவற்றுக்கு நாமல்லாத பிறரெவரும் செயலுரிமை கிளத்தற்கில்லை. சாதல் பற்றிப் புதுமையாகச் சொல்லிக் கொள்ள ஏதுவுமில்லை. வாழ்க்கை இனிதெனக் களிப்பானேன். வெறுப்பு மேற்கொண்டு அது இன்னாதெனக் கசப்பானேன்? நீரோட்டம் இழுக்கும் பக்கம் விரைந்தோடும் வள்ளம் போல நம்முயிரும் விதி வலிக்கும் பக்கம் விரைந்து கொண்டிருக்கிறது. இது அறவாணர் அறிவுக் காட்சி மூலம் நமக்கு நன்கறிய வந்திருக்கிறதே. இது இங்ஙனமாக, பெரியவர் என்று ஒருவரை வியக்கவே மாட்டோம். அதேவேளை சிறியவரென்று ஒருவரை இகழவும் மாட்டோம். அதைவிட இதில் அதிகம் கண்டிப்பாய் இருப்போம்.

லௌகிக மட்ட சிந்தனைத் தரத்துக்கு மேற்பட்ட ஒரு சிந்தனைத் தொகுதி இது. சுயநலத்தை மடக்கியடிக்குங் கருத்தொன்று. நன்மை தீமை இன்ப துன்ப மாறாட்டங்களுக்கு நாமே பொறுப்பெனக் கண்டு பிறரை நோவாமை ஒன்று செல்வத்தில் குழறலும் அல்லலில் அலறலும் ஆக எழும் பதட்டமோய்ந்திருக்கும் அமைதியொன்று. விதி பற்றிய நம்பிக்கையொன்று. பெருமை சிறுமை நோக்கிற் பேதலிக்காத நடுநிலை ஒன்று. இத்தனையும் இந்தச் சிந்தனைக் குவியலுள் மிளிரும் அறிவொளி மாணிக்கக் கதிர்கள் இவற்றினூடாக முறையே ஆத்மாவின் சுட்டறிவு கெட்டு வியாபக அறிவு தலைப் படுதல் ஒன்று வினைக் கோட்பாட்டடிப்படை விளக்கமொன்று, விருப்பு வெறுப்புக்களுக் கிடங்கொடாதிருக்கும் இருவினையொப்பு நிலையொன்று விதிவழியே எதுவும் ஆகும் என்ற திடநம்பிக்கையொன்று ஆன்ற மதிப்பும், அவமதிப்புமென்ற இரண்டினுஞ் சாராதிருக்குஞ் சார்ந்த சமரச நிலையொன்று. என இத்தனை ஆத்மிக முன்னேற்ற உயர்பண்புகளும் விரவி நின்றொளிர்தல் ஒரு கலை இதனை உள்ளிட்டிருத்தலின் இது அப் பழந்தமிழர் சிந்தனைக் கலாசாரம் என்ற நிலை பெறுகிறது.

''யாதும் ஊரே யாவருங்
கேளிர்
தீதும் நன்றும் பிறர்தரவாரா
நோவதும், தவிர்வதும்
அவற்றோரன்ன
சாதலும் புதுவ தன்றே
வாழ்வில்
இனிதென மகிழ்ந்தன்று
மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே
நீர்வழிப் படூஉம் புணை
போ லாருயிர்
முறைவழிப் படூஉமென்பது
திறவோர்
காட்சியில் தெரிந்தன மாத
லின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும்
இலமே
சிறியோரை இகழ்தல் அத
னினும் இலமே''

கேளிர்–உறவினர்; நோதல்–துன்பம்; தவிர்தல்– இன்பம்; அவற்றோரன்ன– அவற்றோடொத்தன முனிவு; வெறுப்பு இன்னாதது– துன்பமானது. புணை-தெப்பம்; முறை– ஊழ். திறவோர்– ஞானக்கண் திறந்தவர். காட்சி– அறிவு பண்டைத்தமிழர் ஆத்மிகக் கலாசாரம் அந்தப் பழங்காலத்திலேயே எந்த உச்சத்தைத் தொட்டிருந்த தென்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைவது இச் செய்யுள்.

சுத்த நிலையிற் சுட்டறிவு கெட்டு அகிலமளாவும் ஆன்ம உணர்வு வியாபகம். விருப்பு, வெறுப்பு இரண்டினுஞ் சம நோக்கு நிகழும் இருவினையொப்பு விதி நம்பிக்கையின் சார்பில் எழும் விதித்தவனாகிய இறைவன் ஆணைவலு என்ற சைவசித்தாந்த மெய்மெய்யியல் துணிக்கைகளாகிய இவை, சைவசித்தாந்தம் தமிழ்க் கலாசார விளைவு- Saiva Siddhanta is Undoubtedly a Travidian product – என்ற அறிஞர் ஜி. யு. போப் என்பாரின் கொள்கைக்குச் சான்றுகளுமாதல் கருத்தாகும்.

## மூன்று முக்கிய அம்சங்கள்

மனித வாழ்வு முழுமையாக இருக்க வேண்டுமெனில் மூன்று முக்கிய அம்சங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். அவை தன்னலம், பிறர்நலம் இறைபணி ஆகும்.

மூன்று பக்கங்கள் இல்லாமல் முக்கோணம் உருவாகாது அது போல மனித வாழ்க்கை முழுமைஅடைய மனிதன் தன் நலனுக்காகப் பாடுபட வேண்டும். பிறர் நலத்தையும் மனதிற் கொண்டு செயற்படவேண்டும். அத்துடன் இறைவனை அடைவதற்கு இறைபணியையும் செய்தல் வேண்டும்

## இலக்கியக் கட்டுரை

# தூதுவனுக்குரிய துணிவும் தூய்மையுமுடைய அங்கதன்

சி. து. இராஜேந்திரம் பி. ஏ., எம். லிட்

பண்டைக்காலத்தில் இரு அரசர்களுக்கிடையே பிணக்குகள் எழுந்தால் அவற்றைத் தீர்த்து இணக்கத்தை ஏற்படுத்தும் பொறுப்பு தூதருக்கே உரியதாக கொள்ளப் பட்டது. குறிப்பாக மாற்றாருடன் போர் தொடுக்கு முன் தூதனுப்பி சமாதானத்துக்கான இறுதி முயற்சியை வேந்தன் மேற்கொள்வான். அது தோல்வியடையும் பட்சத்திலேயே படையெடுத்துச் செல்வது வழக்காறாக இருந்தது. இன்றும் முடியாட்சி நீங்கிக் குடியாட்சி மலர்ந்துள்ள போதிலும் பெரும்பாலான நாடுகளில் தோன்றும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குத் தூதுக் குழுவினரை அனுப்பும் முறைமை இருந்து வருகிறது

### நற்றூதுவனின் பண்புகள்

இத்தகைய தூதுவர் பற்றிப் பண்டைய இலக்கியங்களும் காவியங்களும் கூறக் காணலாம். அரசருக்குரிய அங்கங்களில் தூதினை ஒன்றாகக் கருதும் வள்ளுவப் பெருந்தகை தூதுபற்றி ஒரு தனி யதிகாரமே வகுத்துள்ளார். அதில் அவர் தூதருக்குரிய இலட்சணங்களைத் தெளிவுற விளக்கியுள்ளார்.

'அன்பறிவாராய்ந்த சொல்
வன்மை தூதுரைப்பார்க்
கின்றியமையாத மூன்று'—

தம்மரசன் பால் அன்புடைமையும் மற்றும் சிறந்த அறிவுடைமையும் எதையும் ஆராய்ந்து உரைக்கக் கூடிய சொல்வன்மையும் தூதுரைப்பவருக்கு இன்றியமையாத மூன்று குணங்களாகக் கருதப்பட்டன. இவற்றுடன் தூய்மையும் துணைமையும் துணிவும் தூதருக்கு அவசியம் வேண்டப்படும் நலங்கள் என வள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

'தூய்மை துணைமை துணிவு
டைமையிம் மூன்றின்
வாய்மை வழியுரைப்பான்
பண்பு'

இவ்வாறு வள்ளுவர் வகுத்த தூதருக்குரிய பண்பு நலங்களோடு விளங்கிய தூதுவர் பற்றிப் பேரிலக்கியங்களாகிய மகாபாரதமும் இராமாயணமும் கூறுகின்றன. பாண்டு புத்திரர்களிடம் யுத்தத்தைத் தவிர்க்கும் முறையில் தனக்காகப்பேசி வரும்படி திருதராஷ்டிரன் சஞ்சயனைத் தூதுவிட்டான். சஞ்சயன் பழுத்த அனுபவமும் அறிவும் ஆற்றலும் நிறைந்தவன். அதே போன்று கண்ணபிரான் பாண்டவருக்காகக் கௌரவரிதூது சென்றார். அத்தூதின் செம்மை ஈடு இணையற்றது. இராமனுக்காகத் தூதுசென்று வெற்றியுடன் மீண்டவன் அனுமன். கம்பராழ்வாரினால் 'சொல்லின் செல்வன்' என வருணிக்கப்படுமளவிற்கு நாவன்மை மிக்கவன்; இராமபிரானிடத்தில் தூய்மையான அன்பும் பக்தியும்உடையவன்; நிறைந்த வல்லமை உடையவன். இத்தகையபெரியோர்வரிசையில் வாலி மைந்தன் அங்கதனையும் வைத்துக் கணிப்பதில் தவறில்லை. ஏனெனில் ஏனையோர் தூதுக்கு ஈடாக அங்கதன் தூதும் விளங்குகின்றது

### அங்கதன் தெரிவு

ஸ்ரீராமன் ஆணையின் பேரில் சேதுபந்தன காரியத்தை வானரர்கள் ஆரம்பித்தார்கள். பல இலட்சக்கணக்கான வானரர்கள் மிகத் துரிதமாக ஒரு சில நாட்களிலேயே இலங்கைக்கு அணைகட்டி முடித்தார்கள். இவ்வணை மூலமாக ஸ்ரீராமன் முதற் கொண்டு அனைவரும் கடல் கடந்து இலங்காபுரியை அடைந்தனர். இராவணனுடனான யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டியது தான் பாக்கி இருந்தது. ஆனால் நியதிக்கு மாறாக நடந்து கொள்ள இராமபிரான் விரும்பவில்லை, இராவணனிடம் ஒரு தூதனை அனுப்பி அவன் நியாய வழிக்குத் திரும்புவதற்கு ஒரு கடைசிச் சந்தர்ப்பத்தை அளிப்பது தான் உசிதமான காரியமென எண்ணினான்.

தூதுவனாக அனுப்பக் கூடியவன் யார் என ஒருமுறை எண்ணிப் பார்த்தான் அனுமன்தான் மிகப் பொருத்தமானவன் என அவனுக்குத் தோன்றியது. ஆனால் அவன் ஏற்கனவே ஒருமுறை தூதனாகச் சென்று மீண்டவன் அல்லவா? அவனையே மீண்டும் அனுப்பினால் பகைவர் தம்மிடம் அனுமானைத் தவிர தூது போகக் கூடிய வலியோர் வேறொருவரும் இல்லையெனத் தம்பலத்தைக் குறைவாக அல்லவோ மதிப்பிடுவார்கள் என்று நினைத்தான், அனுமானை விடுத்து வேறு யார் இருக்கின்றார்கள்? மீண்டும் சிந்தித்தான். ஆம்! இருக்கவே இருக்கிறான் வாலி புத்திரன் அங்கதன் என இராமன் முடிவு கட்டினான்.

''மாருதி இன்னும் செல்லின்
மற்றிவன் அன்றி வந்து
சாருநர் வலியார் இல்லை
என்பது சாரும் அன்றே!
யாரினி ஏகத் தக்கார்
அங்கதன் அமையும் ஒன்னார்
வீரமே விளைப்பரேனும்
தீதின்றி மீள்தல்வல் லான்''

அனுமனுக்கு அடுத்தபடியாகத் தூது செல்லத் தகுதியுடையவனாக இராமபிரானால் கருதப்படுமளவிற்கு அங்கதன் உயர்ந்து விளங்குகின்றான். பகைவர்கள் எதிர்த்து நின்று விரச் செயலைச் செய்தாலும் அதை முறியடித்துச் சேதமின்றி மீளக்கூடிய சக்தி அங்கதனுக்கு உண்டு எனக் கருதியே அவனைத் தூதனாகத் தெரிவு செய்தான்.

வாலி இராமபிரானின் அம்பிற்கு இரையான பின் இராமனே வாலியின் செல்வ மகனான அங்கதனுக்குத் தந்தை, தாய், தெய்வம் எல்லாமாக விளங்கினான் அங்கதனும் இராமபிரானை அவ்வாறே போற்றி ஒழுகினான். வாலியின் இறுதி விருப்பும் அதுவாகவே இருந்தது. இருவருக்குமிடையிலான இந்த உறவும் அங்கதன் தெரிவுக்குக் காரணமாயிற்று.

தூதராய்ச் செல்லக் கூடிய அனுபவமும் தகுதியும் பெற்ற எத்தனையோ வீரர் தம்மத்தியில் இருக்கத் தக்கதாக அனுபவத்தில் குறைந்த இளைஞனை தன்னை மட்டும் தேர்ந்தெடுத்ததில் அங்கதனுக்கு அளவற்ற மகிழ்ச்சி.

'' மாருதி அல்லனாகில்
நீயெனும் மாற்றம் பெற்
றேன்
யாரினி என்னோடொப்பார்
என்பதோர்இன்பமுற்றான்''

தூது போவதனால் ஒன்றில் அனுமன் அல்லது அங்கதன் என்ற நிலைக்குத் தான் உயர்ந்து விட்டதை நினைந்து நினைந்து பூரிப்படைந்தான். அப்பூரிப்பினால் அவனதுபொற்றோள்கள் குன்றினும் உயர்ந்தன.

### வேதநாயகன் தூதன்

இராம தூதன் என்ற எக்களிப்புடனேயே உரைக்க வேண்டிய மாற்றம் கேட்டுப் புறப்பட்டான் அங்கதன். இலங்காபுரியின் மதில்களை வேகமாகக் கடந்து சென்றான் இராவணன் கம்பீரமாகக் கொலுவீற்றிருந்த கொலு மண்டபத்தை அடைந்தான். இலங்கை வேந்தனின் அசாதாரண பெரிய உருவத்தைக் கண்டு சிறியவனான அங்கதன் முதலில் அதிசயித்து நின்றது உண்மை ஆனால் இவனது பருத்த உடலையும் ஊடுருவக் கூடிய பாணம் இராமபிரானது கையில் உண்டு தானே என்ற நினைவு வந்ததும் அவனையறியாமலே ஓர் அசட்டுத் துணிவு பிறந்தது. அத்துணிச்சலோடே இராவணன் முன்னிலையில் எடுப்பாக நின்றான். அவ்வாறு நின்றவனை நெருப்பெழ விழித்து''இங்குவந்துநிற்கும் நீ யார்? வந்த காரியம் தான் என்ன? இவர்கள் உன்னைக் கொன்று தின்னு முன் கூறிவிடு'' என ஒரு வகை நையாண்டிக் குறிப்போடு உரக்கக் கேட்டான்.

அங்கதன் அளித்த பதிலில் அவனுக்கு இராமபிரான் பால் இருந்த அன்பு வெளிப்படுகின்றது. இராமனைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டவன் அவன். இராமனுடைய அம்பு பட்டு வீழ்ந்து கிடந்த வாலி கூட இறுதியில் இராமனைப் பரம்பொருளாகவே கண்டு களித்தான் அதுமட்டுமன்றித் தன்னருகில் நின்ற தன் மைந்தனையும் இராமனது பாதமலர்களை வணங்கி வாழும்படி அறிவுரை பகர்ந்தான். அத்தகைய அறிவுரை பெற்ற அங்கதன் இராமபிரானைத் தெய்வமாகப் போற்றியதில் வியப்பொன்றுமில்லை.

''பூதநாய கன்நீர் சூழ்ந்த
புவிக்கு நாயகன் அப்பூ
மேல்ச்
சீதை நாயகன் வேறுள்ள
தெய்வநாயகன் நீ செப்பும்
வேதநாயகன் மேல் நின்ற
விதிக்கு நாயகன் விட்ட
தூதன் யான்; பணித்த
மாற்றம்
சொல்லிய வந்தேன்''
என்றான்.

அங்கதன் இவ்வாறு பக்திப் பரவச நிலையில் நின்று பேசினான். ஒரு தூதுவன் எவருக்காகத் தூதுரைக்க வந்தானோ அவரிடத்துத் தூய்மையான அன்புடையனாக இருத்தல் இன்றியமையாததாகும். ஆனால் அங்கதனைப் பொறுத்த வரையில் அவனது அன்பானது எல்லை கடந்து பரிபூரண பக்தி நிலைக்கு உயர்ந்து விடுவதைக் காண்கின்றோம்.

### சொல்லில் வல்லோன்

இராவணனின் காதில் அங்கதனின் உணர்ச்சி மிக்கவார்த்தைகள் விழவில்லை எனினும் அவனது அசாதாரணத்துணிச்சலைக் கண்டு அதிசயித்து நின்றான். சிறுவனாயிருந்தும் அஞ்சா நெஞ்சத்துடன் கருத்தோடு பேசும் இவன் யாராக இருக்கக் கூடும் என்று ஒருமுறை மனதில் எண்ணிப் பார்த்தான். அவனால் விடை காண முடியவில்லை. கேட்டே விட்டான்.

''கங்கையும்பிறையும் சூடும்
கண்ணுதல் கரத்து நேமி
சங்கமும் தரித்தமால்
மற்(று)
இந்நகர் தன்னைச் சாரார்
அங்கவர் தம்மை யன்றி
மனிசனுக்காக
அஞ்சா(து)
இங்கு வந்(து) இதனைச்
சொன்ன
தூதன் நீ யாவன்?''
என்றான்

இராவணனுடைய வார்த்தைகளில் அவனுக்குஇயல்பாக இருந்த அகங்காரம் இழையோடுவதைக் காணலாம். 'சிவபிரானும் திருமாலும் கூட வரப்பயப்படும் இடத்திற்கு அஞ்சாது வந்து நிற்கும் நீயார்?'' என வினவினான்.

அங்கதன் மிகவும் நிதானமாகவே பதிலளித்தான். தூதுரைப்பார்க்கு சொல் வன்மை இருக்கவேண்டியது அவசியம் அது அங்கதனிடம் நிறைய இருந்தது. தான் யார் எனத் தன்னை அறிமுகப்படுத்தும் இடததில் அவனது பேச்சில் ஒரு தனித்தன்மை காணப்படுகிறது. இராவணேஸ்வரனுக்கு முன்னால் நின்று கொண்டே அவன் இன்னார் எனத் தனக்குத் தெரியாதவன் போல் மிக அலட்சியமாகவே பேசினான். முன்பொரு காலத்திலே இராவணன் என்ற ஒருவனை இந்திரன் மகன் தன் வாலினால் சுற்றிக்கட்டி மலைகளெல்லாம் தாவித்திரிந்தான் எல்லோரையும் ஒரு கலக்குக்கலக்கியவன். அத்தகைய வீரனின் மகனே தான் என அங்கதன் தெளிவுற உணர்த்தினான்.

''இந்திரன் செம்மல் பண்(டு)
ஓர்
இராவணன் என்பான்
தன்னைச்
சுந்தரத் தோள்களோடும்
வாலிடை தூங்கச் சுற்றி
சிந்துறக் கிரிகள் தாவித்
திரிந்தவன் தேவர் உண்ண
மந்தரக் கிரியால் வேலை
கலக்கினன் மைந்தன்''
என்றான்

'இந்திரன் செம்மல்' என்று கூறி வாலியின் பெயரைச் சொல்லாமல் விட்டிருப்பதிலிருந்து அவனது பெயர் அத்துணைப் பிரபல்யம் வாய்ந்தது என்ற குறிப்புத்தொனிக்கிறது. அதேவேளை இராவணனின் பெயரைக் குறிப்பிட்டு அவனைச் சர்வ சாதாரணமான ஒரு பேர்வழி என்பதை எடுத்துக்காட்டிய முறை நயக்கத்தக்கது அங்கதனது உள்ளத்தில் தான் பெருவீரன் வாலியின் மைந்தன் என்ற தற்பெருமையும் தன் தந்தையிடத்தில் படுதோல்வியடைந்தவன் தானே இராவணன் என்ற ஏளனமும் விரவி இருத்தலைக் காணலாம்.

### தூய்மைக்கு ஒரு சோதனை

தூதுரைப்பவரிடத்து இன்றியமையாது வேண்டப்படும் பண்புகளில் தூய்மையும் ஒன்றாகும். அஃதாவது பொருள், காமங்களால் தூயனாதல் எனப் பரிமேலழகர் பொருளுரைப்பார்அங்கதனது தூய்மைக்கும் வாய்மைக்கும் ஒருசோதனை ஏற்படுகின்றது. அதன் சூத்திரதாரியாக இராவணனே விளங்குகின்றான். இராவணனுக்கு வாலி ஓர் ஒப்பற்ற வீரன் என்பது நன்றாகத் தெரியும். அதுவும் அனுபவவாயிலாக அறிந்து கொண்ட விடயம் அல்லவா? அவ்வளவு சுலபமாக மறந்து விடக்கூடிய காரியமல்லவே? இராவணனது சிந்தனை சிறகடித்தது வாலி மகாவீரன். அவனது மகனும் அப்படித் தானே இருப்பான். அங்கதனைத் தன்துணையாக்கித்தன்னை இன்னும் பலப்படுத்திக் கொள்ளலாம் என எண்ணினான். அங்கதனது துடுக்கான பேச்சு இராவணனுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்திய போதிலும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு இதமாகவே பேசினான்

இராவணன் அங்கதனுக்கு அரசாட்சி மீது ஆசை மூட்டினான். ' உனது தந்தை எனக்கு உற்ற நண்பனல்லவா? அதற்குச்சரியான சான்றும் இருக்கின்றது. அவன் பெயரை வைத்து மாளிகையே கட்டியிருக்கிறேன். இதைவிடச் சாட்சியம் வேறென்ன வேண்டும்? போயும் போயும் பகைவனான இராமனுடைய தூதனாகவா வந்திருக்கிறாய். இதை விடக் கேவலம்என்ன? வானரர்களுக்கெல்லாம் உன்னைத் தலைவனாக்கி மகிழ்வேன்'' என வாக்குறுதி அளித்தான் இராவணன் இதோடு நின்றுவிடவில்லை. அங்கதனை எப்படியாவது வளைத்து தன் பக்கம் இழுத்துவிட வேண்டுமென்ற ஆதங்கத்துடன் தொடருகின்றான்

இராமன்வாலியை மறைந்து நின்று கொன்ற நிகழ்ச்சியை அங்கதனுக்கு நினைவூட்டினான் இராவணன். அதன் மூலம் அங்கதனின் தந்தைப்பாச உணர்வை கிளறிவிட முயன்றான். 'தந்தையைக் கொலை செய்தவனுக்குப் பின்னால் கைகட்டிச் சேவகம் புரிவது ஒரு கோழை செய்யும் காரியமல்லவா?' என அவனது ஆண்மையைச் சாடினான். 'வாலி போய் விட்டால் என்ன! நான் இருக்கிறேன்' எனக் கூறாமல் கூறுவதுபோல அவனை மகனாக ஏற்றுக்கொள்ளவும் சித்தமானான்.

இவ்வாறு அங்கதனின் தெளிந்த உள்ளத்தை ஆசை என்னும் கல்கொண்டு கலக்கப் பார்த்தான். ஆனால் இராமனின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமான அங்கதனை மாற்றிவிடுவது அவ்வளவு எளிதான காரியமன்று. அவன் வெறும் பதவிக்காகக் கட்சி விட்டுக் கட்சி தாவும் இயல்புடையவன் அல்லன். அரக்கர்கோன் வார்த்தைகளைக்கேட்டு அங்கையோடு அங்கை தாக்கி நகைத்தவாறே ஆத்திரத்துடன் பதில் உரைத்தான்.

''வாய்வரத் தக்க சொல்லி
என்னையும் வசம் செய்வா
யேல்
ஆய்தரத் தக்கதன்றோ!
தூதுவந்(து) அரச(து)
ஆள்கை
நீ தரக் கொள்வேன்யானே!
இதற்கினி நிகர்வேறுண்
டோ!
நாய் தரக் கொள்ளும் சீயம்
நல்லர(சு)''என்றுநக்கான்.

அங்கதனது வார்த்தைகளில் ஆத்திரமும், இகழ்ச்சியும் இழையோடுவதைக் காணலாம் ''உன் வாய்க்கு வந்தபடி பசப்பு மொழிகளைக் கூறி என்னை மயக்க நினைத்தால் உன் அறியாமையை என்னவென்று சொல்ல? தூதனாக வந்த எனக்கு நீ அரச பதவியைக் கொடுக்க நான் ஏற்றுக் கொள்கிறதாம். இதைப்போல் முட்டாள்தனம் வேறுண்டோ? நாய் தந்ததாம் அரசபதவி. அதனை ஏற்றுக் கொண்டதாம் சிம்மம்'' எனப் பரிகாசமும், நையாண்டியும் தொனிக்கப் பேசினான் வாலி மைந்தன். அவனது தூய்மையான உள்ளத்தைப் பளிங்கு போல் காட்டும் அருமையான வார்த்தைகள் இவை.

### வீரத்தின் சிகரம்

அங்கதனது சொல்லம்புகள் இராவணனைப் புண்படுத்தி வேதனை செய்தன அதனால் அடங்காக் கோபம் கொண்டான் எனினும் இவ்விடத்தில் நிதானத்தை இழக்கவில்லை தூதனாக வந்தவனிடத்துத் தன் சினத்தைக் காட்டக் கூடாது எனத் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு தூதாக வந்த விடயத்தைக் கூறும்படி கேட்டான். அங்கதனும்

[14-ம் பக்கம் பார்க்க]

# ஈழத்துக் கவிஞர் பக்கம்

## காரணம் யாதோ?

மாரி கோடை மாறி மாறி வந்துபோகும்
மழைபொழியும் வெயில் கொளுத்தும்
ஏரியிலே நீர் நிறையும் எல்லை முட்டும்
ஏர் உழவர் வயல் உழுது நெல்விதைப்பர்

மாரியுடை சேவையினால் பயிர் வளரும்
பச்சைப் புல் வெளியெனவே கதிர் சொரியும்
நேரிழையார் நெற்றியிலே திலகமிட்டு
நெல் மணியைக் கொய்துய்ந்த காலம்போச்சு

பாட்டாளி மக்களது வியர்வை நீரில்
பால் ரப்பர் தேயிலை இனம் செழித்து ஓங்கும்
கூட்டாகப் பாடுபடும் காரணத்தால்
கூழுக்காய் அழுதிருந்த காலம் போச்சு

பண்பாடு பழக்கங்கள் மாறிப்போக
பாவையரும் பாதியுடைப் பிரியரானார்
ஆகாயப் பயணத்தில் ஆண்கள் தாவ
அவரவரும் உழைக்காத சோம்பரானார்

நாளுக்கு நாள் நாகரிகம் படியில் ஏற
நம்மவரும் மேனாட்டாராகிப் போனார்
கோயிலிலைக் குளம் இல்லை கொள்கை இல்லை
குறிக்கோள்கள் ஏதும் இல்லை குவலயத்தில்

இறை பக்தி மறைபோதம் மங்கிப் போக
இறைவனுமே இருகண்ணை மூடிக்கொண்டான்
எரிகின்ற சூரியனின் வெப்பத்தாலே
ஏர் உழவர் நிலமெல்லாம் கருகிப் போச்சு

புரியாத புதிர் கொஞ்சம் புரியலாச்சு
போக்கற்ற போக்கினால்தான் நாட்டில் பஞ்சம்
நெல்விலையோ நானூற்று எண்பதாச்சு
நீர் வருது கண்களிலே ஏழைகட்கு

காலமகள் செய்துவைத்த கோலம் தானோ
கற்புடையோர் மாறி நிற்கும் சோகம்தானோ
ஞாலமதில் மழை நின்று போனதற்கு
நியாயமதைச் சொல்லையா சொக்கநாதா.

★ செவ்வந்தி மகாலிங்கம்

## ஆண்கள் ஆண்கள்தான்! பெண்கள் பெண்கள்தான்

சேக்கஸில், மனிதரிடம் சீரியஸாய்! பயிற்சிபெற்ற
ஐந்தறிவு விலங்கொன்று ஆறறிவு மனிதரைப்போல்
'சாதனை'செய் காட்சியினைத் தன்பெற்றோருடன் பார்க்கும்
முன்னந்த 'ஒன்றை'ப்போலெதையும்பார்த்திருக்காத
பகுத்தறிவு முளைவிடாப் பையனைந்தே! வயதுடையான்
தானக்காட்சியில்பார்க்கும் தனியனைப்போலுலகத்தில்
'உள்ளவை' எல்லாமிருக்கும்! மனிதரைப் போல்!
எல்லாமே! செய்யும் எனமனதில் எண்ணுவது
எப்படித் தவறோ அப்படித் தவறேதான்
இன்றைய பெண்கள்–படித்த இளையபெண்கள்–
வாய்ப்பும் பயிற்சியும் வசதிகளும்கிடைத்தால்
எல்லாரும்! 'வலன்டீனா தெரஸ்கோவா' ஆகிடுவார்!
என்றுநாமெண்ணி நம்பிக்கை கொள்வவதும்
விலங்குகளாய்ச்சில மனிதர்! இருக்கையிலே
மனிதராய்ச்சில விலங்குகள்! இருப்பதுபோல்
ஆண்களிலே சிலபேர் பெண்கள்! அதேபோல்
பெண்களிலும் இரண்டொருவர் ஆண்கள்! அவ்வளவே
இந்தப் 'புறநடை' 'இயற்கை விதி' யெதற்கும்
என்றைக்குமுள்ளதுதான்! இன்றைய புதுமையல்ல
எப்பக்கம் இக்கணக்கில் கூடிக் குறைந்தாலும்
ஆண்கள் ஆண்கள்தான்! பெண்களும் பெண்கள்தான்!

⋇ ஈழமாஜினி

## உறங்க மறந்ததேனோ?

ஆசைகளின் மத்தியிலே–நான்
காலனவன் சிறையினிலே
வாடுகிறேன் தனிமையிலே–காதல்
பறவை நான் சோடியின்
பிரிவினிலே வாடுகையிலே
உறக்கமின்றி ஆசைகள்
அலைமோதுதே நெஞ்சினிலே
இனிய உறவுகளின் நீண்ட உறக்கத்தினிலே
காதல் கொண்ட கண்களே
உறங்க மறந்ததேனோ

கே. தேவகி

## மாடும் பெண்ணும்

என்னிடம் ஒரு மாடு உண்டு
எனக்கு ஒரு மகளும் உண்டு
மாட்டிற்கு கழுத்தில் சலங்கை
மகளிற்கு கழுத்தில் சங்கிலி
மாட்டிற்கு காலில் கயிறு
மகளிற்கு காலில் கொலுசு
மாடு வேலை செய்யும்
மகளும் வேலை செய்வாள்
மாடு கன்று போடும்
மகளும் பிள்ளை பெறுவாள்
மாட்டை விற்று பணம் பெற்றேன்
மகளை வாங்க பணம் கேட்கிறார்கள்

★ எஸ். ஜே. பி. ரட்ணதுரை

## ஏங்கும் மனது

பெய்த மழையில் நனைந்துமே
பெரிய நிலமும் இருக்குது
உள்ள ஒரே ஏரினால்
உழவன் மனம் ஏங்குதே

விரைந்து அதை உழுதுமே
விளைச்சல் செய்ய வேணுமே
உள்ள ஒரே ஏரினால்
உழுது முடிக்க முடியுமோ?

வெளியூர் சென்ற தலைவனும்
வேலை முடிந்த தென்பதால்
விரைந்து ஊர் திரும்பவே
மிகுந்த ஆசை கொண்டனன்

மாலை யாகு முன்னரே
வந்து சேர எண்ணமே
உள்ளம் ஆசை கொண்டது
ஊரோ தொலைவாய் உள்ளது

உழவன் மனது போலவே
உள்ள மனது தலைவனே
விரைந்து பதைத்து ஏங்குதே
வீடு தொலைவில் தோணுதே

## வீடியோ படுத்தும் பாடு

திருமண வீட்டில் இன்று
திறன் மிகு வீடியோக்கள்
படங்களை எடுக்கும் போது
பலருமே முன்னால் நிற்பர்
ஒழுங்குகள் எல்லாம் மாறி
ஓடுவர் முகத்தைக் காட்ட
வழக்கங்கள் மாறி நிற்கும்
வருபவர் தனை மறக்கும்
சடங்குகள் புதிதாய் தோன்றும்
சமையலும் வேளைக் காகும்
ஒதுக்கிய மூடக் கொள்கை
ஒவ்வொன்றாய் வந்து சேரும்
விதியது என்று சொல்லி
விளம்புவர் பலர் இருந்து
பசியது வயிற்றைக் கிள்ளப்
படங்களைப் போஸ் போசாகப்
பிடிக்கிறார் நின்று நின்று
பிள்ளைகள் அங்கு மிங்கும்
ஓடியே இடித்து நிற்பர்
ஒருவரோ டொருவர் ஆக
ஆறிய கறியும் சோறும்
நாறியே போயி ருக்கும்
மாறியே கொடுப் பதற்கு
மங்கையர் ஒருவ ரில்லை
சேலையைத் திறமாய் கட்டி
சிறந்திடும் நகைகள் பூட்டி
பார்த்திடப் பதுமை போலே
பல்லிலாப் பாட்டி கூடக்
காட்டுறார் காதல் போசு
காளையர் கன்னி சேர்ந்து
போட்டிடும் கூத்தும் சேர்ந்து
போட்டியாய் படம் பிடிப்பர்
வீடியோ படுத்தும் பாடு
வேதனை தருவ தாகும்

வ. யோகானந்தசிவம்

## தனிமை

தனிமை – அது
மிகவும் கொடுமையானது
சொல்லடி மனதையும்
செல்லடி சிரசையும்
சிதைப்பதை விட
தனிமையே என்னை
தகிக்க வைக்கிறது
கவலை நாட்கள்
கடிக்க வருவதும்
நினைவு எருமைகள்
துரத்துவதும்
முலாமிடப்பட்ட
உறவுகளும்
முறிந்து போன உறவுகளும்
இழந்தவையும்
தொலைந்தவையும்
இணைந்து வருத்துவதும்
தனிமை என்ற
சந்நிதியில் தான்
சிக்கல்களை (ச்)
சிந்திக்கையில் – எனக்கு
மூளையே சிக்கடித்து
விடுவது போல் – ஒரு
விபரீத உணர்வு
எல்லாரையும் போல்
எனக்கும்
ஏதோ
இனம் புரியாத சோகம்
இழையோடிய படியே!
தனிமையை விடுத்து
இனிமையான
இணைவுகளை
ஏற்படுத்தினால்
சிந்தனை எனக்கு
செவ்வானை நோக்கியே
சிறகடிக்கும்
சிலர் – தம்
மனப்புகையை –உதடுகளின்
சிகரெட் புகையினால்
போக்கலாம் என
போலிக்குரைப்பர்
என்னைப் பொறுத்தவரை
சோக இருளைத் தூரமாக்க
தோழமை மேகங்களால்
தான் முடியும்

கலைப்பித்தன்

## குணத்தை மட்டும் கொள்வீரா?

பெண்கள் அந்தஸ்துடனும்
பெரும் அழகுடனும்–
வாழ்க்கைத்
துணை தேடுகிறார்களாம்–
சொல்லும்
சோதரரே! சோதனைமிக்க,
பெண்ணின் வாழ்வில்,
ஒற்றைக்காலில் நின்று,
ஒரு இலட்சம் சீதனம்
கேட்டது,
மடந்தையரா! இல்லவே
யில்லை,
மாப்பிளையென்ற பெயருக்
குரியவரே,
பொறுமையின் பொக்கி
ஷங்கள்,
பொறுப்புள்ள சோதரிகள்,
பண்புள்ளவரைத்தான்–
தேடிப்
பார்த்தெடுப்பர் அவர்கள்
மண்ணின்மீது அபிமானம்
கொண்ட,
மாப்பிளை யென்றாலென்ன,
எக்கவுண்டன்
டொக்டரென
எவரை யென்றாலும் தான்!
படிப்புக்கு, பட்டத்துக்
கென,
பார்த்துப் பார்த்துக் கணக்
குப் போட்டு,
மொத்தமாகக் கேட்பது–
உம்
பெற்றோரோ, நீவிரோ
தெரியவில்லை
வாய்ச்சொல்லா லடிக்கும்,
சோதரரே!
வனிதை யொருத்தி– உங்க
ளுக்கு
சீதனமின்றி வந்தால்–
அவளைச்
சிறப்பாயாது சிறப்பாக
வைத்திருப்பீரா?

மீசாலையூர் கமலா

# விளையாட்டு மைதானம்

# போதைவஸ்துப் பாவனையை சட்டரீதியாக்கினல் நல்லதா?

வி.என்.எஸ். உதயசந்திரன்

பென் ஜோன்சன் தான் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை தெரிந்து ஒருபோதும் உபயோகித்தது கிடையாது என்று பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தார்.

''அவர் அவ்வாறு கூறியதில் எவ்வித உண்மையுமில்லை. என்னுடன் அவரும் சேர்ந்து போதை மருந்துகளை உட்கொண்டுள்ளார்'' என கனடிய ஓட்ட வீராங்கனை ஏன்ஜலா பரபரப்பான தகவலை வெளியிட்டு உலக அரங்கை ஆச்சரியத்திற்குள்ளாக்கியுள்ளார்.

இன்று உலகில் பெண்களின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது. உலக அரங்கில் பெண்கள் பலரைக் கதிகலங்கச் செய்துள்ளார்கள். செய்து கொண்டும் இருக்கின்றுர்கள். வெளியே சொல்லக் கூடாத தகவல்களைக்கூட புகழ் கருதி அல்லது விளம்பரம் கருதி அம்பலப்படுத்தி வருவதை இன்று சர்வ சாதாரணமாகக் காண்கின்றோம்.

தற்போது கனடாவில் நடைபெற்றுவரும் பென் ஜோன்சனின் போதை மருந்துப் பாவனை தொடர்பான விசாரணைகளில்சாட்சியமளிக்க அழைக்கப்பட்ட கனடிய ஓட்ட வீராங்கனை ஏன்ஜலா பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

## நானே ஏற்றினேன்

பென்ஜோன்சனுக்கு 1984-ம் ஆண்டு மார்ச் மாதம் நானே ஆண் ஹோர்மன்கள் கொண்ட ஊசி மருந்தை ஏற்றியிருக்கிறேன். அவருக்குத் தெரியாமல் நான் இம் மருந்தை ஏற்றியிருக்க முடியாது. டாக்டர் அஸ்தபென், சார்ளி பிரான்சிஸ் ஆகியோரின் உதவியுடனே அவர் போதை மருந்துகளைப்பாவித்து வந்தார். இப்போது இவர்கள் பெயரில் குற்றஞ்சாட்டுவது தவறானதாகும்.

சோல் ஒலிம்பிக் போட்டியின் போது பென் ஜோன்சன் 'ஸ்டெனே சொலோஸ்' மருந்தைப் பாவித்திருந்ததால்ஆட்டத்தில் இருந்து நீக்கப்பட்டதாக தெரிய வந்த போது நான் ஆச்சரியமடைந்தேன். ஏனெனில் பரிசோதனையில் சிக்கிக்கொள்ளக் கூடாது என்பதற்காக நாம் முன் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வோம் மேலும் பாவித்திராத ஒரு போதை மருந்து பென்னின் சிறுநீரில் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதும் ஆச்சரியத்தை அளித்தது என ஏன்ஜலா தனது சாட்சியத்தின் போது குறிப்பிட்டார்.

1986 ஆம் ஆண்டு வான்கூவரில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் அமெரிக்க ஓட்ட வீரர் பாம் மார்ஷல் கலந்து கொள்ளவிருந்தார். ஆனல் அப்போட்டியில் வீரர்கள் போதை வஸ்து பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றுர்கள் என்ற தகவலை பயிற்சியாளர் சார்ளி பிரான்சிஸ் மார்சலுக்குத் தெரியப்படுத்தினர். மார்ஷல் போலிக் காயங்களைக் காரணங்காட்டி ஆட்டத்தில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொண்டார் என்ற உண்மையையும் ஏன்ஜலா வெளிப்படுத்தியுள்ளார்.

## மூன்று வாரம் இருக்கையில்

செப்டம்பர் மாதம் சோல் ஒலிம்பிக் போட்டி ஆரம்பமாவதற்கு மூன்று வாரங்கள் இருக்கையில் பென் ஜோன்சனுக்கும் எனக்கும் டாக்டர் மரியோ அஸ்தபென் 'எஸ்ட்ரோகோல்' என்ற போதைப் பொருளை ஊசி மூலம் ஏற்றினர். ஆனல் அதன்பின் விளைவுகளை ஆதாரமாகக் கொண்டு பார்க்கும்பொழுது அம்மருந்து 'எஸ்ட்ரோகோல்' ஆக இருக்க முடியாது. வின்ஸ்டரோல் வி, என்ற தயாரிப்புப் பெயர் கொண்ட தடை செய்யப்பட்டஸ்டெனேசொலோஸ் ஆகவே இருந்திருக்க வேண்டும்.

எஸ்ட்ரோகோல் மருந்து முதற் தடவையாக 1985 இல் உபயோகித்த போது தசைநார்கள் இறுக்கமடைந்திருந்தன. பின்னர் 1987 ஆம் ஆண்டு இதை மீண்டும் பாவித்த போது இதே பாதிப்பு ஏற்பட்டது. சோல் ஒலிம்பிக் போட்டிக்கு முன்பாக மரியோ அஸ்தபென் 'எஸ்ட்ரோகோல்' என்று சொல்லி ஊசி மருந்தை ஏற்றிய பின்னரும் தசை நார்கள் இறுக்கமடைந்திருந்தன.

1987 ஆம் ஆண்டின் பின்னரே 'எஸ்ட்ரோகோல்' என்ற பெயரில் வின்ஸ்டரோல் வி. என்ற ஸ்டெனேசோலோஸ் போதை மருந்து ஏற்றப்பட்டு வருவதை உணர்ந்து கொண்டேன் என்று ஏன்ஜலா கூறினர்.

வின்ஸ்டரோல் வி, என்ற மருந்து மிருக வைத்தியத்தில் உபயோகிக்கப்படும் ஒரு மருந்தாகும். பந்தயக் குதிரைகளுக்கும் இம்மருந்து கொடுக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கனடிய விசாரணைக் குழு முன் நான்கு நாட்கள் தொடர்ச்சியாக சாட்சியமளித்த ஏன்ஜலா முதல் நாள் சாட்சியத்தின் போது பென் ஜோன்சன் சொல்வதில் உண்மையில்லை என்று அவரே கூறிய போது தேம்பித் தேம்பி அழுதார். தனது தகவல்களுக்கு ஆதாரமாக நாட் குறிப்பையே எடுத்துக் காட்டினர்

## முரண்பாடுகள்

இவருடைய சாட்சியத்திற்கும் பயிற்சியாளர் சார்ளி பிரான்சிஸ் அவர்களுடைய சாட்சியத்துக்கும் இடையே சில இடங்களில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

சார்ளி பிரான்சிஸ் சாட்சியமளித்த போது வின்ஸ்டரோல் வி,1987 ஆம் ஆண்டுக்குப்பின்னர் பென் ஜோன்சனுக்குக் கொடுக்கப்படவில்லை என்றும் அதனல் ஜோன்சனின் சிறுநீரில் ஸ்டெனெசொலேஸ் கண்டு பிடிக்கப்பட்ட போது தான் அதிர்ச்சி அடைந்தாக குறிப்பிட்டிருந்தார். ஏன்ஜலாவின் சாட்சியத்தில் இருந்து முரண்படும் தகவல் இதுவாகும். என்பதை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுதல் பொருத்தமானதாகும்.

ஏன்ஜலாவின் சாட்சியத்திற்குப் பின்னர் அவரது கணவர் டோனி இஸஜென்கோ சாட்சியமளிக்கையில் பென் ஜோன்சன் தனக்கு ஏற்றப்படும் ஊசி மருந்துகளில் என்ன அடங்கியிருந்தன என்பதை நன்கு அறிந்திருந்தார். போதை மருந்து பாவனை காரணமாக தனது காம உணர்ச்சிகளில் ஏற்படக்கூடிய மாற்றம் பற்றி அவர் வேடிக்கைக் கதைகள் சொல்லிச் சிரிப்பதுண்டு என்று தெரிவித்தார்.

இவர்களின் சாட்சியங்களைத் தொடர்ந்து டாக்டர் அஸ்தபென் சாட்சியமளிக்க இருக்கின்றுர். அவர் சாட்சிமளிக்கும் போது இதுவரை வெளிவராததிடுக்கிடும் தகவல்கள் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போது கரிபியன் தீவுகளில் ஒன்றுன செயுன்ட் இட்ஸ் தீவில் வசித்து வரும் டாக்டர் ஜேமி அஸ்தபென் கனடா தேசிய சேவை நிறுவனத்திற்கு வழங்கிய பேட்டியில் தான் சாட்சியமளிக்கும் போது ஒளிவு மறைவு இன்றி எல்லா உண்மைகளையும் சொல்ல விருப்பதாகவும் தனது சாட்யத்தின் போதே மைதானத் துறையில் என்னென்ன விடயங்கள் நடைபெற்று வருகின்றன என்பது வெட்ட வெளிச்சமாகும் என்று கூறியுள்ளார்.

## அனைவரும் பாவிப்பு

இலங்கையைப் போன்ற ஓரிரு நாட்டு வீரர்கள் வேண்டுமாஞல் போதைப் பொருட்களின் துணையை நாடாமல் இருக்கலாம். ஆனல் ஏனைய வீரர்கள் அனைவருமே செயற்கை ஊட்டம் பெறும் வகையில் இவற்றின் துணையை நாடவே செய்கின்றனர். உலகெங்கிலுமுள்ள விளையாட்டு வீரர்கள் போதை வஸ்துகளை உபயோகித்து வருகிறுர்கள் சோல் ஒலிம்பிக் போட்டியை எடுத்துக் கொண்டாலும் பெரும்பாலான வீரர்கள் போதைப் பொருட்களின் துணையுடனேயே ஆட்டங்களில் கலந்து கொண்டனர். ஆகவே போதைப் பொருள் பாவனையை தடைசெய்து விடாமல் இவற்றின் பாவனையை சட்டரீதியாக்குவதே சிறந்தது என பென் ஜோன்சனின் டாக்டர் விளையாட்டுத்துறை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

டாக்டர் அஸ்தபென்னைத் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்படவிருக்கும் பென் ஜோன்சனிடம் இருந்து பறிக்கப்பட்ட தங்கப்பதக்கத்தைப் பெற்ற அமெரிக்க ஓட்ட வீரர் கார்ல் லூயிஸ் கருத்து வெளியிடுகையில் பென் ஜோன்சன் மட்டும் போதைவஸ்துக்களைப் பாவித்திருக்காவிட்டால் அவர் ஒலிம்பிக் இறுதி ஆட்டத்தில் மட்டுமல்ல ஒலிம்பிக் அணியிலேயே இடம்பெற்றிருக்க மாட்டார். பென் ஜோன்சன் சோல் ஒலிம்பிக்கில்நிகழ்த்தியசாதனை (9.79) போதைப்பொருள் பாவனையால் பெற்ற சாதனையாகும் சோல் ஒலிம்பிக்கில் ஐந்துஅல்லது பத்துப்பதக்கங்கள்போதைவஸ்தின் உதவியுடனே பெறப்பட்டிருக்கின்றது என்று கூறினர்.

## சட்டமா? யுத்தமா?

டாக்டர்களே தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை பயிற்சியாளர்களுக்குச் சிபார்சு செய்கின்றுர்கள். கனடா மற்றும் மெக்ஸிக்கோ நாடுகளைச் சேர்ந்த போதைப் பொருள் விநியோகஸ்தர்கள் அமெரிக்க வீரர்களுக்கு தமது தயாரிப்புக்கள் பற்றிய விளம்பரக் கையேடுகளை தபால் மூலம் அனுப்புகிறுர்கள்.

உலக விளையாட்டரங்கில் நடைபெறும் போதை வஸ்து மோசடியை தடுக்க கடுமையான சட்டம் நடைமுறைக்கு வரவேண்டும் இன்றேல் சுய முயற்சியின் பேரில், போட்டியிடும்வீரர்கள் விளையாட்டு மைதானத்தில் கூட கால் வைக்க முடியாத நிலை ஏற்படும் இதனைத்தடுக்க போதை வஸ்து பாவனைக்கு எதிராக யுத்தமே நடத்த வேண்டும்.

இன்று விளையாட்டுத் துறையில் போதை வஸ்துக்களின் ஊடுருவலைப் பார்க்கும் போது அதனைச் சட்டரீதியாக்குவதா? அல்லது ஓர் அணியில் இதற்கு எதிராக யுத்தம் செய்வதா? ●


## அம்பலவாணர் அன் சன்ஸ்

(இலங்கை கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள்)

196, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

எமது நிறுவனத்தில் பலவிதமான திருமண அழைப்பிதழ் அட்டைகள், புதுமனை புகுவிழா அழைப்பிதழ் அட்டைகள், விருந்துபசார அழைப்பிதழ் அட்டைகள், அறிமுக அட்டைகள் அடிக்கும் அட்டைகள், பிறந்தின மற்றும் சுபதின அழைப்பிதழ் அடிக்கும் அட்டைகள், இறக்குமதி செய்யப்பட்ட காகிதாதிகள், எழுது கருவிகள், மின்சார உபகரணங்கள், அச்சகங்களுக்குத் தேவையான வர்ணத் தீந்தைகள், மற்றும் இலங்கைக் கடதாசிக் கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி செய்யப்படும் சகலவிதமான கடதாசி வகைகள் மட்டை வகைகள் அன்பளிப்புப் பொருட்கள் யாவும் பெற்றுக்கொள்ளலாம்.

06068



## SPOKEN ENGLISH

ஆங்கிலம் கூச்சமின்றிப் பேசவேண்டுமா? மூன்றே மாத காலத்தில் பிறரைப் போல் நீங்களும் ஆங்கிலத்தை கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள். முற்றிலும் புதுமையான உளவியல் அடிப்படையில் அமைந்த பாடத்திட்ட முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். இலகுவான அஞ்சல்வழிப் பயிற்சி.

எம்மிடம் மிகப் புதுமையான முறை மூலம் கற்றுக் கொண்ட மாணவ மாணவிகளின் சில கருத்துக்கள்.

★ 'உங்கள் நிறுவனத்தின் மூலம் பெருமளவு நல்ல பலாபலன்களை பெற்றுள்ளேன். ஓர் ஆசிரியர் பக்கத்திலிருந்து படித்து கொடுப்பதிலும் பார்க்க தபால் மூலம் தெளிவாக படித்துக் கொள்ளக் கூடியதாக உள்ளது'

செல்வன் ஜி. சத்தியசிவன்
79/15 கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி

★ ''Well began is half done'' என்பார்கள் அதேபோல் உங்களது தபால்மூலம் ஆங்கில கல்விச் சேவையும் ஆரம்பமே சிறந்ததாக உள்ளது

செல்வி மும்தாஸ் முகமட்
பராக்கதெனியா வாதுவ

★ ''I thank you very much for your useful and nice training

செல்வி கலாநிதி பொன்னுத்துரை
நொச்சி மோடை G.M.T.S, ஓமந்தை

★ ''உங்களிடம் மூன்று மாதத்தில் ஆங்கிலம் திறம்படக் கற்றுக் கொண்டேன். 75% விளக்கமாக கற்றுக் கொண்டேன். உங்கள் நிறுவன தபால் மூலம் கல்விச் சேவை வளர்க, அடுத்த உங்களது கல்விச் சேவையில் தொடர்பு கொள்வோம்.

செல்வி. சிவகௌரி, வேலுப்பிள்ளை
நுணசை றோட், மாதகல்

★ ''தங்கள் நிறுவன ஆங்கில பயிற்சிகள் படிப்பதற்கு மிகவும் இலகுவாக இருக்கின்றது''

செல்வி எஸ். சரோஜினி
99, சென் பெனடிக் மாவத்தை, கொழும்பு-13

BRIGHT TRAINING CENTRE
P. O. BOX 162
COLOMBO.

06044

# பெண்கள் நலன் எய்த யோகப்பயிற்சி தேவை

மங்கையர் மஞ்சரி

யோகம் என்பது உடல், மனம், ஆத்மா என்னும் மூன்றையும் ஒருங்கிணையச் செய்வது இதன் இறுதி இலட்சியம் ஜீவாத்மா, பரமாத்மாவில் ஒன்றுதலே யோக சாஸ்திரம் யாவருக்கும் உரியது. இது நான்கு முக்கிய பிரிவுகளைக் கொண்டது. அவை கர்மயோகம், பக்தி யோகம், ராஜயோகம், ஞான யோகம் என்பன. இவை நான்கின் நோக்கமும் ஒன்றே. இதில் ராஜயோகத்தின் மூன்ருவது படியான ஆசனத்தில் ஹதயோகமும் அடங்கும். ராஜயோகமும், ஹதயோகமும் பரஸ்பர சார்புள்ளவை. ஹதயோகி பிராணனுடனும், உடலுடனும் தன் சாதனையைத்தொடங்குகிருன்

லௌகிக வாழ்வில் இருப்பவர்களாகிய நாம், ஆத்மிக உயர்ச்சியையோ அல்லது யோகத்தின் உயர்ந்த நிலைகளை அடையச் சிந்திக்காவிடினும் யோகாசனங்கள் பயிலுவதால் எமக்கு என்னென்ன நன்மைகள் உண்டாகும் என்பதைக் கவனிப்போம்.

பலயோக அனுபூதிமான்களின் அனுபவங்களையும் முடிவுகளையும் பார்போமாயின் யோகாசனப்பயிற்சிகள் உடலின்நாடி நரம்புகள், நரம்புச் சக்கரங்கள் இவைகளுக்குப்புத்துயிரளித்து வீரியப்படுத்தி, நன்ருக இயங்கச் செய்கிறது. உயிர்க்கருவிகளான சுவாசப்பை, இருதயம், என்பவற்றை வீரிய நிலையில் வைத்திருக்கிறது. சுவாசத்துடன் தொடர்புடைய ஆசனப்பயிற்சிகள் இரத்த ஓட்டத்தைச் சுறுசுறுப்பாக்கி, மாசுகளை எளிதாக முற்றிலும் வெளிப்போக்கி நோய்க் கிருமிகளைக்

சண்முகயோகினி ரவிச்சந்திரன்

கொன்று, உயிர்ப்பிக்கும் சக்தியை பன்மடங்கு அதிகரிக்கின்றது. சுவாச உறுப்புக்களை பலமடையச் செய்து பிராணவை உடலில் சமமாக, இயற்கைக்கு ஏற்ப பரவி நிலைத்துத் தொழிலாற்ற உதவுகிறது. குழலற்ற சதைக் கோளரசங்களை தாக்கி ஒழுங்கான முறையில் ரசங்களை கக்கச் செய்து இரத்தத்தில் கலக்க வகை செய்கிறது. ஊளைச் சதைகளைக் குறைப்பதுடன் உடலை அழகாகவும் இளமையுடனும் வைக்க யோகசனங்கள் உதவுகின்றன.

யோகசாஸ்திரத்திலே எண்பத்து நான்காயிரம் நிலைகள் உண்டு இருப்பினும் எந்த வயதினரும், எப்பாலாரும், எவ்வுடல் நிலையில் இருப்போரும், முறையான குருவை அணுகிச் சரியான முறையில் யோகத்தைப் பயிலலாம். தமது ஆகாரத்தை பாடங்களை மனிதர் தேர்ந்தெடுப்பது போல ஆசனங்களை இருபாலரும் செய்தால் மிக்க நலன் கிட்டும். பத்மாசனம், வஜ்ராசனம் ,சுகாசனம், புஜங்காசனம், சலபாசனம், தனுராசனம், ஹாலாசனம், பஸ்ஸிமோத்தாசனம், சர்வாங்காசனம், மத்தியாசனம், சிரசாசனம், ஏகபாதாசனம், அர்த்த மச்சேந்திராசனம்,விபிரீதஹரணி முத்ரா, யோக முத்ரா, ஜானு சிரசாசனம், திரிகோண ஆசனம், பாதஹஸ்தாசனம், சாந்தி ஆசனம், பிராணயாமம் போன்ற குறிப்பிட்ட சில ஆசனங்களை பெண்கள் செய்யின் உத்தம பலன் ஏற்படும். பலவித பிராணயாமங்கள் இருப்பினும் நாடி சுத்தி ஒன்றை மட்டும் செய்தாலும் உத்தம பலனுண்டு.

''நிலத்தின் தன்மை பயிருக்துளதாம்' என்பர்

நிலத்தின் தன்மை பயிரில் தெரியும். அதுபோல் பெண்களின் உடல், மன நிலைகளுக்கேற்பவே பிள்ளைகளும் உருவாகுகின்றனர்.

இன்றெல்லாம் பெண்கள் மேனுட்டு நாகரீக மோகங்கொண்டுள்ளனர். வெளித்தோற்றத்தில் கூடிய கவனம் செலுத்துதல் 'டயற்' செய்து உடம்பை நலியச் செய்தல் போன்றவை ஒரு சில உதாரணங்கள். இவற்றை விட உடற்பயிற்சி போதுசெய்தால் மட்டும்போதும் என்று நினைப்பவர்களும் உண்டு உண்மையில், உடற்பயிற்சியின் தசை நார்க்கட்டுக்கள் வேகமாக அசைக்கப்படுகின்றன. இதனுல் ''லக்டிக்'' அமிலம் சுரக்கப்படுகின்றது இதனுல் தசைகள் களைப்புறும் இதைச் சரிப்படுத்த போதிய ஒட்சிசன் உள்ளிழுக்கப்படுதல் வேண்டும். மற்றும் தசை நார்க்கட்டிலுள்ள 'அல்கலை' னும் சேர்ந்துதவ வேண்டும். ஆனுல் யோகாசனங்களினுல் ஒரு பக்கவிளைவுகளும் ஏற்படுவதில்லை. ஏனெனில் அவை ஆறுதலாகவும், படிப்படியாகவும், முறையாகவும், சுவாசம், ஒய்வு என்பனவற்றுடன் செய்யப்படுவதாலாகும்.

பெண்களின் உடலமைப்பு அபூர்வமானது. இவர்கள் ஆரோக்கியமாக இருப்பதற்கு சில ஆபூர்வ கோளங்களுள்ளன; அவற்றிற்கு கட்டாயம் பயிற்சி வேண்டும். அவை 'பிற்யூட்டரி, 'தைரொய்ட்' பிராதைரோல்டர் 'ஒவரி' முதலியன. இவைபெண்களுக்கு மிக அபூர்வமாகவும், சிலசமயம் அதிகமாகவும் வேலைசெய்கின்றன. அவை சுகப்பிரசவத்திற்கு உதவுகின்றன. தொந்தரவற்ற மாதவிடாய்க்கு மிக விசேஷமாக உதவுகின்றன. என்று யோக அனுபவஸ்தர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்கூறியவை மட்டுமன்றி இன்று அநேக பெண்கள் பலவிதமான நோய்க்காளாகிஉள்ளதை காணலாம் 'டயபற்றிஸ்'மலச்சிக்கல்,குடலிறக்கம் இருதயநோய், நரம்புப்பலவீனம், இரத்த அமுக்கம், 'அஸ்த்மா'போன்ற இன்னும் பல நோய்களுக்குள்ளாகி இருப்பதை காணக்கூடியதாக உள்ளது இந்நோய்களுக்குரிய ஆசனங்களைத் தக்க குருவிடம் பழகி பயிலத்தொடங்கின் முழுமையாக நோய் நீங்கி ஆரோக்கியத்துடன் வாழலாம்.

# கற்பனையின் இன்பம் கவிஉலகின் பெருஞ்செல்வம்

கவிஞர்கள் காலத்தின்யன்னல்கள். உலகத்தை அவர்கள் நோக்குகின்ற தன்மை வித்தியாசமானது இவர்கள் தாங்கள் கண்டதை, கண்டு அநுபவித்ததை மற்றவர்களுக்கும் சொல்ல வேண்டும் என்கின்ற துடிப்புள்ள ஜீவநதிகள். கடற்கரைகள், பொய்கைகள், பசுஞ்சோலைகள், காட்டுவளங்கள், இயற்கைக் காட்சிகள். இங்கேயே உறங்கிக் கற்பனை வானிலே சிறகடிப்பதில் இவர்களுக்கு அலாதிப் பிரியம் இவர்களின் கண்ணுக்கு வெறுந் துரும்புகூட ஆயிரம் கதைகள் கூறும். அணுவை ஒரு நொடிதனில் மலையாகக் கண்டு விடுவார்கள்.

செந்தமிழ்ப் புலவர்கள் உலக இயற்கையை நுணுகி ஆய்ந்து, இயற்கையின் எழிலைக் கண்டு வியந்து பாடினுர்கள். கற்பனையின் வசத்தில் தாங்கள் சிக்காமல் கற்பனையைத் தங்கள் வசப்படுத்தித் தங்கள் மன உணர்வுக்கு இசைந்த வண்ணம் உலக இயற்கையைத் திரித்துக் கூருமல், இயற்கையழகின் வழியிலே தமது அறிவினைப் பொருந்த வைத்துத் தமது நினைவுகளை விரிவுபடுத்தி மக்களுக்கும் விளக்கி மகிழ்ந்தனர்.

இதோ காலை வெயில் துள்ளிக் கொண்டு வருகின்றது. ஒவ்வொரு நாளும் காலை எழுந்தவுடன் பார்க்கின்ருேம். உள்ளத்தில் ஏதாவது உணர்ச்சி ஏற்படுகின்றதோ என்ருல் அது தான் இல்லை. அப்படி ஏதாவது தோன்றினுலும் கூட அதற்கு அழுத்தமோ, வடிவமோ இல்லாமையினுல் காற்று மண்டலத்தினிலே புகை கலந்து மறைவது போல அழிந்து விடுகின்றது. வெயிலைப் பார்த்ததும் ஏதாவது அருந்த வேண்டும் போலத் தோன்றும். போய் விடுகின்ருேம். இதே காலை வெயில் பாரதி வீட்டு வாசலிலேயும் நுழைகின்றது. 'என்னடா இந்த வெயில் என்று முணுமுணுத்துக் கொண்டு பாரதி உள்ளே எழுந்து போகின்ருனு...? இல்லவே இல்லை. 'காலை வெயிலா அடடா...என்ன அற்புதம்' என்று வரவேற்றவன்–

'தங்கம் உருக்கித் தழல்
குறைத்துத் தேனுக்கி
எங்கும் பரப்பியதோர்
இங்கிதம்......'

என்கிருன் பாரதி. காலை வெயிலையுங் பார்க்கிருேம். தங்கத்தையும் பார்க்கிருேம். ஆனுல் பாரதியோ வெயிலின் அழகை பல்வேறு சாயைகளை, ஒவ்வொரு விதமாக புது அனுபவமாக புதிய உணர்ச்சி பொங்கத் தருகின்ருன். அவன் கற்பனை தான் என்னே......

ஆதவன் ஆகாய வீதியிலே வலம் வந்து கொண்டிருக்கிருன். கவிஞர் ஒருவர் சூரிய காந்திப் பூவைக் கவனிக்கிருர். சூரியன் செல்லும் திசை நோக்கித் திரும்பக் கூடிய தன்மை கொண்டதுஇம்மலர். கவிஞர் உலகம் ஆதவனது காதலியாகத் தாமரை மலரைச் சித்திரிக்கின்றது. இங்கே ஆதவனை நோக்கித் திரும்புகின்ற மஞ்சள் நிற சூரிய காந்திப்பூவின் மகரந்த மணிகளை மஞ்சள் பொடியாகக் கற்பனை செய்த புலவருக்குச் சூரியகாந்தி மலர் ஒரு பெண்ணுகத் தெரிகின்ருள். ஆதவனது வரவுக்காய், தாமரை மலர் காத்திருக்க ..... இங்கே தாமரை மலருக்குத் தெரியாமல் சூரியகாந்திப்பூ தவமல்லவா செய்கிறது தனது காதலனை இன்னெரு பெண் நோக்குவதை எந்தப் பெண் பொறுப்பாள்..... ?

மஞ்சள் குளித்து
முகமினுக்கி
நல்ல மாயப் பொடி பூசி
நிற்கும் நிலை
கஞ்ச மகள் வந்து காணிற்
சிரிக்குமோ
கண்ணீர் உகுக்குமோ யார
றிவார்'

இந்தக் கள்ளத் தவத்தை கமலமலர் வந்து பார்த்தால் எப்படியிருக்கும். சிரிக்பாளா.....? கூச்சல் போடுவாளா? கண்ணீர் விட்டு கதறுவாளா.....?

இப்போது ஆதவன் தாமரைகள் நிறைந்த தடாகத்திற்குப் போய் விட்டான். அங்கேயுள்ள தாமரை மலர்களின் மீது அன்னப்பட்சிகள் துயில் கொள்கின்றன. நீலப் பட்டாடை அணிந்த மங்கையொருத்தி அங்கே நீராடிக் கொண்டு இருக்கின்ருள் தண்ணீர் மேலே ஆங்காங்கே செந்நிற ஒளி தெறிக்கின்

பத்மா தர்மராசா

றது. என்னவாகவிருக்கும். கவிஞர் ஆதவனைப் பார்த்து விட்டு அணங்கைப் பார்க்கின்ருர். காரணம் புரிந்து விட்டது. அந்தப் பட்டாடையிலே இழைக்கப்பட்டிருந்த மணிகளின் மீது கதிரவனின் ஒளி படுவதனுல் ஏற்பட்டஒளி நீரில் பட்டுக் கோலங்காட்டுகின்றது நெருக்கமாக மணிகள் இருப்பதனுல் ஒளி பட்டு வந்த விம்பம் நெருக்கமான தாமரை மலர்கள் போலக் காட்சி கொடுக்கின்றது. இதைக் கவிஞர் மட்டுமா பார்க்கின்ருர். தாமரை மலர் மீது உறங்கிக் கொண்டிருந்த அன்னப்பட்சியும் பார்த்து விடுகின்றது. தான் இருந்த மலரை விட்டு அந்தக் கோலத்தை தாமரைமலரெண நினைத்துத் தாவுகின்றது. அந்தோ... ஏமாந்து விட்டதே. தனது மடமையை யெண்ணி அன்னம் நாணுகின்றது. இதையும் பார்த்த பின் சிந்தாமணி ஆசிரியர் பேசாமல் இருப்பாரா?

'நீலத் துகிற் கிடந்த
நிழலார் தம் மணிகள்
கோலச் சுடர் விட்டுமிழக்
குமரியன்னங் குறுகிச்
சால நெருங்கிப் பூத்த
தடந்தாமரைப் பூவென்ன
வாவிச் சுடர் கவ்வி
அழுங்கும் வண்ணம்
காண்மின்'

கதிரவனின் ஜால வித்தையிலே அன்னம் ஏமாந்து விட்ட காட்சியை காணப் பொய்கைக்கு வரும்படி எங்களையும் இழுத்து விட்டாரே கவிஞர்.

பெரிய புராணத்திலே ஒரு காட்சி. சேக்கிழார்இறைபக்தி மிக்கவர். இதனுல் இவர்காணுகின்ற காட்சிகளிலே இறையுணர்வைக் காண்பதில் வியப்பேதுமில்லையே. மருத நிலத்தினுள்ளே நுழைகின்ருர். அங்கேயுள்ள பழமரங்களில் எல்லாம் கனிகள் காணப்படுகின்றன இந்தக் கனிந்த கனிகளிலிருந்து வெளியேறுகின்ற பழச்சாருனதுஇலைகளின் வழியாக வழிந்து ஓடி வந்து, தாமரை மலர் மீது சொரிகின்றது. மருதநிலத்தின் மாண்பு இது. சேக்கிழாரின் கற்பனை எங்கே போகின்றது......... பாருங்கள்.......................

'பரந்த வினை வயற்
செய்ய பங்கயமாம்
பொங்கெரியில்
வரம்பில் வளர் தேமாவின்
கனிகிழிந்து மது நறு நெய்
நிரந்தரம் நீள் இலைக்கடை
யால் ஒழுகுதலால் நெடி
தவ்வூர்
மரங்களும் ஆகுதி வேட்கும்
தகைமையென மலர்ந்
துளதால்'

தேமாவின் கனிச்சாறு நெய் போலத் தெரிகிறது சேக்கிழாருக்கு இந்த நெய் ஓடி வந்து தாமரை மலர் மீதிலல்லவா சொரிகிறது. அந்தப்பங்கயமாம் பொங்கெரியில் விழுவதால் தாமரைமலரை ஓமகுண்டமாக நினைக்கின்ருர். மனிதர்கள் தான் ஓமம் வளர்க்கின்ருர்கள். மருத நிலத்து மரங்கள் கூட ஓமம் வளர்த்து வேள்வி செய்கிருர்களே சேக்கிழாரின் இறை உணர்வையும் கற்பனையையும் என்னவென்பது!

குறுந்தொகைக்கு வாருங்கள் அங்கே ஒரு காட்சி இரண்டு புலவர்கள் கொன்றை மலர்ச் சோலையினூடாகப் போகின்ருர்கள். கொன்றை மலர்கள் பூத்துப் பொலிந்து காணப்படுகின்றன மரத்தின் கீழே நிலத்திலும் வீழ்ந்து பரவிக் கிடக்கின்றன புலவர்கள் இருவரும் அளவளாவிக்கொண்டு போய்க் கொண்டிருக்கின்றனர். திடீரென ஒருவர்நின்றுகொண்டே ஓர்இடத்தைச் சுட்டிக்காட்டி 'புலவரே அதோ பாரும் அது எப்படித் தெரிகிறது .. .....?' என்ருர் உடனே மற்றப் புலவரோ,

'கவலை கெண்டிய வகல்
வாய்ச் சிறு குழி
கொன்றை யொள் வீதா
அய்ச்செல்வர்
பொன் பெய் பேழை மூய்
திறந்தன்ன
... ..............' என்கிருர்.

புலவர் எதைச் சுட்டிக்காட்டியிருப்பார் ? மற்றப் புலவர் கண்ட காட்சி என்ன என்று நினைக்கிறீர்கள்...? கொன்றை மரத்தின் கீழேயுள்ள குழியை கொன்றை மலர்கள் நிரப்பி விட்டன கொன்றை மலர்கள் பொன்போலக் காட்சி கொடுக்கின்றன. இதைப் பார்த்த புலவர்தான் அப்படிக் கற்பனை செய்து பாடினுர். வீ என்ருல் மலர். மூய் என்ருல் மூடி என்று பொருள்'. பொன் பெய் பேழை மூய் திறந்தன்ன.....' அதாவது பொன்னுல் செய்யப்பட்ட அணிகலன்களை ஒரு பேழையினிலே வைத்து

(14-ம் பக்கம் பார்க்க)

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ் சோதிடர் ச. அரியநாயகம்

## 11-06-1989 — 17-06-1989

**மேடம்** பணப்புழக்கம், வாகன இலாபம், வெளியூர் பிரயாண நிறைவு, பெண்களால் சுகம், பெரியோராசி, எண்ணியது நடக்கும் வெளிநாடு போனவர் வருகை, இளைய சகோதர வழியுதவி, விவாக நிச்சயம், பிதாவழி பணம், கல்வியால் புகழ்.

**இடபம்:** பிரிந்த காதலர் ஒன்று சேருவார், பெரியோராசி, வாகன மாற்றம், உயர் பதவி, லட்சுமி கடாட்சம், புதுமனைப் பிரவேசம், ஆடையாபரண சிறப்பு, மூதாதையர் சொத்துகள் கிடைக்கும் வணிகர்கள் இலாபம்.

**மிதுனம்:** மாதாவழி உதவி, வாகன நஷ்டம், கொடுக்கல் வாங்கல் பிணக்கு பெரியோராசி, தெய்வவழிபாடு மூத்த சகோதர வழி நன்மை. மாமன் வழியுதவி, மனை பூமிச் சேர்க்கை, வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம்.

**கடகம்:** புகழ் தேடிவரும், உயர் பதவி, உத்தமர்கள் வருகை கலைஞர்கள் கௌரவிக்கப்படல், பிரிந்தவர்கள் ஒன்றுசேருதல் வாகனமாற்றம், தடைப்பட்ட பணம் கிடைக்கும் வைத்தியம் வாணிபம் செய்வோர் இலாபம்.

**சிங்கம்:** பெண்களால் புகழ் தேடுவர், பெரியோராசி, வாகனலாபம், லட்சுமி கடாட்சம், மனை பூமியால் அகமகிழ்ச்சி, புகழ்தேடிவரும் புதியவாகன சேர்க்கை, வணிகர்கள், கடல் தொழில் இயந்திர தொழில்செய்வோர் லாபம், தொழில் மூலம் இடமாற்றம்.

**கன்னி:** கல்வியால் சித்தி, உயர் பதவி, இராஜ மரியாதை வெளிநாட்டு பிரயாணவசதி, புத்திரரால் மகிழ்ச்சி, கலைஞர்கள் கௌரவிக்கப்படல், இளையசகோதரவழி விவாகம், எண்ணியது நடக்கும், நீண்ட நாட்கள் பிணக்கு தீரும், வணிகர்கள் கடல் தொழில் இயந்திரதொழில், வைத்தியத் தொழில்மூலம் இலாபம்.

**துலாம்:** வாக்கு சாதுர்யம், பணப்புழக்கம், உதவி செய்து உபத்திரவப்படல், உத்தமர்கள் உறவு வாகன மாற்றம், விவாக நிச்சயம், திடீர் பிரயாணம், பண நிறைவு புது மனையலங்காரம், இருதொழில் இலாபம், இளைய சகோதர வழியுதவி,

**விருட்சிகம்:** தேடியது கிடைக்கும், காதலர் மகிழ்ச்சி, குடும்பத்தில் குதூகலம், பணப்புழக்கம், பெரியோராசி, தூரத்து செய்தியால் நன்மை, தடைப்பட்ட காரியம் நிவர்த்தி, மனைமாற்றம், கலைஞர்கள் கௌரவிக்கப்படல், வணிகர்கள், கடல் தொழில் செய்வோர், இயந்திரத் தொழில் மூலம் மகிழ்ச்சி.

**தனுசு:** மனையலங்காரம், எண்ணியது நடக்கும், பணச் செலவு, தூரதேசம் போனவர் வருகை, வாகன மாற்றம், கல்வியால் தொழில், மனையில் நற் காரியம், வணிகர்கள், இயந்திர தொழில் செய்வோர் இலாபம்.

**மகரம்:** மனக்கவலை, வாகன மாற்றம் பணத்தடை வெளியூர் போனவர்கள் வருகை, இளைய சகோதரவழி நன்மை, மனை பூமியால் மகிழ்ச்சி, நெடுநாள் தடையான காரியம் வெற்றி, பிரிந்தகாதலர் ஒன்று சேருதல் மாமன் வழியால் மகிழ்ச்சி.

**கும்பம்** தேடியவர் வருகை பணப் புழக்கம், மனநிம்மதி, வாகனமாற்றம், மங்கள காரிய நிச்சயம், வெளியூர் போனவர் வருகை, வணிகர்கள் கடல் தொழில் செய்வோர், இயந்திரத் தொழில், செய்வோர் இலாபம், புதுத் தொழில்.

**மீனம்:** வாகனச் சேர்க்கை, தொழில் பேறு, தேடியவர் வருகை, இளைய சகோதர வழியுதவி, மாமன் வழியில் விவாகம், வெளியூர் போனவர்கள் வருகை, புதுத்தொழில், தெய்வஆசி, இராஜ மரியாதை புத்திரப்பேறு, புகழ் தேடிவரும், வணிகர்கள், கடல் தொழில் மூலம் இலாபம்.

## காலங்கள்...

[7-ம் பக்கத் தொடர்]

'நீங்கள் பெரியவர்கள் என்னை இப்படி அழைக்கத் தேவையில்லை. நான் உத்தியோக ரீதியில் வரவும் இல்லை. உங்கள் வீட்டிற்கு அழையாத விருந்தாளிகளாக வந்திருக்கின்றோம்' என்றுகூறிச் சிரித்தான்.

'உள்ளே வாங்க' மாசிலாமணி மலர்ந்த முகத்தோடு சிரித்துக்கொண்டே அழைத்தார்.

'வா சிறி' என்று சிறியையும் அழைத்துக் கொண்டே சென்றார்.

அழகான சிறிய வீடு. வெளியேயும், உள்ளேயும் மிகத் துப்புரவாகவும், அலங்காரங்களுடனும் விளங்கியது இருவரும் உட்கார்ந்தனர். மாசிலாமணி நின்று கொண்டிருந்தார்.

''நீங்களும் உட்காருங்கள். எங்கே வீட்டில் மற்றவர்களைக் காணோம்''.

''மகளும் மகனும் சிந்து ரீச்சருடன் கந்தையா மாஸ்டரைப் பார்க்கப் போயிருக்கினம் மனைவி உள்ளே சமையல் வேலையிலிருக்கின்றா''.

''நல்ல விடயமாகத்தான் வந்திருக்கின்றேன். பெரியவர்கள் வரவேண்டிய விடயம். உங்கள் விருப்பத்தினைத் தெரிந்து கொண்ட பின் மிகுதியை முறைப்படி நடத்துக்கலாம்.'' என்று ஆரம்பித்து விடயத்தை விளக்கினான் ரகுவரன்.

அவன் கூறிய விடயங்களை சமையலறையிருந்த சந்திரஞானமும் கேட்டுக்கொண்டிருந்தாள். தன் கனவுகள் பலிக்கும் காலம் வந்துவிட்டதாகவே கருதினாளவள். கணவன் மாசிலாமணி ஏதும் உழறிக் கொட்டி குழப்பி விடுவாரோ என்று உள்ளூரப் பயந்தவளாய் அவசர அவசரமாக தேநீர் தயாரித்துக் கொண்டு வெளியே வந்தாள். தேநீர் பரிமாறிய பின் ஒரு பக்மாக ஒதுங்கி நின்று கொண்டாள் சந்திரஞானம்.

''அம்மா இப்படி உட்காருங்க. உங்கள் மகளின் வாழ்க்கைப் பிரச்சனை பற்றி கதைக்கின்றோம் நீங்கள் சேர்ந்து பேசி முடிவு செய்ய வேண்டிய விடயம். இவர் தான் மாப்பிளை, என்னுடன் படித்தவர். உங்கள் மகள் வேலை பார்க்குமிடத்தில் தான் படிப்பிக்கின்றார். குடும்பத்தில் ஒரு பையன். வேறு சோலிகள் இல்லை. நிறையச் சொத்திருக்கின்றது. நல்ல குடும்பம். மிகுதியை நீங்கள் விசாரித்தறிந்து கொள்ளலாம் சீதனம் நீங்கள் விரும்பியதைக் கொடுக்கலாம். அவராக கேட்டு வாங்க வேண்டிய அவசியம் இல்லை'' என்று கூறி முடித்தான்

அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டேயிருக்கலாம், போலிருந்தது சந்திரஞானத்துக்கு. அவன் முகத்தைப் பார்த்துச் கொண்டிருந்தவளுக்கு மீண்டும் மீண்டும் பார்க்க வேண்டும் போலிருந்தது. அவளுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை.

''என்னம்மா பேசாமலே யிருக்கின்றீர்கள்?'' என்றான் ரகுவரன்.

'தம்பி நீங்கள் பெரிய பதவியிலுள்ளவர். எங்கள் நன்மைக்காகத் தான் கூறுகின்றீர்கள். நாங்கள் வேண்டாம் என்று சொல்வோம்' என்றாள் சந்திரஞானம்.

'அம்மா நான் சொல்வதற்காகவோ, என் நண்பர் விரும்புகின்றார் என்பதற்காகவோ நீங்கள் சம்மதிக்கக் கூடாது. மகளையும் கலந்துபேசி விருப்பத்தைக் கூறினால் சரி' என்றான்.

அவன் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் தேனாக இனித்தது சந்திரஞானத்துக்கு. பெரும்பதவியிலுள்ள ஒருவன் 'அம்மா' என்று அழைக்கும் போது அவள் உள்ளமெல்லாம் இனம்புரியாத ஓர் நுண்ணுணர்வு ஏற்பட்டது. அவனைப்பற்றி பலரும் கதைக்கக் கேள்விப்பட்டிருக்கின்றாள். அவனை நேரில் பார்த்து கதைத்த போது அவனுடைய வசீகரத்தன்மையை உணர்ந்து மெய்சிலிர்த்தாள்.

'நான் வீட்டுக்கு இன்று பிரயாணம் ஒரு கிழமைக்குள் திரும்பி விடுவேன். அதற்கிடையில் நீங்கள் ஓர் முடிவுக்கு வரலாம் இல்லையா?

'ஓம் தம்பி'

'சரி போய்விட்டு வாறோம் என்று கூறிப் புறப்படுகையில் அருண்மொழி, சிந்து எல்லோரும் கதவுக்குச் சமீபமாக வந்து நின்றனர்.

(வளரும்)

## தூதுவனுக்கு ...

[10-ம் பக்கத் தொடர்]

இராமன் கூறி அனுப்பிய செய்தியினைச் சுருக்கமாக எடுத்துரைத்தான்.

''... தேவியை விடுக அன்றேல்
செருக்களத்(து) எதிர்ந்து
தன் கண்
ஆவியை விடுக'' என்றான்
அருள் இன்னம் விடுகிலா
தான்.

தூதுரைத்து முடித்த அங்கதன் அத்தோடு நின்றுவிடவில்லை. இராவணேஸ்வரனின் ஆண்மையைப் பழித்துரைத்தான். ஆத்திரமூட்டக் கூடிய வகையில் ஆக்ரோஷத்துடன் பேசினான். ''உன்னுடைய பாட்டி இராமபிரானால் வதைக்கப்பட்டபொழுதோ, உன் இனிய மாமன் மாரீசன் இராமனது அம்பினால் மாண்டவேளையோ, உன் தங்கையாகிய சூர்ப்பனகையின் செவியும், முலையும், மூக்கும் அரியப்பட்ட நாளோ போர் செய்ய வராத நீ இனி எப்படி போருக்கு வருவாய்?சீ! உனக்கும் ஆண்மையென்று ஒன்று உண்டா?'' எனத் தருக்கரீதியாக நியாயம் காட்டிக் கேள்விக் கணைகள் தொடுத்து நின்றான்.

இராவணனிடம் ஏற்கனவே கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த கோபக்கனலுக்கு அங்கதனின் சுடுசொற்கள் விறகாகின. உலகத்தில் உள்ள உயிரினங்கள் அத்தனையையும் அழித்துவிடவேண்டுமென நினைக்குமளவிற்கு என்றுமில்லாத கோபவெறி உண்டாகியது. வந்திருப்பவன் தூதுவன் என்பதை மறந்தான். தூதுவனைக் கொல்லுதல் அரச தர்மம் அன்று என்பதையும் சிந்திக்கத் தவறினான். ''இச் சிறுவனைப் பிடித்துத் தரையில் வீசி அடியுங்கள்'' என்று தன் மருங்கில் நின்ற நால்வரைப் பணித்தான். ஆனால் அந் நால்வரையும் பிடித்துக் கோபுரவாசல் வரை இழுத்துச் சென்று பின்னர் தரையில் வீசி மிதித்து அவர்கள் தேகங்களிலிருந்து இரத்தம் பிறிட்டு ஓடும்படி செய்தான் அங்கதன். அவனது வெண்மையான அங்கமெல்லாம் அவர்களின் இரத்தத்தால் சிவப்பாகியது அங்கு சூழ்ந்து நின்ற ஏனைய அரக்கரைப் பார்த்து ''அறிவிலிகளே! அக்கினிமயமான இராம பாணங்கள் இலங்காபுரியில் வந்து விழுவதற்கு முன்னமே எங்கேயாவது ஓடிப்போய் உயிர் தப்புங்கள்'' என்று எச்சரித்து ஒரே பாய்ச்சலில் இராமபிரான் இருக்கும் இடம் ஏகினான்.

அங்கதன் சிறுவனாய் இருந்தும் தான் ஓர் ஒப்பற்ற வீரன் என்பதைக் காட்டிவிட்டான். இராமனது நம்பிக்கை வீண் போகவில்லை. சரியான ஒருவனையே இராமபிரான் தூதனாகத் தெரிவு செய்தான் என எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் அங்கதன் நடந்து கொண்டான். இராமன் அவனைத் தெரிவு செய்யும்போது'' ...ஒன்னார் வீரமே விளைவிப்பரேனும் தீதின்றி மீள்தல் வல்லான்'' என நினைத்தே தேர்ந்தெடுத்தான் அவன் எண்ணியவாறே வாலி மைந்தனும் எதிரிகளை மடக்கி வீரசாகசம் புரிந்து மீண்டான். தன்னைப்போல் பல அங்கதர்கள் இராமபிரானுக்குப் பக்கத்துணையாக இருக்கின்றார்கள் என்பதை அரக்கர் முன்னிலையில் நிரூபித்து வந்தான். இத்தகையதொரு கருத்து எதிரிகளிடத்து ஏற்படவேண்டும் என்பதற்காகத்தானே இராமபிரானும் அனுமனையே மீண்டும் அனுப்பாமல் அங்கதனைத் தூதுவனாக அனுப்பினான். எனவே அங்கதன் போதிய அனுபவமற்ற ஓர் இளைஞனாக இருந்தபோதிலும் ஒரு நற்றூதுவனுக்கு இருக்கவேண்டிய பண்புகள் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற ஒருவனாகப் போற்றுதற்குரியவன் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் கைவண்ணத்தில் ஒரு சிறிய கதாபாத்திரமாகிய அங்கதன் முழுமை பெற்ற அற்புத சிருஷ்டி ஆகிவிடுகின்றான். பாத்திர வார்ப்பில் கம்பருக்கு நிகர் கம்பரே.!

## கற்பனையின் இன்பம்...

[13-ம் பக்கத் தொடர்]

அதனை மூடாமல் திறந்து வைத்தால் எப்படி இருக்குமோ அப்படியிருக்கின்றது. என்றார் கவிஞரின் கற்பனையைப் பார்த்தீர்களா... ?

அடுத்து இலங்கை வளத்தைப் பார்ப்போமா...? ஆற்று நீரானது கடலை நோக்கி வருகின்றது. நீரின் ஓட்டத்திற்கு எதிர் திசையில் செல்வது தான் மீனினங்களின் வழக்கம். இங்கே கழிமுகத்தில் எதிரேறிச் சென்று மீனினங்கள் ஆற்றுநீரை வரவேற்கின்றன. இக் காட்சி சோமசுந்தரப் புலவருக்குப் பெண் வீட்டார் மாப்பிள்ளையை எதிர் கொள்வது போலத் தெரிகின்றது நண்டுகள் குடை பிடித்தும் திருக்கை ஆலவட்டம் பிடித்தும், சுறு வாளேந்திக்கொண்டும், ஆமை சீர்வரிசை தாங்கியும் வரவேற்பதாகக் கற்பனை செய்கிறார்.

''மங்கலந் திகழ் மாப்பிள்ளை
மார் வர
மாமன் பக்கம் வரவெதிர்
கொள்ளல் போற்
பொங்கு வெள்ளப் புது
மண நீர் வரப்
புரள மீனிரை போய் எதிர்
கொள்ளுமே ...''

என்று மேலும் கூறிக்கொண்டு போனவர் ... இலங்கைக் காட்டுவளம் பற்றிக் கூறுகையிலே,

''காமர் நெடுங் காட்டில்
காணுமொரு மா புதினம்
மாமரைகள் ஒலி கேட்டுத்
தாமரைகள் ஆயினவே''

என்கிறார். மாமரைகள் என்றால் பெரிய மரைகள். அதாவது கொடிய விலங்குகள் இவற்றின் சத்தங் கேட்டு தாமரைகள் ஆயின தாமரை என்றால் தாமரைக் கொடி மரைகள் எப்படிக் கொடியாக இருக்கமுடியும்? இருக்கமுடியாதே..? மாமரைகள் ஒலி கேட்டு மரைகள் தாவிப் பாய்ந்ததைப் புலவர் கண்டு விட்டார். தாவிப்பாய்ந்த மரைகள் தாவுகின்ற மரைகளாகி,.. தாவும மரையாகி.., தாமரையாகிவிட்டது. புலவர் கண்ட புதுமையான கற்பனையல்லவா இது..?

இன்னுமொரு காட்சி கானகத்திலே நிகழ்கின்றது. குப்பை மேட்டிலே நடனம் ஆடிக் கோழிக் குலத்தினது பாராட்டைப் பெற்ற வான் கோழி... கானகத்துப் பறவைகளின பாராட்டைப் பெற விரும்பிக் கானகம் வருகின்றது. அங்கே கானமயில் தன் வண்ணப் பசுந் தோகை விரித்து ஆட, வாகை, வன்னி போன்ற காட்டு மரங்களிலிருந்து கிளி, நாகணவாய், குயில், மரங்கொத்தி போன்ற பறவையினங்கள் கண்டு களித்துப் பாராட்டின. இதைக் கண்ட வான்கோழி பொறுமை கொண்டு, ''என் அழகைப் பாரீர்.. என் ஆடலைப் பாரீர்...'' என்றவாறு அரங்கிலே சுழன்று, சுழன்று ஆடியது. கானகத்துப் பறவைகளோ இகழ்ந்து கலகலத்தன. ஔவையாரும் இக் காட்சியைக் கண்டுவிட்டார் அவருக்குச் சிரிப்பு வருகின்றது. அறிவுடையார்கள் போலப் பாவனை செய்கின்ற அறிவீனர்களும் நினைவில்வர

''கானமயிலாடக் கண்
டிருந்த வான்கோழி
தானுமதுவாகப் பாவித்துத்
தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித்
தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி''

என்று பாடுகிறார் மயிலின் அழகுக்கும், ஆடலுக்கும் வான்கோழி ஈடாகுமா...?

இப்படி எத்தனையோ காட்சிகள் புலவர்களின் கண்களிலே பட்டு, மனதினிலே பல்வேறு உணர்ச்சிகளைத் தூண்டி விடுகின்றன. அன்பு, கருணை, வீரம், துயரம், காதல், அச்சம், நகைச்சுவை, பயம் போன்ற பல உணர்ச்சிகளோடு ...நீதிக் கருத்துக்களையும் எத்தனை சுவையாக வெளிப்படுத்துகிறார்கள் இவர்களின் கற்பனைகள் விண்ணையும், மண்ணையும் அளாவி நனியுயர்ந்து பரக்கத் தொடங்குகின்றன எம்மைச் சிரிக்கவும், சிந்திக்கவும், ரசிக்கவும் தூண்டுகின்றன. நிஜ உலகத்துச் சூழ்ச்சிகளோ, பீதிகளோ, பயங்கரங்களோ அந்தக் கற்பனை உலகில் கிடையாது. இதனால் அங்கே கவலை இல்லை, துன்பம் இல்லை நாங்கள் புலவர்களாகா விட்டாலும் புலவர்களின் கற்பனை நயத்திலே மூழ்கி இன்பமடையலாமல்லவா?

# உங்கள் கேள்விகளுக்கு அறிஞர் பெருமக்கள் பதில் தருகிறார்கள்

இலக்கியம், சமயம், விஞ்ஞானம், சமூகவியல் போன்ற பல்துறை சார்ந்த அறிஞர் பெருமக்களிடமிருந்து வாரமுரசொலி வாசகர்களின் கேள்விகளுக்கு வாரந்தோறும் பதில் பெற்றுத்தர வாரமுரசொலி ஒழுங்கு செய்துள்ளது. வாரம் ஒரு அறிஞர் பெருமகன் பதில் தருவார்.

வாசகர்களிடமிருந்து வரும் கேள்விகளில் தரமான பத்துக்கேள்விகளுக்குப் பதில் தரப்பெறும். மிகச்சிறந்த கேள்வியெனப் பதில் தரும் அறிஞர் பெருமகனால் கணிக்கப்படும் கேள்வியை அனுப்பிவைத்த வாசகருக்கு வாரமுரசொலி ஐம்பது ரூபா சன்மானம் வழங்கிக் கௌரவிக்கும்.

இலக்கியம், சமயம் சம்பந்தமான கேள்விகளுக்கு அறிஞர் க. உமாமகேஸ்வரன் பதில் அளித்து அறிஞர் பெருமக்கள் பதில் பகுதியை ஆரம்பித்து வைக்கிறார்

திரு. உமாமகேஸ்வரனிடம் கேட்கவிருக்கும் கேள்விகளை வாசகர்கள் இம் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னதாக முரசொலி 'அறிஞர் பெருமக்கள் பதில்'' ஆர். ஜி. பில்டிங் ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். இக் கேள்விகளுக்குரிய பதில் ஜூலை 9 ஆம் திகதி வாரமுரசொலியில் பிரசுரமாகும்.

# அரசாங்க ஊழியர்களின் சம்பளம் இடை நிறுத்தம்?

யாழ். மாவட்டத்தில் தொடர்ந்தும் கடமைக்குச் சமுகமளிக்காதிருந்துவரும் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை இடைநிறுத்தி வைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது.

இதேவேளை இங்குள்ள அரசாங்கத் திணைக்களங்களில் ஊழியர் தினவரவு இடாப்பு ஒழுங்காக பேணப்படல் வேண்டுமெனவும், தினமும் தினவரவு இடாப்புக்கள் உயரதிகாரிகளால் பூர்த்தியாக்கப்பட்டு வேலைக்கு சமுகமளிக்காத உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை பதியப்படல் வேண்டுமெனவும் கண்டிப்பான பணிப்புரை வழங்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

தற்பொழுது கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரசாங்க செயலக உயரதிகாரிகள் கடமைக்கு உடன் திரும்பாவிடில் பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டு பதவி விலகுமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

இது தொடர்பாக கண்டிப்பான நடைமுறைகளை பின்பற்றுமாறு யாழ். அரசாங்க அதிபருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

## 36 ஆண்டுக்கு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்த முடிகிறதுதான். அவர்கள் உண்மையில் மனிதப் பிறவிகள்தான் தெய்வங்களென்றே கூறிவிடலாம்.

மற்றவழி, ஒவ்வொரு பலவீனமான நவீன மனிதனும் ஒரு அருணகிரியாகவோ, காளிதாசனாகவோ காமவாழ்க்கை அணுவுக்கணு அநுபவித்து உடம்பிலுள்ள ஒவ்வொரு மயிர்க்காலினூடும் காமரஸம் அனுபவித்தபின் இறக்குந்தறுவாயில் மனம் வருந்தி ''நல்லவராகுதல்.''

மேற்கே நாடுகளில் தான் இதுகளின் சிகரத்தைக் காணலாம். அல்லாவிடில் தினம் 150 ஆயிரம் Sleeping pills Newyork நகரில் மட்டும் விலைப்படுமா? அல்லது கிழமைக்குச் சராசரி 40 பேர் தற்கொலை செய்கிறார்களே! காரணம் காமம் திரிந்து, பேதலித்து, நிலைகெட்டு இருப்பது.

''பூவினும் நுண்ணியது காமம்'' என்று வள்ளுவன் கூறினது ஞானதிருஷ்டியில்லாமலா?

புதுமைப்பித்தன் சுருங்கச் சொல்லி விளங்கவைத்த சில வரிகள் ஞாபகத்திற்கு ஓடிவருகின்றன......

''மேற்கத்தி உலகத்திலே modern Age என்பது கனவுகளுக்குக் காம மூலாதாரம் காட்டுகிறது; யந்திரம் பண்ணிவைக்கும் வம்புகளால், நினைப்புக்குள் அடங்காத கோரமான கற்பனைகளை எழுப்புகிறது. கசப்பை ஆதாரமாகக் கொண்டு......''

...''sex ஐ இலக்கியத்தில் நம்மவர்கள் கலந்து ரஸித்த மாதிரி மேற்கத்தியான் ஒருவனும் செய்யவில்லை. எல்லாஞ் சேர்ந்து சுப்பிர தீபத்தின் அநுபோகவகை கூறுவதற்கு முன்னிற்காது. இருந்தாலும் நாம் ஒதுங்கிப் பிழைக்கிற ஜாதி, அதாவது இன்று இக் காலத்தில் வாழ்விலே தென்படும் சுதைகளைப் பற்றி நாம் அவ்வளவாகச் சட்டை செய்வது இல்லை...''

உமது மனதில் சலனம் ஒன்று சற்று ஆழமாக அனுபவ பூர்வமாக ஏற்பட்டால் அமைதியாகும் என்பது என்ன நிச்சயம்? என்றாலும்...'அல்லி' நாவல் கிடைத்தால் Dr மு.வ வாசித்துப் பாரும்.

அடே! ஏதேதோ எழுதிவிட்டேன் போலிருக்கு எல்லாம் உமது ஒரு ''அநுபவம்' செய்தவேலை இப்பொழுது தெரிகிறதா? சுய அநுபவம் கவிதைக்கு, இலக்கியத்திற்கு எத்தகைய அவசியமானது என்று? என்னைக் கேளும்.

நிற்க நான் 22-ந் திகதி பேராதனியாவிற்குப் போய் 23 மாலை கொழும்பிற்குத் திரும்புவேன் Viva 23 rdபகல் மற்றுப்படி இவ்விடம் சுகம். ஏதோ இருக்கிறோம்.

செல்லும் வழி இருட்டு
செல்லும் மனம் இருட்டு
சிந்தையறிவினிலும் தனியிருட்டு.

மேசை மீது ஒரு பழைய Exercise Book ல் ஒரு பொன்மொழி எழுதப்பெற்று இருக்கிறது.

''காதல்கிடைக்குமோ கடைத் தெருவிலே?''
கிடைக்குமா? கிடைத்தால் ? ? ? ?

அன்பு
'' கைலாஸ்''

கடிதம் முடிந்தது ஒரு நண்பருக்கு இந்தப் பேரறிஞர் எழுதிய கடிதத்தில் காணப்பட்ட அவரது இளமைக் காலச் சிந்தனைகள் சுமார் 36 வருடங்களுக்கு முன்னர் அந்த மனிதர் என்னமாதிரிச் சிந்தித்தார்? அவரது பேச்சு, மூச்சு, எழுத்து, சிந்தனை எல்லாமே இலக்கியமும், ஆராய்ச்சியும் தான். எழுத்தாளர்களை மனதார நேசித்தும், தட்டிக் கொடுத்தும் உற்சாகப்படுத்தியும் தமிழுக்கு வளஞ்சேர்த்த அந்த மாமனிதரின் நினைவாக இக் கடிதம் நண்பர் சிங்காரத்திற்கு நன்றி.

# இன்று இறுதிப் போட்டி

(விளையாட்டுத்துறை நிருபர்)

குருநகர் புனித சூசையப்பர் விளையாட்டுக்கழகம் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் நடாத்தும், மண்டைதீவில் அமரத்துவம் அடைந்த 31 மீனவர்களின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட ''ஏ' பிரிவின் அரை இறுதி ஆட்டத்தில், நாவாந்துறை சென் மேரிஸ் அணி கொக்குவில் பொற்பதி அணியை 'ரை- பிறேகர்' பெனல்டி உதைகளில் 3-2 கோல்களால் வெற்றிபெற்றது

இறுதி ஆட்டம் இன்று குருநகர் விளையாட்டு மைதானத்தில் பி.ப 4 மணிக்கு நடைபெறும்

இப்போட்டியில் சென்ற வருட சம்பியன்களான, யாழ் முஸ்லிம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென் மேரிஸ் அணி மோதவுள்ளது.

## முறைசாரா கல்வித்திட்டத்தில்

# மேலும் ஒருதொகை மாணவர் உடனடியாக சேர்க்கப்படுவர்

முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் சில குறிப்பிட்ட பயிற்சிநெறிகளில் தொழிற் கல்வி பயில்வதற்கு மேலும் ஒருதொகை மாணவர்கள் உடனடியாக சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

சில குறிப்பிட்ட பயிற்சி நிலையங்களில், குறிப்பிட்ட பயிற்சி நெறிகளுக்கு உள்ள வெற்றிடங்களுக்கு ஏற்ப இதற்கான பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்

பொதுவாக ஆங்கில தட்டெழுத்து, வீட்டு மின் இணைப்பு, மோட்டார் பொறித்துறை, மின் உபகரணங்கள் திருத்துதல். விவசாய விஞ்ஞானம், மேசன் தொழில், தொலைக்காட்சி பெட்டி திருத்துதல், மின் ஒட்டுவேலை, புத்தகங் கட்டுதல், உழவு இயந்திரம் திருத்துதல், வாகன மின் இணைப்பு, தமிழ் தட்டெழுத்து, வானொலி பேணல் ஆகிய துறைகளில் பல பயிற்சி நிலையங்களில் வெற்றிடங்கள் உள்ளன.

பயிற்சிபெற விரும்புவோர் இம்மாதம் மூன்றும் வாரத்துக்கிடையில் விண்ணப்பப்பத்திரம், சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் யாழ். கல்வித்திணைக்களத்திலுள்ள முறைசாராக்கல்வி பிரிவுடன் நேரில் தொடர்புகொள்ளுமாறு தொழில் நுட்பக்கல்வியதிகாரி திரு ச. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

# கேள்வி அறிவித்தல்

## பிரதேசக் கல்வித் திணைக்களம், நல்லூர், யாழ்ப்பாணம்

### ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்விப் புனருத்தாரணத் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் கட்டிட வேலைகள்

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1989-ம் ஆண்டு யூன் மாதம் 27-ம் திகதி (27. 06. 1989) முற்பகல் 10. 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரே உள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு, கட்டிடவேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1989-ம் ஆண்டு யூன் மாதம் 23-ம் திகதி (23. 06. 1989) பிற்பகல் 2. 00 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விப் பணமாக (ரூபா. 50) ரூபா ஐம்பதும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக (ரூபா. 250/-) ரூபா இருநூற்றி ஐம்பதும் செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும. கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1989-ம் ஆண்டு யூன் மாதம் 27-ம் திகதி (27. 06. 1989) பிற்பகல் 2. 00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும் தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவு இரத்துச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைந்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணையின்படியும் ஒப்பந்தப் பிரமாணங்களின்படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் கட்டிட வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

செல்வி தி. பெரியதம்பி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
09. 06. 1989.

| | பாடசாலையின் பெயர் | வேலை விபரணம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1. | யா/அருணோதயாக் கல்லூரி அளவெட்டி | இருமாடிக் கட்டிடம் 68' 9''/25'0'' | 650, 000. 00 |
| 2. | யா/அருணோதயாக் கல்லூரி அளவெட்டி | இருமாடிக் கட்டிடம் 137' 6''/25' | 1, 150, 000. 00 |
| 3. | யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை பருத்தித்துறை | மூன்று மாடிக் கட்டிடம் 90'/ 25' விஞ்ஞான கூடம் | 1, 600, 000. 00 |
| 4. | யா/தொண்டமானாறு வீரகத்தி ம. வி. | பெருந்திருத்த வேலை 50' /25' மாடிக் கட்டிடம் | 150, 000. 00 |
| 5. | யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை | மூன்று மாடிக் கட்டிடம் 90' / 25' | 1, 600, 000. 00 |
| 6. | யா/வல்வை சிவகுரு வித்தி. வல்வெட்டித்துறை | இருமாடிக் கட்டிடம் 48' 9'' / 25' | 350, 000. 00 |
| 7. | யா/நெல்லியடி மெ. மி. த. க. பா., கரவெட்டி | இருமாடிக் கட்டிடம் 68' 9'' /25' | 550, 000. 00 |
| 8. | யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை பருத்தித்துறை | பெருந்திருத்த வேலை | 900, 000. 00 |
| 9. | யா/நெல்லியடி ம. ம. வி., கரவெட்டி | பெருந்திருத்த வேலை | 300, 000. 00 |
| 10. | யா/ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை | மூன்றுமாடிக் கட்டிடம் I 90' /25' | 1, 500, 000. 00 |
| 11. | யா/ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை | மூன்று மாடிக் கட்டிடம் II 90' /25' | 1, 500, 000 00 |

06122

சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
வீடியோ விகோன்ஸ்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள்
கோயிலுக்கும் இடையில்)
353 C, மணிக்கூட்டுவீதி

வார முரசொலி
VARAMURASOLI

For Quality Video Filming
VIDEO Vihons
353 C, Clock Tower Road,
★ Wellington Junction.

★ யாழ். போதனு வைத்தியசாலையில்

# தாதிகள் பற்றுக்குறை வைத்திய சேவை பாதிப்பு

யாழ் போதனு வைத்திய சாலையில் தாதிகளுக்கு ஏற்பட்டுள்ள பற்றுக் குறைவினுல் பொது மக்களுக்கான வைத்தியசேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது யாழ் போதனு வைத்தியசாலையில் மட்டும் நூறு தாதிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. இங்கு முன்னர் கடமை புரிந்தவர்களில் பலர் ஓய்வு பெற்றுள்ளதினுலும், மற்றையோர் ஏனைய வைத்திய சாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமையினுலுமே இந்த வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ். தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்று வெளியேறும் தாதிகளில் கணிசமானேர் வெளிமாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு நியமிக்கப்பட்டு வருவதினுல் இப்பற்றுக்குறை நிலை ஒரு தொடர் கதையாகவேயிருந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனுல் யாழ். போதனு வைத்தியசாலையில் பல வைத்திய சேவைகளை சீராக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் நோயாளர்களும் பாதிக்கப்பட்டுவருவதாகவும்சொல்லப்படுகின்றது.

## முதலாம் ஆண்டு அனுமதிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

அடுத்தவருடம் அரசாங்க பாடசாலைகளில் முதலாம் ஆண்டு வகுப்புக்களுக்கு புதிதாக மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் முப்பதாம் திகதிக்கு முன்னர் நிரந்தர வதிவிடத்திற்கு அண்மையிலுள்ள பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

தெரிவுக்கு அனுமதிப்பரீட்சைகள் எதுவும் இம்முறை நடாத்தப்பட மாட்டாது. பாடசாலைக்கு அருகில் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டுள்ளோருக்கு இந்த அனுமதியின் போது ஐம்பது சதவீதமான வெற்றிடங்கள் ஒதுக்கப்படும். பாடசாலை பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கு இருபத்திஐந்துசத வீதமும் மிகுதி அதேபாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் சகோதரர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

அமைதிப் படைவாபஸ் குறித்து

## தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டும்

இலங்கையில் இருந்து இந்திய அமைதிப்படை வாபஸ் பெறப்பட வேண்டும் தான் ஆனுல் தற்போதைய நிலையில் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்குரிய சகல அதிகாரங்களையும் நடைமுறைப்படுத்தும் வரை அமைதிப்படையினர் வெளியேறக் கூடாது என தமிழ் ஈழ விடுதலை இயக்க யாழ். மாவட்ட பொறுப்பாளர் செந்தோழன் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்டுள்ள பிளவுகளை முன்வைத்து அமைதிப்படையினரை வெளியேற்ற வழிவகுப்பதை தமிழ் முஸ்லிம் மக்கள் நன்கு உணர்ந்து எமது பிளவுகளைத் தீர்த்து ஒற்றுமையை நிலைநாட்டவேண்டும். நம் உரிமை நிலைநாட்டும்வரை அமைதிப்படை வாபஸ் பெற முடியாது என தமிழ், முஸ்லிம்களாகிய நாம் உறுதி செய்ய வேண்டும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாணவர்களின்...

முன்வைக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கை நிறைவேற்றப்படும்வரை பாதுகாப்பு உறுதி செய்யப்படும் வரை நாளை திங்கட்கிழமை முதல் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தனியார் கல்வி நிறுவனங்களைப் பகிஷ்கரிக்கக் கோரும் முயற்சியில் மாணவர் குழுக்கள் ஈடுபட்டுள்ளதாக தெரிய வருகிறது.

### இலக்கம்...

எங்கே வீதிகளில் இலக்கம் இல்லாத வாகனங்கள் ஒடுகின்றன. அவற்றில் ஆயுதம் தாங்கியவர்கள் செல்கின்றனர். இவற்றில் மாணவர்கள் கடத்தப்படுகின்றனர் என்முர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம். பி. டி. எம். ஜயரத்ன பேசுகையில் "துட்டகைமுனுவின் உணர்வுகளை அடக்க அவனது தந்தை அன்று முயன்றது போல் இப்போது பல்கலைக்கழக மாணவர்களின் உணர்வுகளை அரசு அடக்க முடிகிறது. நாட்டு விவகாரம் எப்படியும் அமையட்டும். இந்திய விவகாரமும் உனக்கு வேண்டாம், பி.எச்.டி படித்து விட்டு பிங்கான் கோப்பை கழுவு மகனே என அரசு உபதேசம் செய்கிறது," என்முர்.

### 5 புதிய...

உள்ள இலங்கை இராணுவத்தினரில் குறைப்புச் செய்து வடக்கு கிழக்கில் உள்ள கேந்திர நிலைகளில் அவர்களை கடமையில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

### தபாலில்...

பட்டிருந்தது.

இதுபோன்றே தினமும் இந்த அபகரிப்பு வடபகுதி மக்களிடம் இடம்பெற்றுவருகின்றதாம்.

### 'புதிசு' என்ற..

வழங்குவதற்கு சுகாதார அமைச்சு சிறுது காலத்திற்கு முன்னர் தீர்மானித்திருந்தது அந்த தீர்மானத்திற்கு அமைய இருபத்தியாறு இருக்கைகளைக் கொண்ட மினிபஸ் ஒன்று சில தினங்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து இங்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது

அந்த வாகனம் புதியதல்ல வென்பதுவும் அது காலியில் உள்ள வைத்தியசாலையொன்றில் ஏற்கனவே சேவையிலிருந்த ஒன்று என்பதுவும் தற்பொழுது இங்கு தெரியவந்துள்ளது. யாழ்ப்பாணத்திற்கென ஒதுக்கப்பட்ட புதிய வாகனத்தை வேறுபகுதிக்கு அனுப்புவதற்காகவே இந்த 'மோசடியை' கொழும்பிலுள்ள சில அதிகாரிகள் புரிந்துள்ளனராம்.

## பண்டத்தரிப்பில் கருத்தரங்கு

"தொழில்பார்க்கும் பெண்களும் அவர்கள் பிரச்சனைகளும் எதிர்பார்ப்புகளும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கொன்று பண்டத்தரிப்பு ஜசிந்தா மகா வித்தியாலயத்தில் இன்று காலை நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கை மகளிர் அபிவிருத்தி நிலையம் ஒழுங்கு செய்துள்ளது

### க. பொ. த. உயர்தா...

பாடங்களில் மொழி, கணிதம் உட்பட ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும்.

அத்துடன் அவற்றில் இரு பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அதில் ஒரு பாடம் க. பொ. த. உயர்தரவகுப்பில் குறித்த மாணவர் எடுக்கவுள்ள பாடமாகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

பழைய பாடத்திட்ட மாணவர்கள் உயர்தர வகுப்பில் அனுமதிபெறுவதற்கு முன்னைய நடைமுறைக்கேற்பவே பெறுபேறுகள் பெற்றிருத்தல் வேண்டும்.

### விரிவுரையாளர்...

பொழுது பயிற்சி பெற்றுவருகின்றனர். வெளிநாடுகளில் இருந்து விரிவுரையாளர்களை இங்கு தருவிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளும் வெற்றியளிக்கவில்லை.

இந்நிலையில் சில பகுதிநேர விரிவுரையாளர்களின் உதவியுடன் நிலைமையை சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் பயிற்சிப் பாடசாலை நிர்வாகிகளுக்கு ஏற்பட்டுள்ளதாம்.

தொண்டமான் இப்படி கூறுகிறுர்

## அமைதிப்படை வாபஸ் குறித்து புதிய ஒப்பந்தம் அவசியம்

இந்திய இராணுவத்தினரை வாபஸ்பெறுவது தொடர்பாக இலங்கையும் இந்தியாவும் மற்றொரு ஒப்பந்தம் செய்ய வேண்டும் என இராமிய தொழில் துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்திய படையினரை விலக வேண்டும் என ஜனுதிபதி இந்திய அரசிடம் கோரியிருப்பது தொடர்பாக தாம் அமைச்சர் என்ற முறையில் இதற்கு ஆதரவு தருவதாகவும் குறிப்பிட்டார்.

1989-90ஆம் கல்வி ஆண்டிற்கான

## பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்ப கால எல்லை நீடிப்பு

1989 – 90ஆம் கல்வி ஆண்டில் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ள மாணவர்கள் இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் இருபதாம் திகதிவரை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கமுடியும்.

இதற்குரிய விண்ணப்பப் படிவங்களை இம்மாதம் பத்தொன்பதாம் திகதி வரை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உல்லாசப் பயணிகளிடம் நகைகள் பணம் கொள்ளை

யால சரணுலயத்தில் உள்ள விடுதியில் தங்கியிருந்த பிரான்ஸ் தேச உல்லாசப் பயணிகளிடமிருந்து நகைகளும் வெளிநாட்டு கரன்சி நோட்டுகளும் கொள்ளையடிக்கப்பட்டன.

ஆறு ஆயுதம் தாங்கிய நபர்கள் நேற்று முன்தினம் இரவு இதனைச் செய்ததாக புகார் செய்யப்பட்டுள்ளது.

ஐ. நா. அகதிகள் தூதராலயம்

## நாடு திரும்பிய அகதிகளுக்கு வீடுகள் அமைக்க உதவி

ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் நாடு திரும்பிய அகதிகளுக்கென கிளிநொச்சி மாவட்டத்தில் முந்நூறு வீடுகளை அமைத்துக்கொடுக்கவுள்ளது.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையில் இந்த வீடுகளின் அமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. கிளிநொச்சி அரசாங்க செயலகம் அகதிகளாயிருந்து நாடுதிரும்பியவர்களில் வீடு பெறுவதற்கு தகுதியானவர்களை தெரிவு செய்யும்.

இதுதவிர விவசாய தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கென நாற்பது கிணறுகளை அமைத்துக் கொடுப்பதற்கும் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் முன்வந்துள்ளது.

இதேவேளை நாடுதிரும்பிய அகதிகளுக்கு வீடமைத்துக் கொடுக்கும் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தின் திட்டத்தின்கீழ் யாழ் மாவட்டத்தில் இதுவரை அறுநூறு வீடுகளுக்கான அமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## இரண்டாயிரம் முஸ்லிம் ஆசிரியர் புதிதாக தெரிவு

விரைவில் நியமிக்கப்படவுள்ள இருபத்தையாயிரம் பயிற்சி ஆசிரியர்களில் இரண்டாயிரம் முஸ்லிம்களும் சேர்க்கப்படுவார்கள். இத்துடன் முந்நூறு மௌலவி ஆசிரிய வெற்றிடங்களும் நிரப்பப்படவுள்ளது.

க. பொ. த. சாதாரண பரீட்சையில் பாளிமொழிக்குப் பதில் அரபுப்பாடத்தையும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது. கல்விகலாசார அமைச்சர் லொக்கு பண்டார இத்தகவல்களை வெளியிட்டுள்ளார்.

### சுட்டுக்கொலை...

திருத்தும் நிலையத்தில் பணியாற்றும் வீரபத்திரன் ஸ்ரீஸ்கந்தராஜா (வயது 36) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவரென இறந்தவரின் குடும்பத்தினரால் அடையாளம் காட்டப்பட்டது.

முதலாம் வருட நினைவஞ்சலி



அந்தோனிப்பிள்ளை
யோசப்
பிறப்பு: 16-3-1929 இறப்பு: 11-6-1988
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
குருநகர்.

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62 ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 11-06-89 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.